
June 2024

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு




VARSHA™
IDLI/DOSA BATTER
Let's eat the Best!
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
CRISPY DOSA • SOFT & FLUFFY IDLI
1Kg
100% Pure Vegetarian
Traditional taste that Lingers

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

**June 2024** சுவடி — 14
ஒலை — 4


## வணக்கம் பல

அதிகாரம் மிக்க பதவிக்கான காலம் இது! நாற்காலியில் அடுத்து யார் அமர்கிறார்கள் என்று தீர்மானிக்கும் நேரம்! பதவியில் அமர்வதை விடவும், நாட்டுக்கு செய்ய வேண்டிய சேவை முக்கியம் என்பதை அனைவரும் உணர வேண்டும்! நாற்காலி தருகின்ற பெருமையை விட அந்த நாற்காலிக்குப் பெருமை தருபவர்களாக இருக்க வேண்டும் என்பதே மக்களின் விருப்பம்! இங்கிலாந்தில் பிரதமர் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதன் மூலம் தனக்கு இருக்கும் சாதகமான வாய்ப்பைப் பயன்படுத்தி மீண்டும் அப்பதவியில் அமர நினைக்கிறார் தற்போதைய பிரதமர்.

இங்கிலாந்து, இந்தியா போன்ற பெரும் நாடுகள் என்று மட்டுமில்லை, இலங்கை போன்ற சிறிய நாடுகளில் கூட, அரசு பதவிகளில் அமர்ந்தவர்கள், மீண்டும் அப்பதவியின் மூலம் அதிகாரத்தையும், பலத்தையும் நிலைநிறுத்திக் கொள்ள என்னென்னமோ செய்து பார்க்கிறார்கள். அதைவிட, காலம் தங்களுக்கு வழங்கியிருக்கின்ற உன்னதமான தருணத்தை உணர்ந்து கொண்டு மக்கள் தொண்டே மகேசன் தொண்டென்று உணர்ந்து நடந்திடில், காலாகாலத்துக்கும் அவர்கள் புகழும் தொண்டும் வரலாற்றில் இடம் பிடித்திருக்கும். இதனை உணர்ந்திட வேண்டும் என்பதே அடித்தட்டு மக்களின் விருப்பம்!

உலகமெங்கும் மாறிவரும் இயற்கை சூழல், பருவநிலை மாறுதல்கள் யாவும் ஒன்றை மிக அழுத்தமாக உணர்த்துகிறது. இயற்கையின் சக்தியை மிஞ்சும் அளவுக்கு மனித சக்தி இன்னும் வளர்ந்து விடவில்லை என்பதை உணர்த்துகிறது. மனிதனும் அதை உணர்ந்து கொண்டு இயற்கைக்கு இயைந்த ஒரு இனிய வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டுமே தவிர, இயற்கையை மிஞ்சும் செயற்கையை உருவாக்கி, பேரழிவுக்கு வழிவகுத்து விடக்கூடாது என்பதை மனிதன் உணர்ந்திட வேண்டும். விஞ்ஞானத்தை விடவும் மெய்ஞானம் சிறந்தது என்பதையும், விஞ்ஞானத்தை ஆள்வதே மெய்ஞானம் என்பதையும் விளங்கிக் கொள்ளுதலே மனித வாழ்வின் உன்னதம்!

அவ்வகையில், கதை, கவிதை, கட்டுரை என நல்ல பல ஆக்கங்களோடு தமிழுக்கு தகைசால் இலக்கியப் பனுவல்களோடு வருகின்றது இம்மாத 'அய் தமிழ்.' வழமை போலவே நல்லாதரவு தந்து வரவேற்று வாசியுங்கள்! நேசியுங்கள்!

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

## உள்ளே...




சுணங்காத தேர்தல்

புலி வால்!

இயற்கை கோரம்

தமிழே தமிழே

தொட்டது துலங்குமா?

சேரமான் கனவு

தல வலம்

சிறுகதை

தமிழர் பெருமை

சிவகாமியின் சபதம்

தேனீ மகிமை!

மருத்துவ தமிழ்

நாவினால் வடு!



**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
*editor@ithamil.com*


*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

# சுணங்காத

### பிரிட்டனில் திடீர் பொதுத்தேர்தல்


### பிரதமர் சுனக் அதிரடி அறிவிப்பு

பிரிட்டன் பிரதமராக கன்சர்வேடிவ் கட்சியின் ரிஷி சுனாக் கடந்த 2022—ம் ஆண்டு முதல் பிரதமராக இருந்து வருகிறார். இவரது பதவி காலம் 2025 ஜனவரியில் நிறைவடைகிறது.

இந்நிலையில் அமைச்சரவை கூட்டம் கூடியது. இதில் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதையடுத்து ஜுலை 4 ஆம் தேதி பொதுத் தேர்தல் நடைபெற உள்ளதாக சந்திக்க தயாராக உள்ளோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

பிரிட்டன் நாட்டில் வரும் ஜுலை 4ம் தேதி பொதுத்தேர்தல் நடைபெறும் என்று அந்நாட்டு பிரதமர் ரிஷி சுனக் அறிவித்துள்ளார். கேபினட் அமைச்சரவை கூட்டத்திற்கு பிறகு நாட்டின் பொதுத்தேர்தலுக்கான அறிவிப்பினை அவர் வெளியிட்டிருக்கிறார்.

பிரிட்டன் நாட்டை பொறுத்தவரை அரசியலமைப்பு ரீதியாக 2025 ஜனவரிக்குள் அங்கு பொதுத் தேர்தலை நடத்த வேண்டும்




அதிகாரப்பூர்வமாக அறிவித்தார்.

இந்த அறிவிப்பு குறித்து எதிர்கட்சியான தொழிலாளர் கட்சி கூறியது, பிரதமர் எப்போது தேர்தலை அழைத்தாலும் நாங்கள் தேர்தலை , இது தொடர்பாக பிரதமர் சுனக் இது 2024 இன் பிற்பகுதியில் நடைபெறும் என்று பலமுறை கூறியிருந்தார்.

இந்நிலையில் பிரிட்டன் வெளியுறவு செயலர் டேவிட் கேமரூன் அல்பேனியா பயணத்திலிருந்த

# தேர்தல்



நிலையில், திடீரென உடனே நாடு திரும்புமாறு அழைக்கப்பட்டார். அப்போதே தேர்தல் குறித்துதான் என்று ஊடகங்களில் செய்திகள் கசிய ஆரம்பித்தது. இது ஒருபுறம் எனில் பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சர் கிராண்ட் ஷாப்ஸ் அமைச்சரவை கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக கிழக்கு ஐரோப்பாவிற்கான பயணத்தை திடீரென

தேதியை அறிவிப்பார் என்று எதிர்பார்ப்பதாக சுட்டிக்காட்டியிருந்தன.

இதனிடையே ஊடகங்கள் எதிர்பார்த்தபடியே பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக், அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பிறகு இங்கிலாந்தில் ஜூலை 4 ஆம் தேதி பொதுத் தேர்தல் நடைபெற உள்ளதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்தார்.




ஒத்திவைத்தார்.

இதையடுத்து பிரிட்டனில் உள்ள பிபிசி, ஐடிவி, ஸ்கை நியூஸ் மற்றும் தி கார்டியன் உள்ளிட்ட முக்கிய செய்தி நிறுவனங்கள், அமைச்சரவைக் கூட்டத்தைத் தொடர்ந்து அதிகாரப்பூர்வ டவுனிங் ஸ்ட்ரீட் அறிக்கையில் சுனக் தேர்தல்

44 வயதான ரிஷி சுனக், பிரதமராக முதல் முறையாக வாக்காளர்களை எதிர்கொள்ள போகின்ற தேர்தல் ஆகும். கடந்த அக்டோபர் 2022 இல் நடந்த வாக்கெடுப்புக்குப் பிறகு அவர் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவராக நியமிக்கப்பட்டார். அதன்பின்னர் பிரதமரானார்.

வரும் ஜூலையில் நடைபெற்ற பிரிட்டன் தேர்தல் என்பது, 2016 ஆம் ஆண்டு பிரெக்சிட் வாக்கெடுப்புக்குப் பின்னர் நடைபெறவுள்ள மூன்றாவது பொதுத் தேர்தலாகும்.

தற்போது பிரிட்டனை ஆளும் கன்சர்வேடிவ் கட்சி 14 ஆண்டுகால ஆட்சிக்குப் பிறகு எதிர்க்கட்சியான தொழிற்கட்சியிடம் தோல்வியடையும் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுவதாக தேர்தலுக்கு முந்தைய கருத்துக்கணிப்புகள் சொல்கின்றன. இதனிடையே பிரிட்டனில் தொழிலாளர் கட்சியும் என்று பல தரப்பினர் மத்தியில் எதிர்பார்ப்பு இருந்தது. அதன்படி அக்டோபர் அல்லது நவம்பர் மாதங்களில் தேர்தல் அறிவிக்கப் பட்டிருந்தால் கன்சர்வேடிவ் கட்சிக்கு எதிர்கட்சியான தொழிலாளர் கட்சியை வீழ்த்த கால அவகாசம் அதிகமாக இருந்திருக்கும் என்று அக்கட்சியினர் கருதினர். மேலும், பொருளாதாரக் கண்ணோட்டத்தை மேம்படுத்த பிரதமருக்கு அதிக வாய்ப்பைக் கொடுக்கும் என்று நம்பினர். ஆனால் இந்த எதிர்பார்ப்புகளை முறியடிக்கும்



தேர்தல் அறிவிப்புக்கு முன்பே தேர்தலுக்கு தயாராக இருப்பதாக கூறியிருந்தது.

பிரதமர் எப்போது தேர்தலை அழைத்தாலும் நாங்கள் தேர்தல் பிரச்சாரத்திற்கு செல்ல தயாராக இருக்கிறோம். எங்களிடம் ஒரு முழுமையான ஒழுங்கமைக்கப்பட்ட பிரச்சாரக்குழு தயாராக உள்ளது, நாடு தற்போது பொதுத் தேர்தல் வேண்டும் என்று விரும்புகிறது என்று நாங்கள் நினைக்கிறோம்," என்று தொழிலாளர் கட்சியின் செய்தி தொடர்பாளர் கூறியிருந்தார்.

தனது டவுனிங் ஸ்ட்ரீட் அலுவலகத்திற்கு வெளியே நின்று, மழையில் நனைந்தபடி உரையாற்றிய பிரதமர் ரிஷி சுனக், "தேர்தலில் ஒவ்வொரு வாக்கிற்காகவும் கடுமையான போராடுவேன். கன்சர்வேடிவ் கட்சிக்காக ஐந்தாவது முறையாக பதவியேற்க வேண்டும்." என்றார்.

இலையுதிர் காலத்தில் தேர்தல் நடத்தப்படும் விதமாக ரிஷி சுனக் முன்னதாகவே பொது தேர்தல் தேதியை அறிவித்திருக்கிறார்.

பிரிட்டன் தேர்தலில் போட்டியிடும் தொழிலாளர் கட்சி தலைவர் சர் கியர் ஸ்டார்மர், "கன்சர்வேடிவ் கட்சியின் குழப்பங்களில் இருந்து விலகி இருங்கள். இது மாற்றத்திற்கான நேரம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

தேசியக் கருத்துக் கணிப்புகளில் தொழிற்கட்சிக்கு பெரிய அளவில் ஆதரவு கிடைத்துள்ளது. மேலும் அக்கட்சி முழுமையாக ஒழுங்கமைக்கப்பட்ட பிரசாரத்துக்கு தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

தேர்தல் தேதி குறித்த முடிவுகள் நிர்ப்பந்தத்தின் பேரில் எடுக்கப்பட்டதாக இருக்கலாம். மேலும் ரிஷி சுனக்கிடம் சீக்கிரமாக தேர்தல் அறிவிக்குமாறு தூண்டுபவர்களும் உள்ளனர். அவர்களில் துணைப் பிரதமர் ஆலிவர் டவுடனும் ஒருவர்.

# VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

**Idli / Dosa Wet Mix** • இட்லி / தோசை மாவு

ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്

CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI






100% Pure Vegetarian

ઈડલી ઢોસા નું ખીરું

इडली/ दोसा आटा




முன்கூட்டியே, கோடை காலத்தில் தேர்தல் அறிவிக்கும் வாதத்தை முன் வைத்தவர்கள், "கட்சி செயல்பாடுகள் பெரிதாக முன்னேறாமல் போகலாம். வாக்காளர்கள் விருப்பத்திற்கு ஏற்ப விரைவாக தேர்தல் அறிவிக்காவிட்டால், கன்சர்வேடிவ் கட்சியின் தோல்விக்கு வழிவகுக்கும். எனவே அவர்கள் விருப்பத்தின்படி விரைவில் தேர்தல் அறிவிக்க வேண்டும். இப்போதே நடத்துங்கள் அல்லது நிலைமை மோசமாகிவிடும்," என்றனர்.

பணவீக்கத்தைச் சமாளித்தது தேர்தலில் பிரதிபலிக்குமா?

பிரதமர் தனது நோக்கங்களில் சிலவற்றையாவது நிறைவேற்றுவதாகச் சுட்டிக்காட்டலாம், அல்லது விரைவில் நிறைவேறும் நம்பிக்கையைக் கொடுக்கலாம். இன்றைய பணவீக்க நிலை சீரடைந்திருப்பது இந்த அரசாங்கத்தின் வெற்றி எனக் கூறப்பட முடியும்.

நிச்சயமாக, பணவீக்கம் குறைந்தது முழுமையாக அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் மட்டும் நடக்கவில்லை. ஆனால் பணவீக்கம் வானளவு உயரும் போது அரசாங்கங்கள் குற்றம் சாட்டப் படுகின்றன, எனவே அது வீழ்ச்சியடையும் போது அரசாங்கம் சில கடன்களை தள்ளுபடி செய்வார்கள் என்று மக்கள் எதிர்பார்ப்பது நியாயமானது. நாட்டின் பொருளாதாரம் கொஞ்சம் பிரகாசமாகத் தோன்றுகிறது.

இதனிடையே புகலிடம் கோரும் புலம்பெயர்ந்தோரை ருவாண்டாவுக்கு அனுப்பும் திட்டமும் கிடப்பில் உள்ளது. இதுவரை செயல்படுத்தப்படவில்லை. ஒருவேளை தேர்தல் பிரசாரத்தின் போது கூட விமானங்கள் வரலாம் என்று தோன்றுகிறது. எது எப்படியாயினும், இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் தேர்தல் சமயத்தில் பிரதமருக்கு பின்னடைவை ஏற்படுத்தும்.

தேர்தல் பிரசாரம் துவங்கியுள்ளது.

கன்சர்வேடிவ் கட்சியினர் மக்களிடத்தில் மீண்டும் மீண்டும் ஒரே விஷயத்தை தான் கூறுவார்கள்: "நீங்கள் யாருக்கு வாக்களிக்கப் போகிறீர்கள், உங்கள் விருப்பம் என்ன என்பதில் கவனமாக இருங்கள்". அதே சமயம் தொழிலாளர் கட்சியினர், "இது மாற்றத்திற்கான நேரம்" என்று கூறுவார்கள்.


என்ன நடந்தாலும் விளைவு ஏதோ

# கருத்துப் ப(ா)டம்

நன்றி: தினமலர்





# சொல்றாங்க... சொல்றாங்க...



"கேன் திரைப்பட விருதைப் பெற்றதை நம்பவே முடியவில்லை, என்னை நானே கிள்ளிப் பார்த்துக் கொண்டேன்!"

**பாயல் கபாடியா.**

(நல்லவேளை! விருது உங்க கையிலே இருக்கு! உற்சாகத்தில் பக்கத்திலே நிற்கும் ஆளைக் கிள்ளியிருந்தா நிலைமை வேற மாதிரி ஆகியிருக்கும்!)



"கொல்கத்தா அணி பிராமதமாக பந்து வீசினர். எங்களை சுத்தமாக தோற்கடித்துவிட்டார்கள். அவர்கள் எங்களுக்கு இடமே கொடுக்கவில்லை."

**பேட் கம்மின்ஸ்**

(கோப்பையை கைவிட்டாலும், வார்த்தையை கைவிடாமல் திறந்த மனதோடு பேசும் இந்தப் பண்புதான் கோப்பையை விடப் பெரிது!)



"காந்தியும், அம்பேத்கரும் விவாதிப்பதைப் பார்க்க ஆசைப்படுகிறேன்!"

**ஜான்வி கபூர்**

(இதென்ன பெரிய விஷயம்? உடனே படத்துக்குப் பூஜை போடுங்க!...)



நம் சாதனைகளை சமநிலை செய்ய இன்னொருவர் இருக்கிறார். ஆனால் நம் சரித்திரத்தை எழுத நம்மால் மட்டுமே முடியும்!"

**எம்.எஸ்.தோனி**

('தலைவன்' மட்டுமே சொல்லக் கூடிய தனித்துவமான வார்த்தைகள்!

# புலி

## பாலத்தீனத்தை தனிநாடாக அங்கீகரித்த ஸ்பெயின், அயர்லாந்து, நார்வே – இஸ்ரேலுக்கு அழுத்தமா?

ஸ்பெயின், அயர்லாந்து, நார்வே ஆகிய நாடுகள் பாலத்தீனத்தை ஒரு நாடாக அங்கீகரித்து அறிவிப்பு வெளியிட்டுள்ளன. மத்திய கிழக்கில் நடந்து வரும் போரை நிறுத்துவதற்கான அரசியல் தீர்வு காணும் முயற்சியாக இதைக் கருதுவதாகவும் அவை தெரிவித்துள்ளன.

இந்நாடுகள் ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம் இதர ஐரோப்பிய நாடுகளும் இதே செயலைப் பின்பற்றி ஒருங்கிணைவார்கள் என்றும், அதன் வழியாக காஸாவில் போர்நிறுத்தம் மற்றும் ஹமாஸ் சிறைபிடித்து வைத்துள்ள பணயக் கைதிகளை விடுவிக்கவும் இது உதவும் என்றும் அந்நாடுகள் நம்புகின்றன.



இம்மூன்று நாடுகளின் முடிவு இஸ்ரேலின் கோபத்தைத் தூண்டியுள்ள நிலையில், இவை பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதைத் தொடர்ந்து ஸ்பெயின், அயர்லாந்து மற்றும் நார்வே நாடுகளுக்கான தனது தூதர்களையும் திரும்ப பெற்றுக் கொண்டது இஸ்ரேல் அரசு. அதோடு இந்த மூன்று நாடுகளைச் சேர்ந்த இஸ்ரேலுக்கான தூதர்களிடமும் தனது கண்டனங்களைத் தெரிவித்துக் கொண்டது மட்டுமின்றி, அவர்களை அழைத்து ஊடகங்கள் முன்னிலையில் அக்டோபர் 7 தாக்குதலின் சிசிடிவி காணொளியை போட்டுக் காட்டியுள்ளது இஸ்ரேல்.

ஏற்கெனவே இரண்டு சர்வதேச நீதிமன்றங்கள் தெற்கு காஸாவில் இஸ்ரேலிய பாதுகாப்புப் படையின் தாக்குதல்களை நிறுத்த உத்தரவிட்டுள்ளது மற்றும் பெஞ்சமின் நெதன்யாகு மீது போர்க்குற்றங்கள் தொடர்பாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில், மூன்று நாடுகள் பாலத்தீனத்தை அங்கிகரிப்பது இஸ்ரேலுக்கு கூடுதல் ராஜதந்திர அழுத்தத்தை ஏற்படுத்தும். மேற்குலக நாடுகளும்கூட ஆக்கிரமிக்கப்பட்ட பாலத்தீனப் பகுதிகளில் குடியேறியுள்ள இஸ்ரேலியர்கள் மீது பல்வேறு தடைகளை விதித்துள்ளன.

ராஜ்ஜிய ரீதியாக ஒரு நாடு மற்றொரு நாட்டை அங்கீகரிக்கும் செயல்முறையானது நாட்டுக்கு நாடு வேறுபடும். ஆனால் வழக்கமாக பாலத்தீனத்தில் அதன் அங்கீகரிக்கப்பட்ட அரசு அமைந்துள்ள ரமல்லாவில், பாலத்தீனத்தை அங்கிகரிக்கும் நாட்டின் பிரதிநிதிகள் கடிதம் அல்லது குறிப்பிட்ட ஆவணங்களைப் பரிமாறிக் கொள்வர்.

அதன் பின்னர் மேற்கு கரை அல்லது கிழக்கு ஜெருசலேமில் செயல்பட்டு வரும் அந்நாடுகளின் அலுவலகங்கள், தூதரகங்களாக மேம்படுத்தப்படும். அதன் அதிகாரிகள் தூதர்களாக நியமிக்கப்படுவார்கள். 1967 போருக்கு முன் இஸ்ரேல் மற்றும் பாலத்தீனத்திற்கு ஜெருசலேமை

# வால்!

ஜேம்ஸ் லாண்டேல்

தலைநகராகக் கொண்டு அறிவிக்கப்பட்ட எல்லைகளின் அடிப்படையில், பாலத்தீனத்தை அங்கீகரிப்பதாக இந்த மூன்று நாடுகளும் தெரிவித்துள்ளன.

அயர்லாந்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாலத்தீனத்தை நாடாக அங்கீகரிப்பது தொடர்பாக நான்கு மணிநேர விவாதத்தில் ஈடுபட்டிருந்த வேளையில், நாடாளுமன்றத்தில் பாலத்தீன கொடி பறக்கவிடப்பட்டது.

அமைச்சரவை முறையான முடிவை எடுப்பதற்கு



முன்பே, அந்நாட்டு பிரதமர் சைமன் ஹாரிஸ், இதுவொரு ‘வரலாற்றுபூர்வமான மற்றும் முக்கியமான’ நடவடிக்கை என்று பேசினார்.

“இந்தப் போர் நிறுத்தத்தை ஊக்குவிப்பதற்காக இதர ஐரோப்பிய நாடுகள் தங்களிடம் உள்ள அனைத்து வாய்ப்புகளையும் பயன்படுத்த வேண்டிய தேவை இருப்பதால், இந்த வழியை அவர்களும் பின்பற்றுவார்கள். பாலத்தீனத்தை நாடாக அங்கீகரிப்பதற்கு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்த பிறகு பேசிய ஹாரிஸ், “பாலத்தீனர்களின் இந்த இருண்ட காலத்தில், அவர்களோடு அயர்லாந்து நிற்கிறது என்ற நம்பிக்கையை இந்த முடிவு வழங்கும் என்று நம்புகிறேன்” என்று அவர் கூறினார்.

“சுய நிர்ணயம், சுயாட்சி, பிராந்திய ஒருமைப்பாடு, பிராந்திய பாதுகாப்பு மற்றும் சர்வதேச சட்டத்தின் கீழ் பாலஸ்தீனத்தின் சொந்த பொறுப்புகளை அங்கீகரிப்பது உட்பட அரசிற்கான முழு உரிமைகளையும் பாலஸ்தீனம் கொண்டுள்ளது மற்றும் அதை நிரூபிக்க முடியும் என்பது எங்கள் பார்வையின் வெளிப்பாடாகும். இதேபோல் நார்வே பாலத்தீனத்தை அங்கீகரித்துள்ள நாள்,



ஃபிளமிங்கோ நடனம் மற்றும் இசையோடு கூடிய வீடியோ ஒன்றைத் தனது சமூக ஊடக பக்கங்களில் பகிர்ந்திருந்தார். மேலும், அதோடு "ஹமாஸ்: நன்றி ஸ்பெயின்" என்ற வார்த்தைகளையும் எழுதியிருந்தார்.

ஸ்பெயின் இந்த வீடியோவுக்கு, "அவதூறு மற்றும் கிளர்ச்சியைத் தூண்டுவது" என்று எதிர்வினையாற்றியது. மேலும், இஸ்ரேல் நார்வே மற்றும் அயர்லாந்து குறித்தும் இதே போன்ற வீடியோக்களை பகிர்ந்தது.

"நார்வே —பாலஸ்தீன உறவில் சிறப்பான ஒரு நாள்" என்று நார்வே வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்பன் பார்த் எய்ட் கூறினார்.

ஸ்பெயினில் பாலத்தீனத்தை அங்கீகரிப்பதற்கான நாடாளுமன்ற கூட்டத்திற்கு முன்பு பேசிய அந்நாட்டு பிரதமர் பெட்ரோ சான்செஸ், பாலத்தீனத்திற்கு அங்கீகாரம் வழங்குவது "வரலாற்று பூர்வமான நீதி வழங்கும் ஒரு விஷயம் மட்டுமல்ல", அதைத் தாண்டி நாம் அனைவரும் அமைதியை நிலைநாட்ட விரும்பினால், அதற்கான அடிப்படைத் தேவை என்று பேசியுள்ளார்.

அதேநேரம், இதன் மூலம் ஸ்பெயின் இஸ்ரேலை எதிர்க்கவில்லை என்றும், இருநாடு தீர்வை எதிர்க்கும் ஹமாஸை எதிர்ப்பதாகவும் வலியுறுத்தினார் அவர். இந்த மோதலின் மீது தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதே ஸ்பெயினின் இலக்கு என்பதையும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

இருப்பினும் ஸ்பெயின் மீதே இஸ்ரேல் கடும் கோபத்துடன் இருப்பது போலத் தெரிகிறது. இஸ்ரேலின் வெளியுறவுத்துறை அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ், அக்டோபர் 7 தாக்குதலின் படங்களோடு சேர்த்து

இந்த சர்ச்சை ஒரு கட்டத்தில் மேலும் ஆழமாக மாறியது. ஸ்பெயின் துணைப் பிரதமர் யோலண்டா டியாஸ், பாலத்தீனியர்களுக்கு "நதியிலிருந்து கடல் வரை சுதந்திரமாக இருக்க வேண்டும்" என்று பேச, இதை இஸ்ரேலிய யூதர்களுக்கு எதிரான அழைப்பு என்றும், இஸ்ரேலை அழிப்பதற்கான பகிரங்கமான அழைப்பு என்றும் இஸ்ரேலியர்கள் எடுத்துக் கொண்டனர்.

இதற்கு தனது எக்ஸ் பக்கத்தில் பதிலளித்திருந்த காட்ஸ், யோலண்டாவை ஹமாஸ் தளபதி முகமது சின்வார் மற்றும் இரானின் உச்ச தலைவர் அலி





கமேனியுடன் ஒப்பிட்டுப் பேசியுள்ளார். மேலும் பிரதமர் பெட்ரோ சான்செஸ் உடனடியாகத் தனது துணைப் பிரதமரை பதவி நீக்கம் செய்யவில்லையெனில், “இஸ்ரேலிய மக்களுக்கு எதிரான இனப்படுகொலை மற்றும் போர்க் குற்றத்திற்கான தூண்டுதலில் நீங்கள் பங்கேற்றதாக ஆகிவிடும்,” என்றும் கூறியிருந்தார்.

இவ்வாறு இந்த மூன்று நாடுகள் மீதும் எதிர்வினை புரிவதன் மூலம், பிற நாடுகள் இவர்களைப் பின்பற்றாமல் தடுக்க இஸ்ரேல் முயற்சி செய்வதாக தூதர்கள் கருதுகின்றனர்.

ஸ்லோவேனியா, மால்டா மற்றும் பெல்ஜியம் உள்ளிட்ட நாடுகளும் பாலத்தீனத்தை அங்கீகரிக்க உள்ளதாக சமீப காலத்தில் அறிகுறிகளைக் காட்டியுள்ளன. ஆனால், பெல்ஜியத்தில் தேர்தல் வருவதையொட்டி இந்தத் திட்டத்தை தள்ளி வைத்துள்ளதாகத் தெரிகிறது.

இதுகுறித்துப் பேசிய பெல்ஜியத்தின் பிரதமர் அலெக்சாண்டர் டி குரூ, பெரிய ஐரோப்பிய நாடுகள் பாலத்தீனத்தை அங்கீகரிக்க காத்திருப்பதாகக் கூறினார். மேலும், ‘அடையாளபூர்வமான செயல்பாடு எதற்கும் தீர்வாகாது,’ என்றும்

தெரிவித்தார். இதுவரை 139 நாடுகள் பாலத்தீனத்தை முறையாக அங்கீகரித்துள்ளன.

மே 10ஆம் தேதி நாடுகளுக்கு மட்டுமே வழங்கப்படும் ஐநா சபையின் முழு உறுப்பினர் அந்தஸ்திற்காக, பாலத்தீனத்தை ஆதரித்து மொத்தமுள்ள 193 உறுப்பு நாடுகளில் 143 நாடுகள் வாக்களித்தன.

தற்போது ஐநா சபையில் பாலத்தீனம் ஒரு சில மேம்படுத்தப்பட்ட உரிமைகளுடன் பார்வையாளர் அந்தஸ்தை பெற்றுள்ளது. இருப்பினும், அதனால் ஐநா சபையில் வாக்களிக்க முடியாது. பாலத்தீனத்தை அரபு லீக் மற்றும் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு உள்ளிட்ட பல சர்வதேச அமைப்புகளும் அங்கீகரித்துள்ளன.

ஐரோப்பாவில் உள்ள ஒரு சில சிறு நாடுகளும் பாலத்தீன அரசை ஏற்கெனவே அங்கீகரித்துள்ளன. அதில் முன்னாள் சோவியத்தை சேர்ந்த நாடுகளான ஹங்கேரி, போலந்து, ருமேனியா, செக்கியா, ஸ்லோவாக்கியா, பல்கேரியா ஆகிய நாடுகள் அடங்கும். இவை 1988ஆம் ஆண்டு நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்ட நாடுகள். இதுதவிர ஸ்வீடன் மற்றும் சைப்ரஸ் உள்ளிட்ட நாடுகளும் பாலத்தீன அரசை அங்கீகரித்துள்ளன.

ஆனால் பல ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள், மத்திய கிழக்கில் நீண்ட காலமாக நிலவி வரும் மோதலுக்கு வேண்டிய அரசியல் தீர்வின் ஒரு பகுதியாக மட்டுமே பாலத்தீன அரசை அங்கீகரிப்பதாகக் கூறுகின்றன.




## வேதங்கள் கற்பிக்கும் சமூக நீதி—ஜனநாயகம்

மதம் என்பதை உலக நாடுகள் அனைத்தும் கொண்டிருக்க, பாரத தேசமோ மதமற்றாக இருந்தது. எனில், இந்த தேசத்தாரின் நம்பிக்கை எதன் அடிப்படையிலானது? சமயம் என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. 'சமைத்தல்' என்றால் பக்குவப்படுத்தல் என்று பொருள். 'சமயம்' என்பது மனதைப் பக்குவப்படுத்துவது. வாழ்வைப் பக்குவப்படுத்துவது. சமயம் என்பது மனித நாகரிகத்தின் வெளிப்பாடு.

பண்பாட்டை தன்னுள் கொண்டவை.

இந்த உண்மையை முற்றாய் உணர்ந்த பாரத தேச ஞானியர் சமயம் என்பது தர்மம், வாழ்வதற்கான முறை என்று வகுத்துத் தந்திருந்தார்கள். ஓர் உயிர் எக்காலத்திலும் நாடுவது எதுவோ அதனைத் தருவதே தர்மம் என்ற அடிப்படையில் இந்த தர்மம் அமைந்திருந்தது. அது எக்காலத்திலும் மாறாதது. அதனால் இந்த தர்மத்தை சநாதன தர்மம் என்று அழைத்தார்கள்.

இந்தத் தத்துவத்தைப் புரிந்து கொள்ள இயலாத மேலை நாட்டினர் குழம்பினர். நாம் பின்பற்றும் தர்மத்தை 'ரிலிஜன்' (மதம்)



பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் உலகம் பலவிதமான மதங்களைக் கொண்டிருந்திருக்கிறது. பாபிலோனிய, எகிப்திய, அஸ்டெக், மாயான், ஹவாயிய மதங்கள் காணாமல் போயிருக்கின்றன. மதங்கள், வெறும் இறை நம்பிக்கை மட்டுமல்ல. அவை, அந்தந்தப் பிரதேசத்தின் கலாசாரத்தை

என்ற கோட்பாட்டுக்குள் அடைக்க முடியாது. அடைத்தாலும் அது அடங்காது. மதம் என்பது கோட்பாடுகளை, விதிமுறைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்ற அவர்களின் புரிதலோடு இந்த சமயத்தை, தர்மத்தை அணுகும் பொழுது இந்த தர்மம் பற்றிய அவர்களின் புரிதலும் சுருங்கியது. அவர்களின் புரிதலுக்கு ஏற்ப, இந்த தர்மத்தை




ஏற்றத்தாழ்வு கொண்ட மதம் என்பதாகப் பேசலாயினர். அவர்களின் நோக்கத்திற்கும் அதுவே பொருத்தமானதாக இருந்தது.

நிலவியல் அடிப்படையில் நம் தர்மத்திற்கு ‘ஹிந்து’ என்று பெயரும் வைத்துக் கொண்டனர். சநாதன தர்மத்தின் அடிப்படை ‘வசுதைவ குடும்பகம்’ அதாவது ‘உலகம் முழுவதும் ஒரே குடும்பம்’ என்ற நம்பிக்கை. இது உண்மையானால், ஏற்றத்தாழ்வு கொண்ட மதமாக எப்படிச் சொல்ல முடியும்?

வேதங்களின் அடிப்படையில் இந்த ஹிந்து மதம் அமைந்திருக்கிறது என்று இந்த தர்மத்தை விமர்சிப்போரும் ஒப்புக்கொள்கின்றனர். வேதம் என்ன சொல்கிறது? அது பேசும் தத்துவம் என்ன? அத்வைதம். அத்வைதம் என்பதே, ‘இரண்டாக இல்லாமல் ஒன்றாய் இருத்தல்’ என்பது. மனிதர்களுக்குள் சமத்துவம் பற்றிப் பிற மதங்கள் பேசும்பொழுது, இந்த தர்மமோ உயிர்கள் — உயிரற்றவை என அனைத்தையும் ஒன்றாகப் பார்க்கும் அறிவை நமக்குள் விதைக்கிறது.

கோதை ஜோதிலட்சுமி


தனிமனித வாழ்வில் தர்மம் என்பது கடமை, பொறுப்பு — இரண்டின் கூட்டுச் சேர்க்கை அல்லது இரண்டும் சேரும் புள்ளி. வேதங்கள், ஒவ்வொரு தனி மனிதனுக்குமான கடமைகள், பொறுப்புகள் என்னென்ன என்பதை சொல்கிறது. இதனை தனியே எடுத்து, தர்ம சாஸ்திரங்கள் என்று வகுத்து முன்னோர் தந்திருக்கின்றனர்.

அவரவர் தொழிலுக்கு ஏற்ப வாழ்வியலை ஒழுங்குபடுத்தும் வகையில் அன்றாட வாழ்க்கையின் நெறிகளை அமைத்துக் கொடுத்துள்ளது. இதிலேதான் ஏற்றத் தாழ்வு










இருப்பதாக, இந்த தர்மத்தை ஒழித்துவிட்டு தங்கள் மதத்தை நிலைநாட்டிக் கொள்ள விரும்புவோர் கற்பிக்கின்றனர்.

ஒரே உதாரணத்தைப் பார்க்கலாம். நிலத்தில் வியர்வை சிந்த உழைத்து ஒட்டுமொத்த சமூகத்திற்கும் உணவளிக்கும் விவசாயிக்கு அன்றாடத் தூய்மை நடைமுறைகள், ஆகாரக் கட்டுப்பாடுகள், ஆசாரம் என்று எந்தச் சுமையும் இல்லை. அவர்கள் சுதந்திரமாக இருக்கின்றனர். அதே நேரத்தில் உடல் உழைப்பு குறைவாக உள்ள ஒரு பிரிவினருக்கு சுத்தம் என்பதில் தொடங்கி ஆகாரம் வரை கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அவர்கள் இத்தகைய நியமங்களைக் கடைப்பிடித்தே தீர வேண்டும்.


மற்றொரு விதத்தில், சுகாதார நடைமுறைகள் என்பதிலும் சுகாதாரத்தைப் பேணுவதில் உழைக்கும் மக்களுக்கு எவ்வித அழுத்தமும் தரப்படவில்லை. அந்தப் பணிகள் உழைப்புக் குறைந்த மக்களுக்கே தரப்பட்டுள்ளன. உழைக்கும் மக்களின் சுகாதாரத்திற்கும் சேர்த்தே இவர்கள் பொறுப்பேற்க வேண்டிய முறை இருந்தது.

நீதி முறையிலும் கற்றறிந்த மக்கள் தவறு செய்யும்பொழுது அவர்களுக்கான தண்டனைகள் அதிகமாகவும் சாமானிய மக்களுக்கு தண்டனைகள் குறைவாகவும் விதிக்கப்பட்டிருக்கிறது.



சமூகநீதி என்ற சொல் இன்றைக்கு மிக அதிகமாகப் பேசப்படுகிறது. சமூகநீதி, சமமாகவும் சமத்துவத்தோடும் நடத்துவது என்று விளக்கம் தருகின்றனர். அதற்கு ஓர் உதாரணமும் தரப்படுகிறது. ஒரு மைதானத்திற்கு வெளியே இருக்கும் நபர்களுக்கு மைதானத்தில் நடக்கும் நிகழ்ச்சியைக் கவனிக்க நாற்காலிகள் தரப்படுகின்றன. அவை அனைவருக்கும் ஒரே உயரத்திலானதாக இருக்க முடியாது. உயரம் குறைந்த ஒரு மனிதருக்கும் உயரமான மனிதருக்கும் ஒரே அளவிலான நாற்காலிகள் பயனளிக்காது. உயரமான மனிதருக்கு குள்ளமான நாற்காலியும் உயரம் குறைந்த மனிதனுக்கு உயரமான நாற்காலியும் தந்தால் மட்டுமே மைதானத்தில் நடப்பதைப் பார்ப்பதற்கான அனுபவம் சமமாக இருக்கும்.

இங்கு அனைவரும் சமத்துவமாக நடத்தப்படாததுபோல் தோன்றலாம். ஆனால், இதுதான் சமபங்குக் கோட்பாடு என்கிறார்கள். இதைத்தான் சமூக நீதி என்று விளக்கம் தருகிறார்கள். இந்த வரையறையின் அடிப்படையிலும் வேதங்கள் சமூக நீதிக்கான பார்வையை ஒவ்வொரு இந்தியரின் மனதிலும் வேரூன்றச் செய்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம். ஏற்றத்தாழ்வு மிக்கது என்று விமர்சனம் செய்யும் அதே கருத்தே இங்கு சமூக நீதி என்பதாகவும் இருக்கிறது.



ஒரு சமூகத்தில் அனைவருக்கும் ஒரே தர்மம் இங்கே எந்த நாளும் பின்பற்றப்பட்டதில்லை. அவரவர் கல்வி, தொழில் இவற்றின் அடிப்படையில் அவரவர்

வசதிக்கு ஏற்ப தர்மங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அதுவும் சமூக நீதியின்பாற்பட்டதே. இந்த சமூக நீதியானது, நமது மூதாதையர்களுக்கு ஒரு பாதுகாப்பான வாழ்க்கையைத் தந்திருக்கிறது. நாளை என்ன செய்வது? எதிர்காலம் என்னவாகும்? என்ற கேள்விகளுக்கு இடமில்லாமல் அனைவருக்கும் தொழில், வாய்ப்புகள் உறுதிப்படுத்தப்பட்டதாக இந்த தர்மம் உத்தரவாதமளித்துள்ளது.

அதனால்தான் இத்தனை படையெடுப்புகள், பொருளாதார, கலாசார சீர்கேடுகளை ஏற்படுத்திய அந்நிய ஆதிக்கம், கட்டாய மதமாற்றம் என எல்லாவற்றையும் தாண்டி இன்னும் உயிர்ப்போடு நிற்கிறது. உலகின் பல பகுதிகளில் இருந்தும் பலநூறு கோடிகளை சம்பாதித்த மனிதர்களும் கூட இந்த தர்மத்தை ஏற்று வாழ்கின்றனர். இந்திய ஆன்மிகம் தங்களைக் கடைத்தேற்றும் என்ற நம்பிக்கையோடு இந்தியாவை நோக்கி வந்தவண்ணம் இருக்கின்றனர்.

இந்த மண்ணின் மக்கள் இந்த தர்மத்தைப் பின்பற்றி வருகின்றனர். ஏற்றத்தாழ்வு கற்பிக்கும் எந்த ஒரு சித்தாந்தமும் மனிதர்களை நிரந்தரமாகக் கட்டிவைக்க முடியாது என்பதை நமது அறிவிற் சிறந்த முன்னோர்கள் உணர்ந்திருந்த காரணத்தாலேயே சமூக நீதியைக் காக்கும் வகையில் வர்ண தர்மம், ஆஸ்ரம தர்மம் என்று ஏற்படுத்தி வைத்தனர்.

படிக்கும் மாணவனுக்கான தர்மம் வேறு, ஆசிரியரின் தர்மம் வேறு, வயது முதிர்ந்தவர்களின் தர்மம் வேறு, இளமைத் துடிப்போடு இல்லறத்தில் நுழைபவனுக்கான தர்மம் வேறு, உழைப்பவனுக்கான தேவைகள் வேறு, நிர்வாகம் செய்பவனுக்கான தேவைகளும் பொறுப்புகளும் வேறு என்று சமூகநீதியை நிலைப்படுத்தி இருந்தனர்.

இன்றைய சநாதனத்தைப் பின்பற்றும் ஒவ்வொருவருக்கும் இந்த சிந்தனையும் நம்பிக்கையும் ஆழமாக இருப்பதனால்தான் இந்த தர்மத்தை எத்தகைய அரசியலும் அழித்தொழிக்க முடியவில்லை. வாள்முனையாலோ, அதிகார பலத்தாலோ இந்த தர்மத்தை அறுத்தெறிய முடியவில்லை.





இன்றைய அரசியல் உலகில் அதிலும் நாடு முழுவதும் தேர்தலும் அதற்கான பிரசாரங்களும் நெருப்பாய் கனன்று கொண்டிருக்கும் இந்த நாளில் ஜனநாயகம் என்ற பெயரில் சித்தாந்தம், செயல்பாடு என்பதை எல்லாம் உதறித் தள்ளித் தாண்டிவிட்டு தனிமனிதத் தாக்குதல், ஜாதிய அரசியல், மத அரசியல் என்ற மூன்றை மட்டுமே கையிலெடுத்து வாதம் செய்து கொள்கின்றனர்.

உண்மையில், இந்த மூன்றுக்கும் அப்பாற்பட்டது இந்த தேசமும் அதன் உயிர்நாடியான கலாசாரமும். அரசியல்வாதிகள் தங்கள் ஆதாயத்திற்காக இவற்றைப்

பேசிக்கொண்டிருக்கலாம். இல்லாத இன வேற்றுமைகளைத் திணிக்க அறிவுஜீவிகள் என்ற பெயரில் முனையலாம். அதையெல்லாம் ஒரு வேடிக்கையே போல மக்கள் கடந்து போகிறார்கள். ஏனெனில், இதனினும் கொடிய அரசியலை இந்த தேசம் பார்த்திருக்கிறது. மீண்டு வந்திருக்கிறது. தன்னை ஸ்திரப்படுத்திக் கொண்டிருக்கிறது.

அடிமைப்பட்ட நாளிலும் ராம ராஜ்யத்திற்கான முனைப்பை, விழிப்புணர்வை ஒரு மகாத்மாவால் நாடு முழுவதும் ஏற்படுத்த முடிந்திருக்கிறது. மக்கள் மனங்களில் அதற்கான சிந்தனை எந்நாளும் இருந்தது, அது தூண்டப்பட்டது, தேசம் சுதந்திரம் பெற்றது என்பதெல்லாம் வரலாறு.

இன்றைக்கும் நம் மக்களை இந்த தர்மம்தான் வழிநடத்துகிறது. நன்முறையில் சம்பாதித்து இயன்ற தான தர்மத்தோடு இன்னொருவருக்குத் தீங்கு செய்யாமல் வாழ்வது என்ற தர்மத்தில் மக்கள் நிலைபெற்றிருக்கும் வரை ஜாதிய, மதப் பாகுபாடுகளை ஏற்படுத்தும் பேச்சுக்கள் அர்த்தமற்றவையாகும்.

‘எத்தனை கோடி இன்பம் வைத்தாய்
எங்கள் இறைவா இறைவா இறைவா!
சித்தினை அசித்துடன் இணைத்தாய் — அங்கு
சேரும் ஐம்பூதத்து வியனுலகம் அமைத்தாய்
அத்தனை உலகமும் வர்ணக் களஞ்சியமாகப்
பல பல நல்லழகுகள் சமைத்தாய்’ —என்று பாரதி பாடியதைப் போல இந்த மண்ணின் பல்வேறு மொழிகள், உடை உணவு என அத்தனையும் இந்த தேசத்திற்கு அழகு சேர்க்கும் வர்ணக்களஞ்சியம் என்பதை இந்தியன் புரிந்து வைத்திருக்கிறான்.

அதனால், இங்கே தேர்தல் பரப்புரைகள் அல்ல, வேதங்கள் தந்திருக்கும் தர்மமும் சமூக நீதியும் வெற்றியைத் தீர்மானிப்பவை


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix • இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा

# இயற்கை

## பப்புவா நியூ கினி தொடரும் நிலச்சரிவுகள்

ஆஸ்ரேலியா அருகேயுள்ள பப்புவா நியூ கினி நாட்டில் ஏற்பட்ட பெரிய நிலச்சரிவில் சுமார் 670 பேர் பூமிக்கு அடியில் புதைந்துவிட்டதாக ஐ.நா அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பப்புவா நியூ கினி நாட்டில் உள்ள குடியேற்றத்திற்கான சர்வதேச அமைப்பின் தலைவர் செர்ஹான் அக்டோஃப்ராக் கூறுகையில், தீவுகளின் வடக்கே எங்கா பிராந்தியத்தில் உள்ள மலைப்பகுதிகளில் இந்த பாதிக்கப்பட்ட இடங்கள் உள்ளன.

“நிலச்சரிவு இன்னும் நீடிப்பதால் மீட்புப் பணியாளர்கள் ஆபத்தில் இருக்கிறார்கள். தண்ணீர் இன்னும் ஓடிக் கொண்டிருக்கிறது. இது சம்பந்தப்பட்ட அனைவருக்கும் பெரிய ஆபத்தை உருவாக்குகிறது,” என்று அக்டோஃப்ராக் தெரிவித்தார்.

நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதியில் சுமார் 4,000 பேர் வசித்து வருகின்றனர்.




“நாட்டின் எங்கா மாகாணத்தில் ஏற்பட்ட நிலச்சரிவின் தாக்கம் முதலில் நினைத்ததைவிட இப்போது 150க்கும் மேற்பட்ட வீடுகள் மண்ணுக்குள் புதைந்துவிட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது” என்று அவர் கூறியுள்ளார்.

தென்மேற்கு பசிபிக்கில் உள்ள பப்புவா நியூ கினி ஆனால், நிவாரண முயற்சிகளுக்கு உதவும் மனிதாபிமான நிறுவனமான கேர் ஆஸ்திரேலியா, அண்டை பகுதிகளில் பழங்குடியின மோதல்களில் தப்பி வரும் மக்களும் அங்கு இருந்திருக்கக்கூடும் என்பதால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம். பேரழிவின் விளைவாகக் குறைந்தது 1,000 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

# கோரம்!

எஸ். சுவாமிநாதன்

கடந்த மே 24—ல், உள்ளூர் நேரப்படி 03:00 மணியளவில் (இந்திய நேரப்படி நள்ளிரவு 12.30 மணிக்கு) மக்கள் தூங்கிக் கொண்டிருந்தபோது நிலச்சரிவு ஏற்பட்டது. பாதிக்கப்பட்டவர்களை மீட்பதற்கு அனைத்து வழிகளையும் மீட்புப் பணியாளர்கள் பயன்படுத்தப் படுகின்றனர்.

“மண்ணுக்கு அடியில் புதைந்த உடல்களை மீட்பதற்கு குச்சிகள், மண்வெட்டிகள், பெரிய விவசாய முள்கரண்டிகள் எனக் கிடைக்கும் அனைத்தையும் அவர்கள் பயன்படுத்துகின்றனர்.

“இந்த நிலச்சரிவில் எவ்வளவு பேர் இருந்தார்கள் என்பது இன்னும் தெரியவில்லை, அதற்கு இன்னும் நேரமாகலாம்“ என்று கேர் ஆஸ்திரேலியா அமைப்பின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இரண்டு நாட்கள் நிலவரப்படி, ஐந்து பேரின் உடல்கள் மட்டுமே மீட்கப்பட்டுள்ளன. சில பகுதிகளில் நிலச்சரிவால் குவிந்துள்ள பெரும் பாறைகள், மரங்கள் மற்றும் மணல்கள் உள்ளிட்ட இடிபாடுகள் கிட்டத்தட்ட 8 மீட்டர் அளவுக்குக் குவிந்துள்ளன. எங்கா மாகாணத்தில் ஒரேயொரு நெடுஞ்சாலை மட்டுமே இருப்பதாகவும், அதிலும் இடிபாடுகள் சாலைகளுக்குக் குறுக்கே விழுந்துள்ளதால், மீட்புப் பணிகளைச் செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் கேர் ஆஸ்திரேலியா அமைப்பு கூறியுள்ளது.



ஏ.எஃப்.பி செய்தி முகமையின்படி, இடிபாடுகளை அகற்ற பெரிய இயந்திரங்கள் ஞாயிற்றுக்கிழமைக்குள் இங்கு வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பப்புவா நியூ கினி உடனான இந்தியாவின் உறவுகள்

கடந்த ஆண்டு ஜப்பானில் நடைபெற்ற ஜி7 உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோதி அங்கு சென்றபோது, பப்புவா நியூ




கினி நாடு செய்திகளில் முக்கியத்துவம் பெற்றது.

பப்புவா நியூ கினி பிரதமர் ஜேம்ஸ் மாரபே விமான நிலையத்தில் அவரை வரவேற்க வந்தார். செய்தி நிறுவனமான ராய்ட்டர்ஸின் அறிக்கைப்படி, பப்புவா நியூ கினியின் மக்கள் தொகை சுமார் 90 லட்சம்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் குறித்து வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், பப்புவா நியூ கினியில் சுமார் 3000 இந்தியர்கள் வசிப்பதாகக் கூறப்பட்டுள்ளது. (இது 2020 வரையிலான எண்ணிக்கை)

அவர்களில் பெரும்பாலோர் பட்டயக் கணக்காளர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மருத்துவர்கள். ஏப்ரல் 1996இல் இந்தியா தனது தூதரகத்தை பப்புவா நியூ கினி நாட்டில் திறந்தது. 10 ஆண்டுகளுக்குப் பிறகு, 2006இல், பப்புவா நியூ கினி நாடும் இந்தியாவில் தனது தூதரகத்தைத் தொடங்கியது.

கடந்த 2016ஆம் ஆண்டில், பப்புவா நியூ கினிக்கு சென்ற முதல் இந்திய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி ஆவார். உலகம் முழுவதும் கொரோனா பரவல் உச்சத்தில் இருந்தபோது, பெரிய தடுப்பூசி உற்பத்தி நாடுகள் அதன் ஏற்றுமதியைத் தடை செய்தபோதும், இந்தியா பப்புவா நியூ கினிக்கு ஒரு லட்சத்து 31 ஆயிரம் டோஸ் கொரோனா தடுப்பூசிகளை வழங்கியது.

பப்புவா நியூ கினி தீவுகள்

எரிமலைகள், பூகம்பங்கள் மற்றும் புயல்களால் அடிக்கடி பாதிக்கப்படும் ஒரு நாடுதான் பப்புவா நியூ கினி.

உலக வங்கியின் கூற்றுப்படி, உலகின் மொழியியல் ரீதியாக வேறுபட்ட நாடுகளில் ஒன்றாக இது கருதப்படுகிறது. இங்கு 800க்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன. பப்புவா நியூ கினியின் மக்கள்தொகையில் சுமார் 80 சதவீதம் பேர் குறைவான அல்லது முற்றும் வசதிகள் இல்லாத கிராமப்புறங்களில் வாழ்கின்றனர்.

வெளியுலகத் தொடர்பே இல்லாத பல பழங்குடியினர் இங்குள்ள தொலைதூர மலைப் பகுதிகளில் வாழ்கின்றனர். இம்மக்கள் விவசாயம் மூலம் தங்கள் வாழ்க்கையை நடத்துகின்றனர்.

கடந்த 1906ஆம் ஆண்டில், பப்புவா நியூ கினியின் கட்டுப்பாடு பிரிட்டனிடம் இருந்து ஆஸ்திரேலியாவின் கைகளுக்குச் சென்றது. 1975ஆம் ஆண்டில், ஆஸ்திரேலியாவிடம் இருந்து சுதந்திரம் பெற்றது இந்த நாடு.

ஜேம்ஸ் மொராபே, பப்புவா நியூ கினி நாட்டின் உச்ச தலைவராக உள்ளார்.


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡളി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा

# தொட்டது

## மிடாஸ்: தொட்டதெல்லாம் தங்கமாகும் ‘வரம்’ பெற்ற ராஜா

துருக்கி என்றாலே அதன் வரலாற்று சிறப்புமிக்க இடங்கள் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க தவறியதே இல்லை.

எபேசஸில் உள்ள செல்சஸ் நூலகத்தின் உயரமான நீள்வரிசைகள் முதல் நெம்ரூட் மலையில் உள்ள மகத்தான தலை சிலைகள் வரை அந்நாட்டில் எண்ணற்ற வரலாற்று சிறப்புமிக்க இடங்கள் உள்ளன.

இதில் சமீபத்தில் துருக்கியின் 20வது பாரம்பரிய இடமாக யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்ட பண்டைய நகரம் ஒன்று உள்ளது. எந்தவித ஆரவாரமும் இன்றி, தன்னுடைய முக்கியத்துவத்தை உணர்த்தும் நகரம் இது. கோர்டியஸ் என்ற இந்த இரும்புக் காலத்தைச் சேர்ந்த இந்த பண்டைய நகரம் 4500 ஆண்டுகள் பழமையானது. இது ஃபிரிஜியா ராஜ்ஜியத்திற்குட்பட்டது.

அங்காராவில் இருந்து தென்மேற்கே 90 கிலோமீட்டர் தொலைவில் வறண்ட காற்று வீசும் சமவெளியில் அமைந்துள்ள இந்நகரம், ஒரு காலத்தில் சக்தி வாய்ந்த நகரமாக இருந்ததற்கான அடையாளங்களை காட்டிலும், ஒரு கல்குவாரி அல்லது அழிந்துபோன எரிமலையின் பள்ளம் போல் காட்சியளிக்கிறது.

135,000 சதுர மீட்டர் அளவுள்ள கோட்டையின் புதையுண்ட எச்சங்கள், சுற்றியுள்ள நிலப்பரப்பில் இருந்து மெதுவாக மேலெழும்பும் மணல் பாதையுடன், பெரிய மேடு ஒன்றை சென்றடைகிறது. அதன் எஞ்சியுள்ள பண்டைய நகரத்தின் எச்சங்களான சிதைந்த சுவர்கள், கிடங்குகள் மற்றும் இதர தடயங்களை பார்க்க முடியும். மேலிருந்து பார்க்கும்போது அந்த நிலப்பரப்பு நெடுகிலும், சிறு விலங்குகளால் உருவாக்கப்பட்ட குழிகள் போன்று மணல் மேடுகள் நிறைந்து காணப்படுகின்றன.

அங்கிருந்த 10 மீட்டர் உயரமுள்ள பெரும் கல் சுவர்களால் எழுப்பப்பட்ட நினைவுச்சின்ன வாயில் மட்டுமே, இது ஒரு காலத்தில் இரும்பு காலத்தின் மிகப்பெரிய ராஜ்யங்களில் ஒன்றின் தலைநகராக இருந்திருக்க கூடியதற்கான ஆதாரமாக இருக்கிறது.

“பலரும் ஃபிரிஜியன்களைப் பற்றி கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள், ஆனால் கிமு 9 முதல் 7 ஆம் நூற்றாண்டு வரை தற்போதைய துருக்கியாக இருக்கும், மேற்கு ஆசிய பகுதிகளில் அவர்கள் ஆதிக்கம் செலுத்தினர்,” என்று 2007 ஆம் ஆண்டு முதல், கார்டியனில் நடைபெற்ற அகழாய்வுக்கு தலைமை தாங்கிய பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தின்



# துலங்குமா?

தொல்பொருள் பேராசிரியரான பிரையன் ரோஸ் கூறுகிறார்.

“கிழக்கு—மேற்கு வர்த்தக பாதைகளின் முக்கிய சந்திப்பில் கார்டியோ அமைந்துள்ளது: கிழக்கே அசீரியா, பாபிலோன் மற்றும் இட்டைடு பேரரசுகளும், மேற்கில் கிரீஸ் மற்றும் லிடியாவின் பேரரசுகளும் இருந்தன. இந்த புவிசார் அனுகூலத்தால் கிடைத்த பலன்களை ஃபிரிஜியர்கள் பயன்படுத்திக் கொண்டு வசதி படைத்தவர்களாகவும் மற்றும் அதிகாரம் மிக்கவர்களாகவும் உருவெடுக்க முடிந்தது.”

பெல்லா ஃபோல்க்

ஃபிரிஜியா என்ற பெயர் உங்களுக்குத் தெரியாமல் போனாலும் கூட, இந்த நகரத்தோடு தொடர்புடைய ஒருவர் நம்மில் பலருக்கும் பரிட்சயமானவராக இருக்கலாம். கார்டியாவை மிடாஸ் எனும் மன்னர் ஆண்டு வந்ததாக தொல்பொருள் ஆய்வாளர்கள் நம்புகின்றனர். இவரையே பலரும் ‘தி மேன் ஆஃப் கோல்டன் டச்” என்று அழைக்கின்றனர்.



உண்மை என்ன?

மிடாஸின் கதை ஒரு பாரம்பரிய நீதிக்கதையாகும். டியோனிசஸ் என்ற கடவுளுக்கு இந்த மன்னர் உதவி செய்ததாகவும், அதற்கு கைமாறாக கடவுள் மன்னருக்கு ஒரு வரம் வழங்கியதாகவும் இந்த கதை கூறுகிறது.

ஆனால், பேராசைப் பிடித்த அந்த மன்னர் பயனுள்ள எதையும் கேட்காமல், தான் தொட்டதெல்லாம் தங்கமாக மாற வேண்டும் என்ற வரத்தை கேட்டு வாங்கியுள்ளார். இதனால் அவர் உணவு உண்ணுவதற்கு முன்பே அதை தொட்டவுடன் தங்கமாக மாறியது. அவரது மகளை ஆசையாக கட்டியணைக்கும் போது அவரும் தங்க சிலையாக மாறி விட்டார். இதை பார்த்த மன்னர் உடனேயே தன்னுடைய தவறை உணர்ந்து விட்டார்.

இந்த கதையின் நீதி நாம் அனைவரும் அறிந்ததே: ‘நீங்கள் எதற்காக ஆசைப்படுகிறீர்கள் என்பதில் கவனமாக இருங்கள்.’

1979 ஆம் ஆண்டு முதல் கார்டியோ குறித்து படித்து

வரும் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் லின் ரோலர், “இந்த கதை உண்மை இல்லை” என்கிறார். “ஆனால் பல கதைகளும் வரலாற்று ரீதியாக துல்லியமான அடிப்படையை கொண்டுள்ளன. இருப்பினும் அவை பல நூற்றாண்டுகளாக மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டு வருவதால் அதன் உண்மை சிதைந்து போகிறது.” ஆனால் யார் இந்த மிடாஸ், “கோல்டன் டச்“ என்ற சிந்தனை எங்கிருந்து வந்தது?

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் புனைவுகளில் இருந்து உண்மையைப் பிரித்தெடுக்க என்ற இடத்தில் காணப்படுகிறது. பொதுவாக இது “மிடாஸ் நகரம்“ என்று அழைக்கப்படுகிறது. மலை உச்சியில் காணப்படும் இந்த இடம் அழகானதாக இருந்தாலும், இங்கு எரிமலை கூறுகள் வெளியேறுவதற்கான வாய்ப்புகள் இருப்பதால், மக்கள் அரிதாகவே வந்து செல்கின்றனர்.

பழங்கால குகைகள் மற்றும் கல்லறைகள் நிறைந்துள்ள இந்த இடத்தில் உள்ள பாறையாலான படிக்கட்டுகள், 3000 ஆண்டுகள் பழமையான கடும்பாறைகளில் செதுக்கப்பட்ட சுரங்கங்களுக்கு நம்மை அழைத்து செல்கின்றன. ஆனால் இங்குள்ள அனைத்து நினைவு சின்னங்களை



, முதலில் மிடாஸ் ராஜா ஒரு உண்மையான நபர் என்பதை நிரூபிக்க வேண்டியிருந்தது .இதைச் செய்வதற்கான எளிமையான வழி, பண்டைய நூல்களில் ஆதாரத்தை தேடுவதாகும்.

அப்படி “மிடாஸ் என்ற பெயருடைய ஒரு ஃபிரிஜியன் அரசர் குறித்து பல்வேறு பழங்கால ஆதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் அசீரிய அரசர் இரண்டாம் சர்கோனின் வரலாற்று தகவல்களும் அடங்கும்“ என்று கூறுகிறார் ரோலர்.

“கிமு 8 ஆம் நூற்றாண்டில் தங்கள் பிரதேசத்தை விரிவுபடுத்துவதற்கான முயற்சிகளில் அசீரியர்கள் ஈடுபட்டிருந்தனர். அப்போது மிடாஸை ஒரு சக்தி வாய்ந்த மன்னராகவும் முக்கியமான போட்டியாளராகவும் கருதினர்.”

மிடாஸ் குறித்த கூடுதல் ஆதாரங்கள், கார்டியோவிற்கு மேற்கே உள்ள யாசிலிகாயா விடவும், சுமார் 3,000 ஆண்டுகளுக்கு முன்பு கற்சுவரில் செதுக்கப்பட்டுள்ள 17 மீட்டர் உயரமுள்ள கோவிலின் முகப்பே அற்புதமானதாக கருதப்படுகிறது.

அதன் மேலே பண்டைய ஃபிரிஜியன் மொழியில் ஒரு கல்வெட்டு அமைக்கப்பட்டுள்ளது. அதில், “ஏட்ஸ் இராணுவத்தின் தலைவரும் ஆட்சியாளருமான மிடாஸுக்கு [இதை] அர்ப்பணித்துள்ளார்” என்று எழுதப்பட்டுள்ளது.

உள்ளூர் பிரபுவான அட்ஸு தனது கோவிலை மிடாஸுக்கு அர்ப்பணித்துள்ளார் என்பதே மிடாஸ் ஒரு சக்தி வாய்ந்த ராஜாவாக இருந்ததற்கு போதுமான ஆதாரமாகும்.“மிடாஸ் ஒரு சக்தி வாய்ந்த ராஜாவாக இருந்ததால், அவர் கார்டியோவில் எங்காவது புதைக்கப்பட்டிருக்கலாம்“ என்று கூறுகிறார் ரோஸ்.



“அவரது கல்லறையைக் கண்டறிவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கண்டுபிடிப்பாக இருக்கும். அதை நகரத்தை சூழ்ந்துள்ள மேடுகளில் தேட வேண்டும்“ என்று அவர் கூறுகிறார்.

கல்லறை மேடுகள்

இந்த இடத்தில் இருக்கும் 125 க்கும் மேற்பட்ட மேடுகள் கி.மு. 9 முதல் 6 ஆம் நூற்றாண்டு வரையிலானவை.

சமதளமான நிலப்பரப்பில் வேற்றுக்கிரகவாசிகளால் உருவாக்கப்பட்ட மேடுகளைப் போல தோற்றமளிக்கும் இந்தப் பிரமாண்டமான மணல்மேடுகள், எகிப்திய பிரமிடுகளைப் போலவே முக்கியமானவர்களின் கல்லறைகளைக் கொள்ளையர்களிடமிருந்து பாதுகாக்க கட்டப்பட்டவை.

இங்கிருக்கும் சிகரங்களிலேயே, பெரிய செங்குத்தான சிகரம் களைகள் மற்றும் மஞ்சள் புற்களால் நிரம்பியுள்ளது. இதன் உயரம் 53 மீட்டர் ஆகும். இது துருக்கியின் இரண்டாவது பெரிய மேடாக அறியப்படுகிறது.

இதை உருவாக்க 1,000 பணியாளர்கள் மற்றும் இரண்டு ஆண்டுகள் வரை எடுத்திருக்கலாம் என்று நிபுணர்கள் மதிப்பிடுகின்றனர்.

“முந்தைய தொல்பொருள் ஆய்வாளர்கள் இதை ‘மிடாஸ் மவுண்ட்’ என்று அழைத்தனர், காரணம் மிடாஸ் அதற்குள் தான் புதைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று அவர்கள் நம்பினர். ஆனால் அது உண்மையா என்று அவர்களுக்கே தெரியாது. அந்த மேட்டை தோண்டும்போது மிகவும் கவனமாக இருக்க வேண்டியிருந்தது, காரணம் அது ஒரு பெரிய மண்குவியல் மட்டுமே என்பதால், ஏதாவது சிறிய தவறு நடந்தாலும் ஒட்டுமொத்த மணல்மேடும் உங்கள் மீது சரிந்து விழுந்துவிடும்.” என்கிறார் ரோஸ்.

இதுபோல் 1957 ஆம் ஆண்டில், துருக்கிய நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்கள் குழுவுடன் இணைந்து பணிபுரிந்த நிபுணர்கள் குழு, அந்த மேட்டில் சுரங்கம் ஒன்றை தோண்டினர். உள்ளே, 3000 ஆண்டுகளாக காற்றுகூட புகாத அளவு மிகச்சரியாக பாதுகாக்கப்பட்ட, பைன் மற்றும் ஜூனிபர் மரக்கட்டைகளால் கட்டப்பட்ட ஒரு பெரிய புதைகுழியை அவர்கள் கண்டுபிடித்தனர்.

இன்றைய தேதியில், உலகின் மிகப் பழமையான இந்த மரக் கட்டுமானமான கல்லறையை அகழாய்வுக்காக தோண்டப்பட்ட அதே சுரங்கப்பாதையை பயன்படுத்தி ப் பார்வையாளர்கள் உள்ளே சென்று பார்க்க முடியும்.

மிகவும் உடையக்கூடிய அளவில் இருந்ததால், தற்போது உலோக கம்பங்கள் மூலம் முட்டுக்கொடுக்கப்பட்டு இது பாதுகாக்கப்படுகிறது. அதற்காக அது உங்களுக்கு ஆச்சரியத்தை தராது என்று அர்த்தம் அல்ல. அதன் கட்டமைப்பு கண்டிப்பாக உங்களுக்கு பிரமிப்பை தரும்.

குறிப்பாக அந்த கல்லறையில் 60 வயது மதிக்கத்தக்க நபரின் உடல் இருக்கிறது. உடலைச் சுற்றிலும் வெண்கல ஜாடிகள், அலங்கரிக்கப்பட்ட



அப்படியானால் அந்த கல்லறையில் இருக்கும் நபர் யார்?

அவரை அடக்கம் செய்திருந்த முறையே அவர் ஒரு ராஜா என்பதை நமக்கு தெளிவுபடுத்தினாலும், உண்மையில் அவர் யார்?

யார் இந்த மன்னர்?

அந்த கல்லறையில் இருப்பவரின் இறந்த தேதியின்படி, மிடாஸ் ஆட்சிக்கு வந்த ஆண்டில் தான் இந்த நபரும் இறந்துள்ளார். எனவே, அவர் மிடாஸின் தந்தை கார்டியாஸாக இருக்கலாம்.

மகனைப் போலவே, கார்டியாஸுும் புகழ் பெற்றவராக இருந்துள்ளார்.

கார்டியாஸுக்கு முந்தைய அரசர் வாரிசு இல்லாமல் இறந்தபோது, நகர மக்கள் ஆரக்கிளிடம் உதவி கேட்டதாகக் ஒரு கதை சொல்லப்படுகிறது. அப்போது, இந்த ஊருக்குள் அடுத்து யார் மாட்டு வண்டி ஓட்டிக்கொண்டு வருகிறார்களோ அவர்களே ராஜா என்று ஆரக்கிள் கூறியுள்ளார்.

அப்போது அங்கு வந்த கார்டியாஸ் என்ற விவசாயியையே மக்கள் ராஜாவாக



கிண்ணங்கள் மற்றும் குடங்கள், செதுக்கப்பட்ட மர சாமான்கள், தரமான துணிகள் மற்றும் ஒரு மன்னரின் அடக்கத்தின் போது படைக்கப்படும் விலையுயர்ந்த காணிக்கைகள் ஆகியவை இருந்தன.

ஆனால் அது மிடாஸ்தானா?

அதை கண்டுபிடிப்பதற்காக கோர்டியோ தொல்பொருள் ஆய்வாளர்கள் டென்ட்ரோக்ரோனாலஜி எனும் மரத்தின் வளையங்களை வைத்து அதன் காலத்தை கண்டறியும் முறையை பயன்படுத்தினர். அதில் தான் ஒரு சிக்கல் ஏற்பட்டது.

“அந்த மரத்தின் காலம் கிமு 740 என்று முடிவுகள் வந்தது. ஆனால் அசிரிய வரலாற்று பதிவுகளின்படி, மிடாஸ் அதிலிருந்து 31 ஆண்டுகளுக்குப் பிறகு கிமு 709 இல் உயிருடன் தான் இருந்தார். எனவே இந்த கல்லறை மிடாஸுக்கு சொந்தமானது அல்ல.” என்று ரோஸ் கூறினார்.



முடிசூட்டியுள்ளனர். அவரது நினைவாக அந்த ஊருக்கும் அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது. இதை கொண்டாடும் விதமாக அவரது வாகனம் கோவிலில் வைக்கப்பட்டு, அதில் ஒரு சிக்கலான முடிச்சு ஒன்றும் போடப்பட்டது. அதுதான் 'தி ஃபேமஸ் கார்டியன் நாட்' என்று அறியப்படுகிறது. கதையின்படி, இந்த முடிச்சை அவிழ்ப்பவரே அடுத்து ஆசியா முழுவதும் ஆட்சி செய்வார் என்று கூறப்படுகிறது.

பலரும் பல ஆண்டுகள் முயற்சித்தும் அதை அவிழ்க்கமுடியவில்லை. ஆனால் அந்த வாகனம் அல்லது முடிச்சு குறித்தான எந்த ஆதாரமும் இல்லை.

பல பண்டைய கிரேக்க வரலாற்றாசிரியர்கள் கிமு 333 இல் பாரசீக இராணுவத்தை தோற்கடிப்பதற்காக அலெக்சாண்டர் இங்கு வந்ததாகவும், அப்போது இந்த முடிச்சை சாதாரணமாக தனது வாளால் வெட்டியதாகவும் கூறுகின்றனர். எனவே, அப்படி ஒரு முடிச்சு உண்மையில் இருந்ததாக நம்புகிறார்கள். அதற்கு பின், ஆசியாவின் பெரும் பகுதிகளை கைப்பற்றி மன்னரின் வார்த்தைகளை உண்மையாக்கினார் அலெக்சாண்டர்.

ஆனால் "கோல்டன் டச்" என்பது என்ன? இந்த சிந்தனை எங்கிருந்து பிறந்தது?

ஆச்சரியப்படும் வகையில், கார்டியோவில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட 40,000 கலைப்பொருட்களில் பெரியளவு தங்கம் எதுவும் இல்லை. அவற்றில் சில நகைகள், சில தங்க நாணயங்கள் மற்றும் நேர்த்தியாக செதுக்கப்பட்ட ஒரு ஸ்பிங்க்ஸ் சிலை ஆகியவை கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அப்படி இந்த நகரத்தில் தங்கம் இருந்திருந்தால் இத்தனை ஆண்டுகளில் கொள்ளையடிக்கப்பட்டிருக்கலாம், அல்லது இன்னும் தோண்டப்படாத கல்லறை மேடுகளுக்குள் புதையுண்டிருக்கலாம். ஆனால் இந்த கட்டுக்கதை குறித்து தொல்பொருள் ஆய்வாளர்கள் வேறு கருத்து ஒன்றையும் கொண்டுள்ளனர்.

"இந்த கதையை வேறு ஒரு விஷயத்தோடு தொடர்புபடுத்தி உருவகமாக கூறியிருக்கலாம் என்று நாங்கள் நினைக்கிறோம். மிடாஸ் ஆட்சியின் கீழ், கார்டியோ நகரம் செல்வச் செழிப்பாகவும், சக்தி வாய்ந்த நகராகவும் உருவெடுத்தது. எனவே இந்த கதை அதன் அதீத வளர்ச்சியை உருவகப்படுத்தி உருவாக்கப்பட்டிருக்கலாம். ஒருவர் எதை தொட்டாலும் தங்கமாக மாறி விடும் என்று நாம் சொல்வது, அவர் எளிதில் அனைத்திலும் வெற்றி பெறுவதையோ, அல்லது செல்வம் சேர்ப்பதையோ குறிக்கத்தான். அப்படி ராஜா மிடாஸுக்கு அந்த வரம் கிடைத்ததாகத் தெரிகிறது". என்கிறார் ரோலர்.




# சேரமான் கனவு


## 47. கடல் நடுவே கடும்போர்!

**கொற்றவன்**

நள்ளிரவு நேரம்....

அமைதியில் ஆழ்ந்திருந்தது தெலோஸ் தீவு!

அதேநேரம் அத்தீவின் கடல்பகுதி குருதிக் குளியலுக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தது!



தொலைவில் நிலை கொண்டிருக்கும் நாற்பது கொள்ளையர் கலங்களை எதிர்த்து வெறும் எட்டு கலங்களைத் துணையாகக் கொண்டு நகர்ந்த அந்த பிரம்மாண்ட ஒற்றைக் கப்பலைச் செலுத்த உத்தரவிட்டான் வளவத்திரையன்.

“வளவா! அந்த நாற்பது கலங்களில் ஒன்றை மட்டும் தாக்காமல் விட்டு விடு! அவர்கள் தப்பிச் செல்ல உதவட்டும்!” என்றான் அவனருகில் நின்ற வில்லவன்.

“ஆகட்டும்! நானும் அதைதான் கூறலாமென்று நினைத்தேன். ஆனால்...”


“ஆனால் என்ன?...”

“அவர்களை விட்டு வைப்பது நச்சரவங்களை விட்டுவைத்தாற்போல் ஆகிவிடக் கூடாதே!”

“உண்மைதான்! மனிதர்களைத் தீண்டாதவரை அவற்றால் நமக்கு எந்தத் தொல்லையும் இல்லை! எங்காவது சென்று வாழட்டும். அவர்கள் திருந்துவதற்கு நாமும் ஒரு வாய்ப்பு வழங்கியது போலாகட்டும்!”

“அப்படி நடந்தால் மகிழ்ச்சியே! எதிரிகளுக்கும் இரங்கும் தங்களது கருணை உள்ளம் எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.” என்ற வளவத்திரையன், அந்தக் கொள்ளையர்களின் கலங்களை கடலரசி நெருங்குவதற்கு ஒரு நாழிகைக்கு மேலாகும் என்பதையும், அதற்குள் முதல் யாமம் தொடங்கி இருள் கவிழத் தொடங்கிவிடும் என்பதையும் உணர்ந்திருந்தான்.

ஒரு பெரும் போருக்குச் செல்வதற்கான எவ்வித



அறிகுறிகளும் காட்டாது அமைதியாக நகர்ந்தபடி இருந்தது கடலரசி. உடன் நகர்ந்த அந்த எட்டுக் கலங்களும் கூட அந்த அமைதியாக நகர்ந்தன. சேரநாட்டுக் கலங்கள் நான்கும், கிரேக்க கலங்கள் நான்கும் கடலரசியுடன், தாய்ப் பறவையை ஒட்டி நீந்தும் அன்னப்பறவைகள் போல இருபுறமும் பக்கவாட்டில் நகர்ந்தன.

முற்றாய் இருள் கவிழ்ந்த வேளை!...

நடுக்கடலில் யவனர்களின் நாற்பது நாவாய்களையும் கடலரசி நெருங்கியது.

அதேநேரம்...

தெலோஸ் தீவின் மீது திடீர் தாக்குதல் நிகழ்த்த ஆயத்தமான கொள்ளையர்கள், தங்களை நோக்கி வரும் ஆபத்தான நிலைமையை ஒருவாறு உணரத் தொடங்கி விட்டனர்.

அடுத்த சில நொடிகளில்...

எவ்வித முன்னறிவிப்புமின்றி நாற்பது கலங்களும், தேன்கூட்டில் இருந்து கிளம்பும் தேனீக்களாய் கடலரசி மீது எறிகணைகளை வீசத் தொடங்கின.

கடலரசி குழுவினர் இதைச் சற்றும் எதிர்பாத்திருக்கவில்லை! கொள்ளையரை நெருங்கிச் சென்று, அவர்களை எச்சரித்த பிறகு போரைத் தொடங்கலாம் என வில்லவனும் வளவத்திரையனும் போட்டிருந்த திட்டத்தைச் செயல்படுத்திட, கொள்ளையர்கள் வாய்ப்பே வழங்கவில்லை!

“வளவா! இருபுறமும் வரும் கப்பல்களைக் கடலரசிக்கு பின்னே வரும்படி உத்தரவிடு! கடலரசியின் வேகத்தைக் கூட்டி அவர்களை நோக்கிச் செலுத்து!” என வில்லவன் கட்டளை பிறப்பிக்கும்போதே, கப்பலின் வேகத்தைக் கூட்டிவிட்டிருந்த வளவத்திரையன், இருபுறமும் வரும் யவனக் கப்பல் தலைவர்களுக்கு, கொள்ளையர்களின் தீக்கணைகளுக்கு ஆளாகாமல் தங்கள் பின்னால் வரும்படியும், போரைத் தொடங்கும்படியும் சைகை செய்தான்.

திடீரென வேகமெடுத்த கடலரசியின் திட்டம் என்ன என்பதை சேரநாட்டுக் கலங்களும், கிரேக்கக் கலங்களும் ஒருவாறு ஊகித்துக் கொண்டு, போருக்கு ஆயத்தமானார்கள்.

கொள்ளையர் கப்பல்கள், கடலரசிமீது தொடர்தாக்குதலைத் தொடுத்த வண்ணமே இருக்க, அந்த நாற்பது கலங்களுக்கு நடுவே முன்னேறிய கடலரசி, ஊளையிடும் நரிக் கூட்டத்தின் நடுவே கம்பீரமாக நடந்து செல்லும் ஒற்றை யானையென நுழைந்தது.

ஈட்டிகளும் அம்புகளும் கடலரசியை நோக்கி ‘விர்விர்’ என சீறிப்பாய்ந்தன.

வளவத்திரையனோ, அரைவட்டவடிவில் நின்ற கொள்ளையர்களின் கப்பல்களுக்கு கடலரசியின் முகப்பில் இருந்த வேல் வளையம் நீரில் ஐந்தடி ஆழத்துக்கு இறக்கச் செய்தான்.

கருங்காலி மரத்தால் செய்யப்பட்ட பெரும் வேல் வளையம் எதிர்ப்படும் கப்பலைத் தள்ளி கவிழ்த்துவிடும் வல்லமை மிக்கது. அதையும் தாண்டி கடலரசி முன்னேறினால் எதிர்ப்படும் கலங்களைக் குத்திக் கிழித்து அழித்து கடலில் மூழ்கடித்துவிடும் நவீன உத்தியைக் கொண்டது.

கொள்ளையர்கள் தங்கள் நாவாய்களில் சரசரவென பாதிக்கு மேல் ஆட்டங்கண்டு கடலுக்குள் மூழ்கிக் கொண்டிருக்கும் காரணத்தை மிகவும் தாமதமாகவே உணர்ந்தார்கள்.

அதுவரை அப்படியொரு கட்டுமானத்தைக் கண்டிராத கடற்கொள்ளையர், அப்போதுதான் கடலரசியின் பலத்தையே உணரத் தொடங்கினர்.

இனியும் அங்கே தாக்குப் பிடித்தால் தங்கள் கப்பல்கள் அனைத்தையுமே கடலுக்குள் மூழ்கடித்து



விடும் இந்த ஒற்றைப் பிரம்மாண்டக் கப்பல் என்பதை அறிந்த கொள்ளையர்கள், இருக்கிற கப்பல்களைக் காப்பாற்றிக் கொண்டு ஓடிவிடுவதே நல்லது என நினைத்து கப்பல்களைத் திருப்பத் தொடங்கினர்.

கொள்ளையர்களின் தாக்குதலுக்கு கடலரசியுடன் வந்த கப்பல்களும் எதிர்த் தாக்குதலைத் தொடங்கின.

கடலரசி மேல்தளத்தில் இருந்தவாறே வில்லவனும் கொள்ளையர் கப்பல்கள் மீது அம்புமாரிப் பொழிந்தான்.

சற்றைக்கெல்லாம் கடலரசி முன்னால் நின்றிருந்த கொள்ளையர் கப்பல்களை நீருக்குள்ளாகவே குத்தீட்டி கொண்டு சேதப்படுத்தி கடல்நீர் புகச் செய்தான் வளவத் திரையன்.

மேற்புறத் தாக்குதலில் கவனம் காட்டிய கொள்ளையர்கள் திடீர் தாக்குதலில் ஈடுபட்டிருந்தாலும், கடலரசி போரைத் தொடங்கியபின்பு அத்தாக்குதலுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் திக்குமுக்காடினர்.

அவர்களின் எதிர்ப்பு அத்தனை வீரியமாக இல்லை என்பது வெகுவிரைவில் வெட்ட வெளிச்சமானது!

யவனக் கொள்ளையர்களின் கப்பல்கள் தனக்கு ஒரு பொருட்டே அல்ல என்பதுபோல் எதிர்ப்பட்ட கப்பல்களைக் கிழித்துக்கொண்டு முன்னேறிய கடலரசியின் மோதலுக்கு ஆட்பட்ட கப்பல்களில் இருந்தவர்கள், இப்படி ஒரு தாக்குதலை எதிர்பார்த்திருக்கவில்லை!

நீரில் மறைந்தபடி முன்னோக்கி நீண்டிருக்கும் அந்தக் கூர்வேல்கள் முகப்பில் இருக்கக் கூடிய வேள்கள் குத்தி கிழிக்க கடலரசிக்கு எதிர் பட்ட எல்லா கப்பல்களும் ஆட்டம் கண்டு ஓட்டை விழுந்து நீருக்குள் மூழ்கத் தொடங்கின.



கொள்ளையர்கள் பலரும் கடலில் விழுந்து நீந்தத் தொடங்கினார்கள். அவ்விதம் நீந்தியவர்களில் சிலர் உதவி கேட்டு கடலரசிக்கே வந்து அபயம் கேட்டார்கள். அவர்களைச் சேர வீரர்கள் சிறைப் பிடித்தனர். எஞ்சியிருக்கும் கப்பல்களில் இருந்த வீரர்கள் பலரும் அம்பு மழையைத் தாக்குப்பிடிக்க இயலாமல் கடலுக்குள் பாய்ந்தனர்.

ஒரே நேரத்தில் கப்பலுக்கு மேலாகவும் கீழாகவும் நிகழ்த்தப்பட்ட கடும் தாக்குதலைச் சமாளிக்க முடியாத கொள்ளையர்களில் பலர் மாண்டனர்! பலர் கடலுக்குள் பாய்ந்தனர்!

இனி ஒருவரும் தப்ப முடியாது என்ற நிலையை உருவாக்கும்படி, வில்லவன் வில்லிலிருந்து தீப்பந்தங்கள் பாய்ந்தன.

அடுத்த சில நொடிகளில் மூழ்கிய கப்பல்கள், போக எஞ்சிய கப்பல்கள் ஒவ்வொன்றாகத் தீப்பிடிக்கத் தொடங்கின.

உயிர் பிழைத்தவர்கள் தப்பிச் செல்ல உதவட்டும் என்ற எண்ணத்தில், சேரவீரர்கள் ஆரம்பத்திலிருந்தே எவ்வித சேதத்தையும் ஏற்படுத்தாமல் கொள்ளையர்களின் ஒரு கப்பலை விட்டு வைக்கவே, கடலில் விழுந்து தத்தளித்தவர்களும், எரியும் கப்பலிலிருந்து குதித்தவர்களும் அபயம் தேடி அந்தக் கப்பலை நோக்கி நீந்தினர்.

தோற்றோடுபவர்களை விரட்டிச் செல்லாமல், சேரநாட்டு கலங்கள் நான்கும் கிரேக்கக் கலங்கள் நான்கும் கடலரசியை நோக்கி அணிவகுக்கத் தொடங்கின.

விடிவதற்கு முன்பாகவே தொலோஸ் தீவு விழாக்கோலம் பூண்டு விட்டது!

தங்கள் தீவுக்கு பேராபத்தாக வந்த நாற்பது கொள்ளைக் கலங்களையும் அடியோடு அழித்துவிட்ட கடலரசியை வெற்றிக் கொண்டாட்டத்துடன் வரவேற்க வேண்டுமென தெலோஸ் மக்கள் துறைமுகம் நோக்கி அணிதிரளத் தொடங்கிவிட்டனர்.

வீதிதோறும் தெலோஸ் மன்னரையும், தியோதாராவையும், வில்லவனையும், வளவத்



திரையனையும் வாழ்த்தி பாடல்கள் பாடியபடி மக்கள் ஆனந்தக் கொண்டாட்டத்தில் இருந்தனர்.

இந்தக் காட்சிகளை எல்லாம் கண்டுகளித்தவாறே கடலரசி கரையை நெருங்கிக் கொண்டிருந்தது.

தொலோஸ் தீவின் சிங்க முகச் சிற்பங்களின் முன் நிற்கும் இசைக்குழுவினர் பாடல்களைப் பாடியாபடி பறையை அடிக்க, அது விண்ணதிரும் முழக்கமாக ஒலித்தது.

கடலரசி கரையை வந்தடைந்து நங்கூரமிட, உடன்வந்த சேர, கிரேக்கப் கப்பல்களும் கரைதொட்டு நின்றன.

அரண்மனை மாடங்களில் இருந்த பெண்டிர்கள் மலர் தூவி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

தீவின் அரசர் பாரிசும், அமைச்சரும், படைத்தளபதியும் எதிர்கொண்டு வந்து வில்லவனையும், வளவத்திரையனையும், பெரியவர் முதுகண்ணனாரையும் கட்டியணைத்துக் கொண்டு தங்கள் மகிழ்ச்சியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.

“இனியொருமுறை இத்தீவின் பக்கம் எந்தக் கொள்ளையரும் வரமுடியாதபடி தக்க பாடம் புகட்டி விட்டீர்கள்!” என நா தழுதழுத்தார் மன்னர் பாரீஸ்.

“இந்தப் பேருதவிக்குப் பதிலாக நாங்கள் என்ன செய்துவிட முடியும்?” என அமைச்சரும் வளவத்திரையனின் கரங்களைப் பற்றிக் கொண்டு வாஞ்சையுடன் கூறினார்.

அவர்கள் கூறியதை தாலியா மொழி பெயர்த்தாள்.

“தாங்கள் அனைவரும் எங்கள் தீவில் சிலநாட்கள் தங்கியிருந்து எங்களைச் சிறப்பிக்க வேண்டும்!” என மன்னர் பாரீஸ் கூறியதைக் கேட்ட வில்லவன், வளவத்திரையனைப் பார்க்க, அவனோ பெரியவர் முதுகண்ணனாரை நோக்கினான்.

முதுகண்ணனர் முன்வந்து நின்று முன்மொழிந்தார்.

“அரசே! மூன்று திங்கள்கள் மூச்சிறைக்க ஓடிவந்த எங்கள் கடலரசி சற்றே ஆசுவாசப்படவும், இங்குள்ள கலை, பண்பாடு, வணிகத்தை நாங்கள் உணரவும், எங்கள் சேரநாட்டைப் பற்றி இங்குள்ளோர் அறியவும், நாங்கள் இங்கு தங்குவது ஏதுவாகத்தான் இருக்கும். ஆனாலும்...” என முற்றுபெறாமல் நிறுத்திய வார்த்தைகள் கேட்டு அனைவரும் அவர் முகம் கூர்ந்தனர்.

வில்லவனும் வளவத்திரையனும் கூட அவரது பதில் என்னவாக இருக்கும் என்பதைக் கேட்கும் வேட்கையுடன் நின்றனர்.

“கடலரசியின் பயணம், இதோ இப்பெண்கள் இருவரையும் இந்தத் தீவுக்குக் கொண்டு வந்து



சேர்ப்பதற்காக மட்டுமே தொடங்கியது என்றாலும், கடலரசி இங்கு வந்து நின்ற சரியான நேரத்தில் இந்தத் தீவுக்கான பேராபத்து தடுக்கப்பட்டது மகிழ்ச்சிக்குரிய செய்திதான்! ஆனால் கடலரசியின் தேவை, கிரேக்கத்துக்கும் சேரநாட்டுக்கும் இடைப்பட்ட தூரத்தில் வெகுவாகத் தேவைப்படுகிறது என்பதை இப்பயணத்தில் உணர்ந்தோம். எனவே இன்றோடு இன்னும் நான்கைந்து நாட்கள் மட்டுமே இங்கிருந்து உங்கள் அன்பைப் பெற்றுக் கொண்டு, பல தீவுகளைக் காக்கும் எங்கள் பணியைத் தொடர்ந்தபடி சேரநாடு சென்று சேரவேண்டும்! இதுவே எங்கள் சேரமாமன்னரின் விருப்பம்! அதற்கு இங்கே யாரும் மறுப்பு தெரிவிக்கக் கூடாது!" எனப் பெரியவர் கைகூப்பியவாறு சாந்தமாகக் கூறி முடிக்க, அதை ஆமோதிப்பதாய் வில்லவனும் வளவத்திரையனும் தலையசைத்தனர்.

முதுகண்ணனார் கூறியதை தாலியா மொழிபெயர்த்ததும், "அவ்விதமே செய்கிறோம். அதுவரை தாங்கள் அனைவரும் இத்தீவின் சிறப்பு விருந்தினர்களாக இருந்து எங்களைப் பெருமைப்படுத்த வேண்டும்!" என வேண்டிக் கொண்டார் தெலோஸ் அரசர்.

கடலரசியை ஆளும் அம்மூவரும் ஒருசேர ஆமோதித்து தலையசைத்தனர்.

கடற்கரை முழுதும் ஒரே மகிழ்ச்சி ஆரவாரமும் குதூகலமும் பொங்கி ஓடியது.

ஹீலியஸ் சிலை அருகே காவலுக்கு நின்ற கிரேக்க வீரர்களும் கூட அந்த மகிழ்ச்சி ஆரவாரம் கேட்டு 'ஓஹோ! ஓஹோ!' என ஆர்ப்பரித்தனர்.

ஆரவாரம் அடங்க நீண்ட நேரம் ஆயிற்று!

அனைவரும் நகருக்குள் நடக்கத் தொடங்கினர்.

மன்னர் பாரீசின் அருகே நடந்தபடி இருந்த தியோதாராவின் மனதில் இப்போதே தங்களை மணமக்கள் ஊர்வலம் போல மன்னர் அழைத்துச் செல்வதாகப் பட்டது. அந்த எண்ணம் தந்த நாணத்தால் ஓரக்கண்ணால் வில்லவனை நோக்கியபடி பொன்முறுவல் ஒன்றைப் படரவிட்டாள்..

அவளது பார்வையின் பொருள் உணர்ந்தவனாக பதிலுக்குப் புன்னகைத்தவனின் புன்சிரிப்பால் மெய்சிலிர்த்தாள் தியோதாரா.

இதனிடையே வளவத்திரையனின் அருகே வந்த தாலியா, "எங்கள் ஊருக்கு மாப்பிள்ளை போல நடக்கும் உங்கள் அருகில் மணமகள் வேண்டாமா?" என்றவாறு யாரும் அறியாமல் கிசுகிசுத்ததைக் கேட்டு திடுக்கிட்டுப் பார்த்தான் அவன்.

"சரி!சரி! அதிர்ச்சியில் மயக்கம் போட்டு விழாமல், பாதையில் கண் வையும் திரையரே!" என்றவாறு அவனைத் தாண்டி குறுநகையுடன் நடந்தபடி தியோதாராவுடன் சென்று இணைந்துக் கொண்டாள்.

'சரியான குறும்புக்காரியாக இருக்கிறாளே! இவளை எப்படி இங்கு சமாளிப்பது?' என்ற சிந்தனையுடன் நடையைத் தொடர்ந்தான் வளவத்திரையன்.

(கனவு தொடரும்...)

## பிற்போக்கு

பிரபஞ்சத்தின் எல்லையற்ற விரிவில்
நான் ஒரு பறவையின் அலகில்
ஒட்டிய ஒற்றைக் கேழ்வரகு.
முடிவிலியான அதன் இயக்கத்தின் முன்
என் இயக்கம் கண்ணிமைப் பொழுது.
பிரபஞ்ச சக்தியின்முன் என் சக்தி
ஒரு எறும்பின் சக்தியென்பதால்
அந்தப் பராசக்தியை வணங்குகிறேன்.

கருவுக்கு ஒரு பை வைத்து
அதற்குள் என்னை வைத்து
தன்னைப்போல
என்னுள் ஐம்பூதங்களை வைத்து
என்னைப்போல்
கோடி மனிதர்களைப் படைக்கும்
அந்தப் பராசக்தியை
நான் வணங்குகிறேன்.

உடலைவிட்டு பிரியும் உயிர்
இப்படித்தானிருக்குமென்று
மனிதன் காணமுடியாதவரை
நான் பிரபஞ்ச சக்தியை
பராசக்தியை வணங்குவேன்.
எனக்கு நான் உண்மையாயிருப்பேன்.
பிற்போக்கு லேபிள்கள்
எனதொரு உரோமத்துக்குச் சமம்.

**லாவண்யா**

## வீடு பறத்தல்

வீட்டைக் காலி செய்து
பொருளேற்றிய வண்டி
வீதியில் போகிறது
வீடொன்று
பெயர்ந்து போவதைப்போல
ஜன்னலே இல்லை என்கிற
புகாரோடு வெளியேறிய வீடு
ஜன்னல்களின் அவசியமற்ற
வண்டியில் வெளியைத்
திறந்து திறந்து போகிறது

காற்றைக் காணாத
வீட்டுச் சாமான்கள் யாவும்
காற்றில் பயணம் போகின்றன
தாமே ஒரு பட்டமெனவும்
தாமே ஒரு பறவையெனவும்

வண்டியின் வேகம்
கூடும்போது தெல்லாம்
கூடிப் பேசி சப்தமிட்டுச் சிரிக்கின்றன
திருவிழாக் களை கண்டதுபோல
வீடும் வீட்டுச் சாமான்களும்

நகரின் பிரதான பாலத்தின் மேல்
ஏறியதும் தானாக
சிறகுகள் விரிந்தகல
துளி வானைத் தொட்டுத் தொட்டு
பறந்து களிக்கிறது வீடு

இன்னோர் வீடு என்பது
வாழ்வின் வேறோர் துயரம்
என்றாலும் கூட
மேடேறி பள்ளமிறங்கி
வளைவிற் திரும்பி நதி நீரென
நகர்ப் பயணம் போகிறது

**சுஜய் ரகு**

# வருத்தம்

மன்னித்துவிடு நண்பா!
இன்று திங்கட்கிழமையாய்
போய்விட்டது
நான் வரவேண்டுமென்று
உண்மையிலேயே
நீ எதிர்பார்த்திருந்தால்
இந்த தற்கொலை முயற்சியை
நேற்றே —நீ
மேற்கொண்டிருக்க வேண்டும்!

நிலைப்பாடு
பாவம் கடவுள்!
அவர்தான் என்ன செய்வார்?
வெட்டியானின்
தினந்தோறும் பிரார்த்தனையை
ஒரு சில நாட்களாவது
நிறைவேற்றித்தானே
ஆகவேண்டும்?

கேள்வி
ஊனமுற்றோர்
எவராவது உளமுருக
வணங்கும்போது
உனக்கு உறுத்தலே
வருவதில்லையா கடவுளே?

**புவனகிரி கல்யாண்**

# நிலாக் காலம்

தண்ணீர் நிறைந்த வயல்களிலே
நிலவோ எழுந்து முகம்பார்க்கும்!
தவளைகள் எல்லாம் வயற்காட்டில்
தனித்தனி யாகப் பாட்டிசைக்கும்!

இருளும் ஒளியும் மயங்கியதால்
எங்கும் எழிலாய் காட்சிதரும்!
சருகை உருட்டி விளையாடி
சிலுசிலு வென்றே காற்றடிக்கும்!

சுவர்க்கோ ழிகளின் இரைச்சலுடன்
சில்வண் டுகளின் ரீங்காரம்...
சுவை கூட்டுவதாய் அமைந்துவிடும்!
சுகமாய் இருக்கும் நிலாக்காலம்!

உழைக்கும் மக்கள் வீடின்றி
வீதியில் உறங்கும் அவலம்போல்
நிழலாய் மரங்கள் படுத்துறங்கும்!
நீண்டு கிடக்கும் சாலையிலே!..

விண்மீன் எல்லாம் விழித்திருந்து
வெண்ணில வோடு விளையாடும்!
கண்ணும் கண்ணும் கதைபேசும்
காதலற் கெல்லாம் விழாக்காலம்!

உலகை மறந்து எல்லோரும்
உறங்கிக் கிடக்கும் வேளையிலும்
உறக்கம் களைந்து இரவெல்லாம்
உருகும் மனங்களை யாரறிவார்?

**இராதை பிரபாகரன்**

## சின்னத்திரை ‘அன்பே வா’ நாயகியின் புதிய படம்!



### பெரியதிரையும் ‘அன்பே வா’ என அழைக்கட்டும்!

தமிழ் மற்றும் மலையாள சினிமாவில் சில படங்களில் நடித்து பிரபலமானவர் நடிகை டெல்னா டேவிஸ். இவர் ‘விடியும் வரை பேசு’ படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானார். தொடர்ந்து, ‘ஆக்கம்’ ‘குரங்கு பொம்மை’ உள்ளிட்ட படங்களிலும் நடித்துள்ளார். ‘அன்பே வா’ தொடரில் பூமிகா பாத்திரத்தில் நடித்ததன் மூலம் மக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்ற இவர், இத்தொடரில் இருந்து விலகுவதாக அறிவித்தார். இந்நிலையில், இயக்குநர் மேகராஜ் தாஸ் எழுதி இயக்கும் புதிய படத்தில் டெல்னா டேவிஸ் நடிக்கவுள்ளார். எம்.ஆர் பிக்சர்ஸ் தயாரிப்பு நிறுவன

## ‘மெய்யழகன்’ படத்தின் வருகை!

### மெய்யழகன் மொய்யழகனாகவும் ஆகுக!

விஜய் சேதுபதி — திரிஷா நடிப்பில் வெளியாகி மிகப்பெரிய வரவேற்பைப் பெற்ற ‘96’ படத்துக்குப் பின் இயக்குநர் பிரேம் குமார், நடிகர் கார்த்தியை வைத்து ‘மெய்யழகன்’ படத்தை இயக்கியுள்ளார். இது கார்த்தியின் 27—வது படமாகும். 2டி நிறுவனம் தயாரிக்கும் இப்படத்தில் நடிகர் அரவிந்த் சாமி, ஸ்ரீதிவ்யா, ராஜ்கிரண் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். முதல் பார்வை போஸ்டர் வெளியானதைத் தொடர்ந்து, படத்தின் இரண்டாவது போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது.

## அரைசதம் தாண்டும் தனுஷ்!



## அடித்து நொறுக்கும் துஷாரா!

நடிகர் தனுஷ் தனது 50ஆவது படத்தை அவரே எழுதி, இயக்கி, நடித்துள்ள படத்துக்கு ‘ராயன்’ எனப் பெயரிடப்பட்டுள்ளது. கேங்ஸ்டர் கதைக்களத்தில் உருவாகியுள்ள இப்படத்துக்கு ஏ.ஆர். ரஹ்மான் இசையமைக்கிறார். செல்வராகவன், எஸ்.ஜே. சூர்யா, பிரகாஷ் ராஜ், காளிதாஸ் ஜெயராம், சந்தீப் கிஷான், நடிகை அபர்ணா பாலமுரளி வரலட்சுமி சரத்குமார் உள்ளிட்டோர் நடித்துள்ள இப்படத்தில் நடிகை துஷாரா விஜயன் கதாநாயகியாக நடிக்கிறார். நடிப்பில் புலியென விளங்கும் துஷாராவுக்கு இதில் கனமான வேடம் என்கிறது படக்குழு. ஜூன் — 13 ஆம் தேதி திரைக்கு வருகிற நிலையில், படத்தின் இரண்டாவது பாடலான ‘வாட்டர் பாக்கெட்’ பாடலை படக்குழுவினர் வெளியிட, அது சமூக ஊடகங்களில் வைரலாகி வருகிறது.

## ‘அமரன்’ படப்பிடிப்பு நிறைவு!



## அப்படம் அடையட்டும் தன்னிறைவு!

கமல்ஹாசன் தயாரிப்பில், ராஜ்குமார் பெரியசாமி இயக்கத்தில், நடிகர் சிவகார்த்திகேயன் நடிக்கும் ‘அமரன்’ திரைப்படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளது. சாய் பல்லவி நாயகியாக நடிக்க, ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைக்கிறார். மறைந்த இராணுவ வீரர் முகுந்த் கதாபாத்திரத்தில் சிவகார்த்திகேயன் நடித்துள்ளார். செப்டம்பர் 27 ஆம் தேதி வெளியிடவுள்ளதாகத் தயாரிப்பு நிறுவனம் அறிவித்துள்ளது.

ஆன்மிகம்

# தல வலம்

## சிதம்பரம்



### திருச்சித்திரக்கூடம் (சிதம்பரம்)

புவனகிரி செயபாலன்

காயோடு நீடு கனியுண்டு வீசு
கடுங்கால் நுகர்ந்து நெடுங்காலம் ஐந்து
தீயோடு நின்று தவஞ் செய்ய வேண்டா
திருமார்பனைச் சிந்தையுள் வைத்து மென்பீர்
வாயோது வேதம் மலர்கின்ற தொல்சீர்
மறையாளும் நாளும் முறையால் வளர்த்த
தீயோங்க வோங்கப் புகழோங்கு தில்லைத்
திருச்சத்திரக்கூடம் சென்று சேர் மின்களே! திருமங்கையாழ்வார்.

108 திவ்ய தேசங்களில் இது 41 வது திவ்ய தேசமாகும். சோழநாட்டு திருப்பதிகளில் 40 வது ஆகும்.

மூலவர் கோவிந்தராஜ பெருமாள்.

உற்சவர் தேவாதி தேவன், பார்த்தசாரதி, சித்திரகூடத்துள்ளான்.

தாயார் புண்டரீகவல்லி.

தீர்த்தம் புண்டரீக தீர்த்தம் உள்ளிட்ட 12 தீர்த்தங்கள்.

விமானம் சாத்வீக விமானம்

தில்லை நடராஜர் (மூலவர்) சன்னதியின் தென்மேற்கில், தனி சன்னதியில் கிழக்கு நோக்கி சயனக் கோலம்.





தலப்பெயர்கள்

தென்புலியூர், தில்லைவனம், கோயில், பெறும்பற்றுப் புலியூர், புலிச்சரம், திருச்சிற்றம்பலம், தில்லைநகர், திருச்சிற்றக்கூடம், புண்டரீகபுரம் எனப் பலப் பெயர்கள்.

புராணம்

கலிங்க நாட்டு மன்னன் கவேரனின் மனைவி லோபமுத்திரை. இவர்களுக்கு புத்திரப் பாக்கியம் வேண்டி கடும் தவம் மேற்கொண்டான். காவிரியே அவர்களுக்கு மகளாகப் பிறந்தாள். அகத்திய முனிவர் காவிரியை நதியாக மாற்றினார்.

காவிரியில் தாயும் தந்தையும் நீராட வரும்போது ‘உன்னைப் போல் நாங்களும் சாகாவரம் பெற்று எந்நாளும் வாழும் பேறு வேண்டும்!’ சென்று காவிரியிடம் வேண்ட, ‘அதற்கு வரம் அளிக்கும் சக்தி திருமால் ஒருவருக்குத்தான் உண்டு. எனவே அருகாமையில் இருக்கும் தில்லைவனம் சென்று ‘கோவிந்தா! கோவிந்தா!’ என்று கூறி தவம் இருக்குமாறு கூறினாள்.

அதன்படி அங்கு சென்று தவம் இருக்க, பெருமாள் காட்சி தந்து இருவருக்கும் வைகுந்தம் (மோட்சம்) தந்தார்.

கோவிந்தா என்னும் நாமத்தாலே இவ்விடத்தில் பக்தர்களுக்கு வைகுந்தம் கிட்டியதால் எம்பெருமானுக்கு கோவிந்தராஜன் என்னும் திருநாமம் உண்டாயிற்று.

பராசரன் என்னும் முனிவர் திருமாலை குறித்து தவம் செய்கையில் தஞ்சகன், கஜமுகன், தண்டகாசுரன் என்னும் மூன்று அரக்கர்கள் அவர் தவத்தை கலைக்க முற்பட, முனிவர் வேண்டுதலின்படி மகாவிஷ்ணு கருடன்மீது வந்து தஞ்சகன், கஜமுகன் இருவரையும் சம்ஹாரம் செய்ய, தண்டாசுரன் மட்டும் அங்கிருந்த பிலத்தின் (குகை) வழியாக ஓடி பாதாளத்தில் ஒளிய, அவனைப் பின் தொடர்ந்த எம்பெருமான், தனது முகக்கோட்டால் அவனைக் கீறிக் கிழித்துப் போட்டுவிட்டு பாதாளத்திலிருந்து பூமியை பிளந்து கொண்டு பூவராகப் பெருமாளாக எழுந்தருளினார்.

இவ்வரக்கர்களுக்கு சில்லி, தில்லி என்னும் இரு சகோதரிகள் இருந்தனர். அவ்விருவரும் சகோதரர்களை சம்ஹாரம் செய்த பூவராகப் பெருமாளைச் சரணடைந்து, ‘எங்களுக்கு நல்வழி காட்டுங்கள்!’ என்று வேண்ட, ‘நீங்கள் விரும்புவதைத் தருகிறேன்’ என்றவரிடம் சில்லி ஆனவள் ‘தங்களுக்கே நான் காவலாக இருந்து காக்கின்ற வரம் வேண்டும்!’ எனக் கேட்டு வரத்தை பெற்று சில்லி ஸ்ரீமுஷ்ணம் கோவிலைக் காவல் காக்க ஆரம்பித்தாள்.



தில்லி திருநாடு கேட்க, 'அருகில் உள்ள புண்டரீகப்புரம் சென்று அங்குள்ள தீர்த்தத்தில் திருநீராடி தன்னைக் குறித்து தவம் இருக்குமாறு சொல்ல, அவ்வண்ணமே செய்தாள். அவளிடத்தில் வந்து புள் (கருடன்) வந்து 'எம்பெருமானை தரிசித்து தில்லி தானும் சில்லியைப் போல், எம்பெருமான் வீட்டில் மரமாக இருந்து காத்துரை வரவேண்டும்!' என வேண்ட, எம்பெருமான் சம்மதம் தெரிவித்தார். புண்டரீகப்புரத்தை சுற்றி அழகான தில்லை காந்தள் விருட்சமாக விருந்து பரந்து நின்றார். திருமால் தில்லை கோவிந்தனாகப் பள்ளி கொண்டார்.

புராணம் 2

சிவனும் பார்வதி தேவியும் மனக்களிப்புடன் ஒருவரை ஒருவர் மிஞ்சும் அளவுக்கு நடனம் புரிந்ததனர். இதைப் பார்த்த விநாயகர், முருகனிடம் 'யார் நடனம் சிறப்பாக இருந்தது. எனக் கேட்க, அவ்விருவரும் 'உமையவள் நடனமே மிகவும் சிறந்தது' எனக் கூற, சிவன் கோபமுற்று 'நீங்கள் சிறுவர்கள். உங்களுக்கு தீர்ப்பு சொல்ல தகுதி போதாது!' என்று கூறி பிரம்மனிடம் சென்று நடந்ததைச் சொல்லி கேட்க, 'நீங்கள் இருவரும் திருவேங்கடத்திற்கு தெற்கே மூன்று யோசனை தூரத்தில், காஞ்சிபுரத்திற்கு வாயு திசையில் ஆலங்காட்டில் (திருவாலங்காடு) சென்று நடனமாடுங்கள்! நான் வந்து தீர்ப்பளிக்கிறேன்!' என்றார் பிரம்மா.

அவ்விடத்திற்கு சென்று இருவரும் நடனமாட, நாமகளுடன் வந்த பிரம்மன், பிற தேவர்களும் பார்த்து என்ன தீர்ப்பளிப்பது என்று புரியாமல் இவர்கள் ஆட்டத்தைப் பற்றி வியந்து வியந்து பேசிக் கொண்டே இருந்தனர். பிரம்மன் எழுந்து, 'இதற்கு தீர்ப்பு சொல்லும் தகுதி தனக்கில்லை! திருமால் ஒருவரால் தான் இதற்கு தீர்ப்பு அளிக்க முடியும்!' என்று சொல்ல, எல்லோரும் வைகுந்தம் சென்று, நடந்ததைச் சொன்னார்கள்.

கேட்ட திருமால் 'தில்லை வனத்துக்கு வந்து நடனம் ஆடும்! அப்போது தீர்ப்பு வழங்குகிறேன்!' என்று சொன்னவர், தேவதட்சனான விஸ்வகர்மாவை நோக்கினார். உடனே விஸ்வகர்மா அரக்கர்களின் தச்சன் மயனுடன் தில்லை வனத்துக்குச் சென்றார்.

அங்கு சென்று நடன மையத்தில் சித்திரக்கூடத்தை அமைத்தான். ஐந்து பூதங்களை ஐந்து கலசமாக்கி, நான்கு வேதங்களையும் நான்கு கோபுரமாக்கினான். 36 ஸ்மிருதி சூத்திரங்களை 36 வாயில்களாகவும், 5 யக்ஞங்களை 5 மதில்களாகவும், 6 அங்கங்களை 6 வாயிலாகவும், 6 தரிசனங்களை 6 கதவுகளாகவும் 3 வியாக்கிருதிகளை 3 மாடங்களாகவும் 100 தம்பங்களை நூற்றுக்கால் மண்டபமாகவும் அமைத்து சித்திரக்கூடத்தை கனகசபை, இரத்தின சபை, நாகசபை, தேவசபை, ராஜசபை என தோற்றுவித்தான்.

மேற்படி அமைப்புடன் கூடிய சபையில் நடனமாடினர். யார் நன்றாக ஆடினார் என்று கூற முடியாமல் தேவகணங்களும், தேவலோக நடன மாதர்களும், சர்வ லோகமும் திகைத்து மெய்மறந்து இருக்க உக்கிரமடைந்த ருத்திரன், (சிவன்) தனது இடது காலைத் தரையில் ஊன்றி, வலது காலை தன் தலைக்குமேல் உயர்த்தி நிறுத்த, பெண்ணுக்குரிய நாணத்தால், தான் அவ்வாறு செய்ய இயலாது என வெட்கித் தலைகுனிந்தாள். 'ஈசனே வென்றார்!' என்று சபையோர் அனைவரும் தீர்ப்பு கூற, திருமாலும் அதற்கு இசைவு தெரிவித்தார். உமையவள் காளியாக மாறி தில்லைவனத்தைச் சுற்றித் தாண்டவம் ஆடி, வனத்துக்கு வடக்கே போய் அங்கே ஒரு காவல் தெய்வமாய் நின்றாள். ஈசன் தாங்களும் இதே திருக்கோலத்தில் இவ்விடத்தே எழுந்தருளி, பக்தர்களுக்காக அருள்பாலிக்க வேண்டும் என கேட்க, அவ்வண்ணமே ஒப்புக்கொண்டார்.

சித்திரக்கூடம்

சிதம்பரம் சபாநாயகர் திருக்கோவிலில் கோவிந்தராஜன் பெருமாளை முதன்முதல் பிரதிஷ்டை செய்தவன், கி.பி 726 முதல் 775 வரை ஆட்சி புரிந்த நந்திவர்ம பல்லவன்.

இத்தகவல் திருமங்கையாழ்வார் பாடிய பெரிய திருவாய்மொழியில் உள்ளது.

பல்லவர்கள் சிவனின் இடபத்தினை இலட்சினையாகக் கொண்டவர்கள். அந்த பல்லவர் மரபிலே கி.பி 726 முதல் 775 வரை ஆட்சி புரிந்த நந்திவர்ம பல்லவன், திருமங்கை ஆழ்வார் தொடர்பினால் தீவிர வைணவராக மாறியதால், தில்லை சிற்றம்பலக் கோயில் முற்றத்தில் சபாநாயகர் கோயிலில், கோவிந்தராஜ பெருமாளைப் பிரதிஷ்டை செய்தனர்.

கீழ் திருப்பதிக்குக் கொண்டு சேர்த்து அங்கே பிரதிஷ்டை செய்தார் என்று இராமானுஜர் திவ்ய சரிதை கூறுகிறது.

ராமானுஜரால் பிரதிஷ்டை செய்த திருவுருவம் இன்னும் அங்கே உள்ளது. தற்போது சிதம்பரம் கோவிலில் உள்ள கோவிந்தராஜப் பெருமாள், திரு ஒரு விஜயநகர அரசர் அச்சுதராயரால் பிரதிஷ்டை செய்யப்பட்டது என்பதை வரதராஜ ஐயங்கார் பாடிய பாகவத புராணம், திருவரங்கப்படலம் 63, 99 செய்யுட்களால் தெரிய வருகிறது. இங்கு



பெருமாளுக்கு தில்லைவாழ் அந்தணர்கள் முறைப்படி பூஜை செய்து வந்தனர். இவர்கள் பூஜை செய்ததை விரும்பாத வீர வைஷ்ணவர்களில் சிலர், தில்லைச் சிற்றம்பலக் கோயில் பூஜை நடைமுறைகளுக்கு பலவிதச் தொல்லைகளைக் கொடுத்து வந்தனர்.

இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்திலும் வைணவத் தொல்லை பொறுக்காமல் இதற்கு காரணம் கோவிந்தராஜ் பெருமாள் மூர்த்தமே, இதைக் கொண்டு போய் கடலில் போடு! எனச் செய்தான் என்று இவனது அவைப் புலவராகிய ஒட்டக்கூத்தர் தான் பாடிய உலாவிலும், தக்கையாக பரணியிலும் குறிப்பிட்டுள்ளார்.

ராமானுஜர்


தில்லைக் கோவிலில் இருந்து அப்புறப்படுத்தப்பட்ட கோவிந்தராஜ பெருமாள் மூர்த்தத்தை, இராமானுஜர்

பிரதிஷ்டை செய்த கோவிந்தராஜப் பெருமாளுக்கு வைணவர்கள் வழிபாடு செய்யும் உரிமையை அரசு உத்தரவுப்படி பெற்றனர்.

வேங்கடபதி தேவமகா ராயருடைய ஆட்சியில், அவர் பிரதிநிதியாகச் செஞ்சியில் இருந்து ஆட்சி புரிந்த வையப்ப, கிருஷ்ணப்ப கொண்டம நாயக்கன் என்னும் அதிகாரி, தில்லை வைணவர்கள் முயற்சிக்கு உடந்தையாம். கி.பி. 1597ல் நடராஜர் கோயிலில் முதல் பிரகாரத்திலேயே கோவிந்தராஜப் பெருமாளுக்கு தனிக்கோயில் அமைக்கத் தொடங்கினான். நடராஜர் கோயிலுக்குள் புதிதாக தனிக் கோயில் கட்ட வேண்டாம். இரண்டாம் பிரகாரத்தில் முன்பிருந்த இடத்திலேயே பெருமாளுக்கு பூஜை செய்வது நல்லது எனத் தில்லைவாழ் அந்தணர்களும், நகரப் பொதுமக்களும் நயந்து கேட்டனர்.

கொண்டமநாயக்கன் அவர்களது வேண்டுகோளை பொருட்படுத்தாமல் கோவிந்தராஜப் பெருமாளுக்கு

நடராஜர் சன்னதிக்கு மிக அருகிலேயே அமைக்கத் தொடங்கினான். தில்லைவாழ் அந்தணர்கள் தங்கள் உயிரைக் கொடுத்தேனும் அவன் செயலைத் தடுத்து நிறுத்த உறுதிபூண்டு, தாங்கள் உயிரோடு இருக்கும்வரை கோவிந்தராஜப் பெருமாளுக்கு பல சன்னதிகளையும் உருவாக்கினான். இதனால் கோயிலில் முன்பிருந்த பெரும்பகுதிகள் இழக்கப்பட்டது. வைணவர்கள் கோயிலின் பெரும் பகுதிகளைத் தமக்கு உரிமையாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றி பெற்றனர்.




கோயில் கட்ட இணங்க மாட்டோம் என்று சொல்லி, ஒருவர் வடக்கு கோபுரத்தின் மேலேறி கீழே விழுந்து தற்கொலை செய்து கொள்ள ஆரம்பித்தனர்.

இவ்வாறு இருபது பேர் உயிர் விட்டதைக் கொண்டம நாயக்கன் கோபுரத்தின் மேலேறி தற்கொலை செய்து கொள்ள முயல்பவர்களை சுடும்படி உத்தரவுவிட, அதன்படி இரு அந்தணர் சுடப்பட்டு இறந்தனர். இந்த துன்பநிலையை பொறுக்காத தில்லை அந்தணர் குடும்பத்தைச் சேர்ந்த அம்மையார் ஒருவர், தன் கழுத்தைத் தானே அறுத்துக் கொண்டு தற்கொலை செய்து கொண்டார். இந்தத் தகவலை மேலைநாட்டில் இருந்து பிமெண்டா என்ற பாதிரியார் தன் யாத்திரைக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

விஜயநகர மன்னனாகிய மூன்றாம் சீரங்கராயன் கி.பி. 1643ல் கோவிந்தராஜர் சன்னதியை மேலும் விரிவுபடுத்த எண்ணி, புதிதாகக் புண்டரீகவல்லி தாயார் சன்னதியை அமைத்ததுடன், மேலும்

அதன் தொடர்ச்சியாக விழாக்களும் நடத்தப்பட்டன. கி.பி. 1849ல் பிரம்மோற்சவம் நடந்தது. இதற்கு மறுப்பு தெரிவித்து அந்தணர்களும் மற்றவர்களும் பெரிய அளவில் எதிர்க்க ஆரம்பித்தனர். பின் 1862 ல் இருதரப்பும் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டனர். அதன்படி ‘கோவிந்தராஜப் பெருமாளுக்கு செய்து வரும் நித்திய பூஜைகளைத் தவிர வேறு விழாக்களோ, பிரம்மோற்சவமோ நடத்துவதில்லை எனவும், நடராஜருக்கு தொன்றுதொட்டு நடைபெற்று வரும் நித்திய பூஜைகளிலும், திருவிழாக்களிலும் தாம் தடையாக இருப்பதில்லை!' எனவும் ஒப்புக்கொண்டு உறுதி அளித்துள்ளார்கள். இதன் அடிப்படையில் கி.பி. 1867 ல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

‘இதன்பின் தில்லைப் பெருங்கோயிலில் சைவரும் வைணவரும் அன்பினால் ஒன்றுகூடி நடராஜர், கோவிந்தராஜர் இருபெரும் தெய்வங்களையும் வழிபட்டு மகிழ்வதற்குரிய அமைதியான சூழ்நிலை தொடர்ந்து நிலை பெற்றுள்ளது என்பதை



இத்திருக்கோயிலுக்கு வரும் அன்பர்கள் எல்லோரும் நன்குணர்வர்!' என்று வெள்ளை வாரணார் எழுதிய 'தில்லை பெருங்கோயில் வரலாறு' என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நின்ற இடத்திலேயே...

சித்சபை எனப்படும் இக்கோயிலில் நடராஜர் சன்னதிக்கு அருகிலேயே கோவிந்தராஜப் பெருமாள் கொடிமரத்துடன் தனிக் கோவிலில் மூலவராக இருக்கிறார். பெருமாள் சன்னதிக்கு முன் மண்டபத்தில் நின்று பார்த்தால், நடராஜர், கோவிந்தராஜர் மற்றும் அவரது நாபிக்கமலத்தில் இருக்கும் பிரம்மா ஆகிய மூவரையும் ஒரே நேரத்தில் தரிசனம் செய்ய முடியும். இதுபோல் வேறு எங்கும் காண முடியாது!

மூலவர்

மூலவர், பிரம்மா, ஸ்ரீதேவி மற்றும் பூதேவியுடன் தனது காலடியில் இருக்க, ஏழு தலைகளுடன் கூடிய ஆதிசேஷன்மேல் சயனித்துள்ளார். மூலவர் கையில் சங்கு மற்றும் சக்கரம் உள்ளது. பெருமாள் சாலக்கிராமம் மாலையும், இடுப்பில் தசாவதார உருவங்களை அணிந்துள்ளார்.

பிரம்மா

பொதுவாக திருமாலின் நாபிக்கமலத்தில் பிரம்மா அமர்ந்தபடி இருப்பார். ஆனால் இங்கு நான்கு முகங்களுடன் நின்றபடி உள்ளார். இதுபோல் வேறு எங்கும் காண முடியாது எனலாம்.

உற்சவர்

உற்சவர் தேவாதி தேவன் தாயயார்களுடன் அமர்ந்த கோலத்திலும், மற்றோர் உற்சவர் சித்திரக் கூடத்துள்ளான் பாதத்திற்கு அருகில் நின்ற கோலத்திலும் காட்சியளிக்கிறார்.

காஞ்சிபுரம்

காஞ்சிபுரத்தில் உள்ள ஏகாம்பரேஸ்வரர் கோயில் வளாகத்தில் நாராயணன், நிலா, (திங்கள்) தொண்டன் பெருமாளாக காட்சியளிப்பது போல் இங்கு உள்ள சிவன் சன்னதிக்கு அருகில் கோவிந்தராஜகர் சேவை சாற்றுகிறார்.

சன்னதிகள்

ராமர், சீதை, லக்குமணன், புண்டரீக வல்லி தாயாருக்கு தனிச் சன்னிதி. மற்றும் ஆஞ்சநேயர், நரசிம்மர், ஆழ்வார்கள், ஆச்சாரியார்கள், ஆண்டாள், உடையவர்கள் வேணுகோபாலன், கூரத்தாழ்வார், விஷ்வக்சேனர் உள்ளனர்.

தவம்

பதஞ்சலி, கண்ணுவர் இருவரும் பெருமாள் பிடித்து தவம் செய்து பலன் பெற்றனர்.

காட்சி கண்டவர்கள்

தில்லை மூவாயிரம் அந்தணர்கள், சிறுவன், உமையாள், பாணினி, வியாக்கரபாதர் போன்றோர்.

வழிபட்டோர்.

சிவன், பார்வதி, நந்தி, வாசுகி, கைலாயத்தில் உள்ளவர்கள்,

ராமன் ஆழ்வார்கள்

ராமன் சித்திரக்கூட மலையில் மிகவும் மகிழ்வோடு இருந்தான். அதே ராமன் கோவிந்தராஜன் என்ற பாடியுள்ளார்.

தற்பொழுது கோவிந்தராஜப் பெருமாளுக்கு மீண்டும் பிரம்மோற்சவம் நடத்த வேண்டும் என்று முடிவு செய்ததற்கு, நடத்தக்கூடாது என்று எதிர்ப்பு வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது. இதன் விசாரணையை ஜூன் 24க்கு தள்ளி வைத்துள்ளது. தீர்ப்பு எப்படியோ பெருமாளுக்கே வெளிச்சம்!



பெயரில் இந்த திருச்சிற்றம்பலத்தில் சேவை சாற்றுகிறான் என்று குலசேகர ஆழ்வாரும், திருமங்கை ஆழ்வாரும் தமது பாக்களில் பாடியுள்ளனர்.

திருவிழா

ஆடிப்பூரம், பங்குனி உத்திரம், சித்திரை 10 நாட்கள், வசந்த உற்சவம், கஜேந்திர மோட்சம்.

பிரம்மோற்சவம்

இங்கு ஆண்டுதோறும் பெருமாள் சன்னதியில் பிரம்மோற்சவம் நடைபெற்றது என்பதை

'கைத்தொழ வீதிவருவான் சித்திரக்கூடத்துள்ளானே!

தெய்வப் புள்ளேறி வருவான் சித்திரக்கூடத்துள்ளானே

தெருவில் திளைத்து வருவான் சித்திரக்கூடத்துள்ளானே' என திருமங்கையாழ்வார்

பிரார்த்தனை வேண்டிக்கொண்ட செயல்களில் வெற்றி பெறவும், மீதி தவறாமல் இருக்கவும் இங்கு வேண்டிக் கொள்ளலாம்.

நேத்திக்கடன்

பெருமாளுக்கு திருமஞ்சனம் செய்து வஸ்திரம் சாத்தி வழிபடுகின்றனர்.

கோயில் திறப்பு

தினமும் காலை 6 மணி முதல் 12 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் 10.30 மணி வரையிலும் தெரிந்திருக்கும்.


இருப்பிடம்

சிதம்பரம் நகர மையப் பகுதி நடராஜர் ஆலயம். அதனுள் கோவிந்தராஜப் பெருமாள் சன்னதி உள்ளது.

(தொடரும் வலம்.....)




# ‘இசையரசி கே.பி.சுந்தராம்பாள்’




**ஆசிரியர்: முத்துரத்தினம்**

**விலை : ரூ. 150**

**வெளியீடு:**
**சரண் பதிப்பகம்,**
**கஞ்சனூர்**
**சத்தியமங்கலம், ஈரோடு.**

இந்தியாவிலேயே முதன் முதலாக ஒரு படத்தில் நடிக்க ஒரு லட்ச ரூபாய் ஊதியமாகப் பெற்றார் என்ற தனிப் பெருமை பெற்றவர் கே.பி. சுந்தராம்பாள் குறித்து நூலாசிரியர் முத்துரத்தினம் அற்புதமாக வடித்திருக்கும் நூல்தான் ‘இசையரசி கே.பி.சுந்தராம்பாள்’அவ்வையார் படம் 1953—ல் வெளியாகி வெள்ளி விழா கொண்டாடிய படம்! நடிகர் திலகம், மக்கள் திலகம் போன்ற அற்புதமான கலை ஆளுமைகள் எல்லாம் தாயாக பாவித்து போற்றிய கே.பி. சுந்தராம்பாள் இசையின் மிகப்பெரிய சிகரம் தொட்டவர். அவர் தமிழ்த் திரை இசைக்கும், திரை உலகுக்கும் ஆற்றிய தொண்டுகள் மற்றும் தமிழ்நாடு முழுவதும் அவரது குரல் ஒலித்த விதம் எல்லாவற்றையும் ஆழமாக பதித்திருக்கிறார் முத்துரத்தினம்.

மேடை நடிப்பில் பெரும்புகழ் பெற்ற அவரை மேடையில் நடித்து பார்க்க கொடுத்து வைக்காதவர்கள், திரைப்படங்களில் பின்னர் பார்த்து மகிழ்ந்தார்கள். மணிமேகலையாக, நந்தனராக, காரைக்கால் அம்மையாராக, கவுந்தியடிகளாக, ஔவையாராகத் தோன்றி மக்களைப் பக்தி வெள்ளத்தில் மூழ்க வைத்தவர். கதர் ஆடை போர்த்திய உருவமும், எப்பொழுதும் திருநீறு துலங்கும் நெற்றியும், முருகா முருகா என்று ஓயாமல் ஜெபித்துக் கொண்டிருந்த நாவும் முருகன் அடியார்களில் முதன்மையானவராகவும் இருந்தவரைப் பற்றிய இந்த நூல், கே.பி. சுந்தராம்பாள் குறித்து வராத புதிய தகவல்களை எல்லாம் கொண்டு வந்திருக்கிற அற்புதமான ஆவண நூல் என்றால் மிகையல்ல!

சிறுகதை



# கருணாவும், காஞ்சிபுரம் இட்லியும்!

எஸ்.ராமன்

"பேச்சுலர் வாழ்க்கையிலிருந்து இல்லற வாழ்க்கைக்கு மாறிட்டீங்க. வாழ்த்துகள் மாப்பிள்ளை" என்று மணமேடையில், முதல் வாழ்த்து சொன்ன மாமனாரிடம், "மாற்றம் ஒன்றே மாறாதது மாமா. வாழ்த்துக்கு நன்றி" என்று பதில் சொன்னேன்.

"அப்படி போடு. கல்யாணத்துக்கு அப்புறம் ஒவ்வொருத்தருக்கும் மாற்றம் வரும். அதைப் பற்றிதான் நானும் சொல்லணும்னு நினைச்சேன். நீங்க முந்துக்கிட்டீங்க மாப்பிள்ளை."

"அப்ப நீங்க சொல்ல வந்ததை இப்பவே சொல்லிடுங்க? இல்லைன்னா, என் தலை வெடிச்சுடும்" என்று நாவலின் கடைசி அத்தியாயத்தை முதலில் படிக்கும் பழக்கமுடைய எனக்கு, சஸ்பென்ஸ் என்றாலே பிடிக்காது."

"உங்க அப்பாவுடைய சொந்த ஊர் சிவகாசின்னு தெரியும். அதற்காக, தலைக்கு உள்ளே, வெடி மருந்தை பேக் செய்து வச்சுருக்கிறா மாதிரியே பேசறீங்களே மாப்பிள்ளை. நான் வேணும்னா, சொல்ல வந்ததை அப்புறமா சொல்றேன்."

"திரியை பத்தவச்சுட்டு, பட்டாசை அப்புறம் வெடிக்க சொல்றேன்னு சொல்றது போல இருக்கு. முதல்லே, நீங்க சொல்ல வந்ததை சொல்லிடுங்க மாமா."


"முதல்லேன்னு சொன்னீங்களே. அங்கேதான் திரியே இருக்கு. என் பொண்ணுக்கு, எல்லாத்திலேயும் முதலாவதா இருக்கணுங்கற வெறி ஜாஸ்தி. முடிஞ்சா அதை மாற்றப் பாருங்க மாப்பிள்ளை"என்றவர், எனக்கு ஏதோ பெரிய அறிவுரை வழங்கியதுபோல், வில்ல சிரிப்பை உதிர்த்து நின்றார். அத்துடன், அந்தச் சம்பாஷணைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தேன்.

"பொண்ணை கூப்பிடுங்கோ? சடங்குகள் பாக்கி இருக்கு" என்று புரோகிதரின் குரல் உச்ச ஸ்தாயியில் ஒலித்துகொண்டிருந்தது. திரும்பி பார்த்தேன். என் பக்கத்தில், புது மனைவி இல்லை. சிறிது நேரம் காத்திருப்புக்கு பிறகு, வந்து சேர்ந்தாள்.

"பந்தியில் கொஞ்சம் லேட்டாயிடுச்சு" என்றவள், கைக்குட்டையால் வாயைத் துடைத்துக் கொண்டாள்.

விருந்தினர்களை நேரடியாக உபசரிக்க, டைனிங் ஹாலுக்கு போயிருப்பாள் என்ற எண்ணத்தில், "நல்ல பண்பாடு' என்று பெருமையில் மிதந்தேன். அந்தச் சமயத்தில், அதற்குமேல் எனக்கு யோசிக்கத் தோன்றவில்லை.

"பொண்ணும், மாப்பிள்ளையும், சிரிச்ச போஸில் ஒரு செல்பி எடுத்துக்கோங்க" என்று சடங்குகளின் இறுதிப் பகுதியாக, புரோகிதரின் அறிவிப்பு வெளியாகியது. இது "காலத்துக்கு ஏற்றபடி, புதிதாக



முளைத்த சடங்கு' என்று தோன்றினாலும், எனக்கு கிடைத்த ஒரு வாய்ப்பாகவே அதை பார்த்தேன்.

"செல்பி' என்ற அந்த வார்த்தையைக் கேட்டதும், என் நாடி நரம்புகளெல்லாம் முறுக்கேறியது. "செல்பி கருணா' என்ற பட்டப் பெயரை,காலப்போக்கில், கஷ்டப்பட்டு சம்பாதித்து வைத்திருக்கிறேன். தன்னைத் தானே படமெடுத்துகொள்ளும் கலையான செல்பி என்றால், அல்வா சாப்பிட்டது போல. நம்மை நாமே போட்டோ ஷூட் செய்து கொள்ளும்போது ஏற்படும் முக மொழி மாற்றங்களைத் தவிர்த்தவர்கள் இந்த உலகத்தில் இல்லை என்று அடித்து சொல்வேன்.

என்னதான் முயன்றாலும், அல்வாக்குள் வாய் மாட்டிக் கொண்டது போலவோ அல்லது, போண்டாவை வாய்க்குள் திணித்தது போலவோ தோன்றும் அசட்டு பிசட்டான முக பாவங்கள், செல்பி ஷூட்டிங்கின்போது, யாராலும் தவிர்க்க முடியாதவைகளாகும். ஆதார் போட்டோக்களைபோல், சில செல்பிக்கள், ஆளையே அடையாளம் காண முடியாதபடி உருக்குலைந்துபோய், அதன் உரிமையாளர்களை மனம் கலங்க வைக்கும். வாய், முகம் ஆகிய அவயங்கள் கோணாமல், செல்பி எடுப்பது எப்படி என்பதில் நான் டாக்டர் பட்டம் வாங்காததுதான் குறை. அந்தக் கலையை, இதுவரை நான் ஆயிரத்து ஏழு பேருக்கு சொல்லிக் கொடுத்திருக்கிறேன். என்னுடைய மொபைல் கேலரியை திறந்தால், பூனை முதல் யானை வரையிலான அனைத்து ஜீவராசிகளுடனுமான செல்பி போட்டோக்கள், ஆயிரக்கணக்கில் நிறைந்திருக்கும்.

எந்தச் சந்தர்ப்பத்திலும், செல்பி எடுக்கும் வாய்ப்பை நான் நழுவ விட்டதில்லை. இந்த சுபயோக சுபதினத்தில், மனைவிக்கு அந்த கலையைக் கற்பிக்கும், ஆயிரத்து எட்டாவது வாய்ப்பு, அருகில் வரும்போது விடுவேனா? எனவே, புரோகிதரின் அறிவிப்பைக் கேட்டவுடன், அந்த அரிய வாய்ப்பை நழுவ விடாமல், செல்பி எடுக்க, மொபைலை திறந்தேன். அப்பொழுது, "நிறுத்துங்கள்' என்ற கட்டளை குரல், எந்தத் திசையிலிருந்து வருகிறது என்று தெரியாமல், திருதிரு என்று விழித்தேன். நான் விழித்த நிலையிலேயே, ஒரு செல்பி க்ளிக் ஆகியதை உணர முடிந்தது. திருதிரு விழியுடன் கூடிய என் உருவத்துடன், தன் மொபைலில் பதிவாகி இருந்த செல்பியை, கேலி புன்னகையுடன், புரோகிதரிடம் மனைவி காண்பித்தாள்.

"சாஸ்திரப்படி, ஒரு செல்பிக்குதான் அனுமதி. இப்ப மொபைலை மூடிவச்சுட்டு, பொண்ணும் மாப்பிள்ளையும் சாப்பிட போகலாம்'' என்ற அறிவிப்பு வந்தவுடன், எனக்கு பின்னால் அவள் வருவாள் என்ற நினைப்புடன் டைனிங் ஹால் நோக்கி நடக்க ஆரம்பித்தேன். டைனிங் ஹாலில், "பொண்ணு, முதல் பந்தியிலேயே சாப்பிட்டு போயிட்டாள்' என்ற பேச்சு அடிபட்டது. "பாவம். பசி போல இருக்கு' என்ற எண்ணத்தில், நான் மட்டும் சாப்பிட்டு முடித்தேன். பசி வேளையில், வேறொன்றும் நினைக்கத் தோன்றவில்லை.

இனிதே துவங்கிய இல்லற வாழ்க்கையில், சாதாரண விஷயங்களில் சில அசாதாரண நிகழ்வுகளை ஒன்றன் பின்னர் ஒன்றாகச் சந்திக்க நேர்ந்தது. தூங்கி எழுந்தவுடன், முதல் வேலையாக, செய்தித்தாளைப் படிக்கும் பழக்கம் உண்டு. படிக்கும்போது, கடைசி பக்கத்திலிருந்துதான் முதல் பக்கத்துக்கு வருவேன். அன்று அப்படித்தான், வெளியே நின்றிருந்த சைக்கிளிலிருந்து பேப்பர் பையன் வீசிய தினசரி, சர்ரென்று பறந்து, ஹாலுக்குள் வந்து விழுவதற்கு முன், முன்னும் பின்னும் பக்கவாட்டிலும் ஸ்லோ மோஷனில் நகர்ந்து, கேட்ச் பிடித்து, மடிப்புக் கலையாத புத்தம் புதிய பேப்பரின் வாசனையை நுகர்ந்து ரசித்தேன். அயர்ன் செய்த சட்டையை ஜாக்கிரதையாக பிரிப்பதுபோல், பேப்பரை பிரிக்க முயற்சித்தபோது, "நிறுத்துங்க' என்ற அந்த குரல் ஓங்கி ஒலித்ததும், நிமிர்ந்து பார்த்தேன்..

தூக்கத்திலிருந்து எழுந்து ஓடி வந்த மனைவி, பரீட்சை ஹாலில் சூப்பர்வைவஸர், கேள்வித்தாளை, ஸ்டார்ட் பெல் ஓசை கேட்கும்வரை, யாரும் பார்க்காதவாறு, மறைத்து வைத்துகொள்வதுபோல், தினசரியை பாய்ந்து எடுத்து பீரோவில் பூட்டி சாவியை தன்னிடம் வைத்துக் கொண்டாள். என்ன நடக்கிறது என்பது புரியாமல் விழிப்பதை தவிர, எனக்கு வேறு ஒன்றும் சாய்சே இல்லை. முதலில் தான் காபி குடித்துவிட்டு, எனக்கு காபி கொண்டு வந்தவள், பீரோவிலிருந்த பேப்பரை பிரித்து, ஒவ்வொரு பக்கமாகப் படித்துவிட்டு, என்னிடம் கொடுத்தாள். அவள் செய்கையை தற்காலிக ஆர்வக் கோளாறு என்றுதான் நினைத்தேன்.



அடுத்தடுத்த நாள்களிலும் இதுபோன்ற நிகழ்வுகள் தொடர்ந்தன. அதற்கான காரணத்தை என்னால் ஊகிக்க முடியவில்லை.

அடுத்து வந்த நாள்களில், அதுபோன்ற சம்பவங்கள் எதுவும் நிகழாததால், கொஞ்சம் நிம்மதி பெருமூச்சு விட்டேன். ஆனால், அந்த பெருமூச்சு நிலைக்கவில்லை. திடீரென்று வீட்டில் விளக்குகள் எரியவில்லை. இ.பி.க்கு போன் செய்து காரணம் கேட்டேன். "பில் தொகை கட்டவில்லை' என்று பதில் வந்தது. பில் தொகை கட்டாமல் கரண்ட் கட் ஆனது, எனக்கு அவமானமாக இருந்தது. அவமானத்தை மனைவியிடம் வெளிக்காட்டாமல், தொகை வசூலிக்கும் இடத்துக்குப் போனேன். எனக்கு பழக்கப்பட்டவரிடம், கார்டை கொடுத்து விசாரித்தேன். ஜோசியர் ஜாதகக் கட்டத்தை ஆராய்வது போல் கார்டை பல திசைகளிலும் திருப்பி பார்த்து ஆராய்ந்தவர், நீண்ட யோசனைக்குள் புகுந்து வெளியே வந்தார். அதற்குள், அங்கு நின்றிருந்த க்யூவின் பின்னணியில், நான் ஒரு செல்பி எடுத்துகொள்ள தவறவில்லை.

"இப்ப ஞாபகம் வந்துடுச்சு. பில் கட்ட வேண்டிய கடைசி நாளன்று, இங்கே பெரிய க்யூ நின்றிருந்தது. முகத்தில் போடவேண்டிய கூலிங் கிளாஷஸ கையில் மாட்டிக் கொண்டு, கடைசியாக நின்றிருந்த பெண்மணி, வரிசையை முறித்து, முதலில் நிற்க வேண்டும்' என்று பிடிவாதம் பிடித்தார் நீண்ட நேரமாக காத்திருந்த மற்றவர்கள் யாரும் அதை ஏற்கவில்லை. அதனால், ஏதோ சாமி வந்ததுபோல் கோபம் அடைந்தவர், "இனி இந்த இ.பி.ஆபீஸ் பக்கமே வரமாட்டேன்' என்று கவுன்ட்டரில் சபதம் அடித்து வெளியேறினார். "கவுன்ட்டரில் விழுந்த கிராக்கை ரிப்பேர் செய்ய ஹெட் ஆபீஸுக்கு எழுதி இருக்கோம். அந்த ஷாக்கிலிருந்து இன்னும் நாங்க மீளவில்லை. ஆமா. அந்த கிராக்கு பொம்பளை யாரு சார்?" என்ற கேள்வியோடு, பில் தொகையை வாங்கி, ரசீது கொடுத்தார். அது யார் என்பது எனக்கு புரிந்துவிட்டது. முகத்தில் மாட்ட வேண்டிய கூலிங் கிளாஷஸ கையில் மாட்டிக் கொள்ளும் மேனரிசம் என் மனைவியை சார்ந்தது என்பதை குறுகிய காலத்தில் புரிந்து கொண்டதால், எனக்கு இந்த விஷயத்தில், எந்தவிதமான சஸ்பென்ஸும் இல்லை.

பில் தொகையை செலுத்தியதும் வீட்டில் லைட் எரிய ஆரம்பித்தது. அத்துடன், என் மூளையிலும் ஏதோ பல்ப் சுடர் விட்டு எரிந்தது போன்ற உணர்வு ஏற்பட்டது. ஆனால், என்னால், எதையும் உறுதி செய்ய முடியவில்லை. மனைவியிடம் காரணம் கேட்டு, அவள் சொல்லும் பதிலில், என்னை நானே குழப்பிக் கொள்ள விரும்பவில்லை.

அன்று விடுமுறை நாள். மனைவி தினசரியை படித்து முடித்த பிறகு, கடைசி பக்கத்தை திருப்பி படிக்க ஆரம்பித்தேன். அதில், "ரேஷன் கடையில் கலாட்டா. சம்பந்தப்பட்டவரை போலீஸ் சல்லடை போட்டு தேடிக் கொண்டிருக்கிறது' என்ற பெட்டி செய்தி கண்ணில் பட்டது. "செய்திக்கும் எனக்கும் தொடர்பு ஏதும் இல்லை' என்ற எண்ணத்தில் பக்கத்தைப் புரட்டியபோது, வீட்டு காலிங் பெல் ஒலித்தது. கதவை திறந்ததும், ஓர் அதிர்ச்சி, போலீஸ் வடிவில் காத்திருந்தது. போலீசை பார்த்ததும், "என் செல்பி மகாத்மியத்தில் விளைந்த ஏதாவதொரு அசம்பாவிதம் சம்பந்தமாக இருக்கும்' என்றுதான் நினைத்தேன்.

அதற்கு மாறாக, "இந்த விலாசத்தில் வசிக்கும் பெண்மணி, நேற்று ரேஷன் கடையில் தகராறு செய்ததாகப் புகார் பதிவாயிருக்கு. அவங்களை

விசாரிக்கணும். கூப்பிடுங்க” என்றார். “சார்.. இன்னொரு முறை செக் பண்ணுங்க. அதுமாதிரி தகராறு பண்றவங்க இங்கே யாரும் இல்லை” என்றேன். அதற்குள் பேச்சு சத்தம் கேட்டு, மனைவி அங்கு வந்து, “”என்ன விஷயம்?” என்றாள். “நேற்று நீ ரேஷன் கடைப் பக்கம் போகலை இல்லை” என்று நம்பிக்கையுடன் அவளிடம் கேட்டேன். அவள் பதில் ஏதும் சொல்லாமல் உள்ளே போனாள்.



“நான் சொல்றேன்” என்ற போலீஸ்காரர், “நேற்று ரேஷன் கடையில் பெரிய க்யூ. கடைசியா வந்த இவங்க, முதல்ல நிக்கணும்னு அடம் பிடிச்சுருக்காங்க. இவங்களுக்கு ஆதரவா பேசிய சில பேருக்கும், எதிராகப் பேசிய பல பேருக்கும் ஏற்பட்ட வார்த்தை வீச்சுகளில், ரேஷன் கடையை மூட வேண்டியதா போச்சுன்னு புகார். உங்க பக்க விளக்கத்தை கேட்ட பிறகு, எஃப்.ஐ.ஆர். போடலாம்னு இருக்கோம்’’ என்று குண்டை தூக்கிப் போட்ட போலீஸ்காரருடன், ஒரு செல்பி எடுத்துகொள்ள முயன்றபோது, தன் முறைப்பு பார்வையினால், தடுத்தார்.

வாசலில் நின்றிருந்த போலீஸ்காரர் பேசுவதை கேட்டுக் கொண்டே வீட்டுக்குள் நுழைவது யார் என்று பார்த்தேன். பையிலிருந்து வெளியே தெரிந்த, மந்தாரை இலை கட்டுடன், கிராமத்திலிருந்து, அம்மா வந்திருந்தாள். அப்பா காலத்துக்குப் பிறகு, தட்டுக்குப் பதிலாக, அம்மா அந்த இலையில்தான் சாப்பாடு சாப்பிடுவாள். திருவாச்சி மரத்தின் அகலமான இலைகளை, சிறு தென்னங்குச்சிகள் மூலம் இணைத்து, பின்னப்படும் இந்த இலைகள் மருத்துவக் குணம் நிறைந்தவை. அந்த இலையில் சாப்பிட்டால், மன, உடல் நோய்கள் குணமாகும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இக்கட்டான சூழ்நிலைகளில், எதையாவது பேசி, நிலைமையை சமாளிக்கும் புத்தி சாதுர்யம், அந்த இலையில் சாப்பிடுவதால்தான், அம்மாவுக்கு வளர்ந்திருக்கும் என நினைக்கிறேன்.

“என்னம்மா சொல்லாமல் கொள்ளாமல், வந்து நிக்கறே. சரியான டயத்துக்குத்தான் வந்திருக்கே. நிலைமையை சமாளிக்க உனக்குத்தான் தெரியும். ஓவர் டு யூ அம்மா” என்று அவளிடம் காதோடு விஷயத்தைச் சொல்லி, நான் நகர்ந்தேன்.

“நீங்களெல்லாம் உள்ளே போங்கோ. நான் பேசிக்கிறேன்” என்றவள், வெற்றிப் புன்னகையுடன், சிறிது நேரத்தில் உள்ளே வந்தாள். “என்னம்மா சொல்லி சமாளிச்சே” என்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.

“கிட்ட வா.. காதோடு சொல்றேன். அது உன் பொண்டாட்டி காதில் விழுந்துடப்படாது’’ என்று, சற்று உறக்க கிசுகிசுத்தாள். அவளுக்கு ரகசியமாகப் பேசத் தெரியாது என்பது நான் அறிந்த உண்மை. சிறுவயதில், அளவுக்கு அதிகமாககோரோஜனை புகட்டப்பட்டதால், தன் குரல் உச்ச ஸ்தாயியில் நிலை கொண்டுவிட்டதாக, அவளே என்னிடம் சொல்லியிருக்கிறாள்.

செல்பி எடுத்து, ஒரு லட்சம் ரூபாய் டிமாண்டில் நான் மாட்டிக் கொண்ட போது என்னை விடுவிக்க பயன்படுத்திய அதே வார்த்தைகளைத்தான், போலீஸிடம், இப்பொழுதும் பயன்படுத்தி இருக்கிறாள். அந்த வார்த்தைகளைக் கேட்டதும், “அவள் நெருப்போடு விளையாடுகிறாள்’ என்று எனக்கு தோன்றியது.

“மருமகளுக்கு மனநல கோளாறு’ என்பதுதான் அந்த வார்த்தைகள். ஆனால், அந்த வார்த்தைகளை தன் கூர்மையான காதுகளால் கேட்ட மனைவியின் கண்களிலிருந்து, மாமியாரை நோக்கி, வெறுப்பு பொறி பறந்தது போல எனக்கு தோன்றியது.

சற்று யோசித்ததில், இதுவும் ஒரு விதத்தில் நல்லதுதான் என்று என் மண்டையில் பல்ப் எரிந்தது. “அந்தப் பொறியை வளர்த்து, அதை அணையா தீப்பந்தமாக மாற்றினால்தான், எனக்கு பாதுகாப்பு’ என்று என் உள் மனது கூக்குரலிட்டது. இந்தக் கொடூர எண்ணத்துக்கான காரணத்தைத் தேட, என் வாழ்க்கை சரித்திரத்தில் சற்று பின்னோக்கி பயணம் செய்ய வேண்டும்.

அட்வைஸ் என்றாலே எனக்கு துளிக்கூட பிடிக்காது. சிறுவயதில், அம்மாவும், அப்பாவும் அட்வைஸ் என்று என்னை இம்சை செய்ததுதான் அதற்கான மூல காரணம்.. அதற்கு பிறகு, முன்னுக்கு வா, அதை செய், இதை செய்யாதே என்று தொடர்ந்து முழங்கிய அத்தை, மாமா, சித்தப்பா போன்ற அட்வைஸர்களின் குரல்கள், என்னை விடாமல் துரத்தியது. இதில் கொடுமை என்னவென்றால், எனக்கு அட்வைஸ்



வழங்குபவர்களோடு, அம்மா கூட்டணி பந்தம் பிடித்து, அதில் குளிர் காய்வாள். கருணாகரன் என்கிற எனக்கு அட்வைஸ் செய்து, யாரும் வென்றதாக சரித்திரம் கிடையாது.

“ஆசையே துன்பத்துக்கு காரணம். ஆகவே அதிகம் ஆசைப்படாதே’ என்ற கொள்கையை பின்பற்றுபவன் நான். “போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து’ என்ற என் சீரிய கொள்கை பிடிப்பால், பரீட்சையில் பாஸ் மார்க் வாங்கும் அளவுக்கே படித்தேன். அப்பாவின் திடீர் மரணத்தாலல், அவர் பணிபுரிந்த அலுவலகத்திலேயே, கருணை அடிப்படையில் வேலை கிடைத்ததும், வாழ்க்கையில் செட்டில் ஆகிவிட்டதாக நினைத்து, திருமணமும் செய்து கொண்டேன். திருமணத்துக்குப் பிறகு, மருமகளோடு, மாமியார் கூட்டணி வகுத்து, அட்வைஸ் புராணத்தை, என்னை நோக்கி, புரட்டாமல் இருக்கவேண்டும் என்ற நியாயமான தொலை நோக்கு பயம், எனக்குள் சுடர் விட்டு எரிந்து கொண்டிருந்தது.

எனவே, மாமியார் மீது, மருமகளுக்கு வெறுப்பு சுடர் தோன்ற ஆரம்பித்த அறிகுறி தெரிந்ததும், எனக்கு நிம்மதி பிறந்ததில் ஆச்சரியமில்லை. அந்த மனப் பிரிவினை தொடர வேண்டும் என்று நான் மனதளவில் நினைத்தபோதுதான், சமையலறையிலிருந்து அந்தச் சம்பாஷணை கேட்டது.

“நைட் என்ன டிஃபன் பண்றதா உத்தேசம்? அவனுக்கு புடிச்சதா பண்றயா.. இல்லை உனக்கு மட்டும் புடிச்சதா பண்ணிக்கிறியா?”

“ஒரு நாளைக்கு ரவா உப்புமா. மறுநாளைக்கு சேமியா உப்புமா. அடுத்த நாளைக்கு கோதுமை உப்புமா. அப்புறம் ராகி உப்புமா, ஜவ்வரசி உப்புமா, ஓட்ஸ் உப்புமான்னு, விதவிதமா செய்து கொடுக்கிறேன்” என்று தினமும் எனக்கு உப்புமா செய்து கொடுப்பதை, உலக மகா சாதனையாக மனைவி பரப்புரை செய்து கொண்டிருந்தாள்.

“அடிப்பாவி. கருணா மீது, உனக்கு துளிக் கூட கருணையே இல்லையா? அதான் அவன் இப்படி இளச்சு போய் கிடக்கிறான். அவனுக்கு வேறென்ன பிடிக்கும்னு வாய் திறந்து எப்பவாவது கேட்டிருக்கியா?” என அடுப்பங்கரையில், விவாதம் சூடேறிக் கொண்டிருந்தது. “காஞ்சிபுரம் இட்லி வேணும்னு அடிக்கடி, கனவில் வாய் திறந்து உளறுகிறாரே.” காஞ்சிபுரம் இட்லி என்ற வார்த்தையைக் கேட்டு, அம்மா மௌனமானது போல் தோன்றியது.

காஞ்சிபுரம் இட்லிதான், அம்மாவின் சிக்னேச்சர் டிஷ். கூம்பு வடிவமாக்கப்பட்ட மந்தாரை இலையில், மாவை ஊற்றி பேக் செய்து, இட்லி சட்டியின் நாலாபுறமும், அவற்றை குத்திட்டு நிற்க வைத்து, தட்டுப் போட்டு மூடி, விறகு அடுப்பில் வேகவைத்து, அதை சிறுதுண்டுகளாக நறுக்கி, அதன் மீது நெய்}மிளகாய் பொடி தடவி, சிறுவயதில், எனக்கு கொடுத்தது நினைவுக்கு வந்ததும், வாயில் எச்சில் ஊற ஆரம்பித்தது. திடீரென்று, வீட்டில் காஞ்சிபுரம் இட்லி செய்வது நிறுத்தப்பட்டாலும், அதன் நினைவுகள் என் மனதை அவ்வப்போது, அழுத்திக் கொண்டிருக்கும், நிறுத்தத்துக்கான காரணத்தை கேட்டபோதெல்லாம், “அதெல்லாம் உனக்கு புரியாது’ என்று என்னை அடக்கிவிடுவாள்.

“அது மட்டும் முடியாது” என்று மௌனத்துக்குப் பிறகு, அம்மாவின் குரல் தெளிவாக கேட்டது. “ஏன்.. ரெஸிப்பு மறந்துடுச்சா?” என்று குத்தலாக கேட்ட மனைவி, வம்பை வளர்த்துக் கொண்டிருந்தாள். இந்தக் கேள்வி, அம்மாவை வெகுவாகப் பாதித்திருக்க வேண்டும் என்று ஊகித்தேன். அதனால்தான், ரெஸிப்பியை மனப்பாடமாகச் சொல்ல ஆரம்பித்தாள்.

சம அளவில் பச்சரிசி, புழுங்கலரிசி, கொஞ்சம் வெந்தயம், முழு உளுந்து ஆகியவைகளை ஐந்து மணி நேரம், தண்ணீரில் ஊற வச்சு, அரிசியை ரவை பதத்துக்கும்,, உளுந்தை வடை பதத்துக்கும் அரைச்சு, உப்பையும் தயிரையும் சேர்த்து ஒண்ணா கலந்து, ஆறு மணி நேரத்துக்குப் புளிக்க விடணும். கடுகு, கடலைபருப்பு, கருவேப்பிலை, மிளகு, சீரகம், பெருங்காயம், இஞ்சி, முந்திரியை நல்லெண்ணையில் தாளிச்சு கொட்டணும். அதோடு, கொஞ்சம் நெய், சுக்குப்பொடி கலந்து, சுற்றிலும் எண்ணெய் தடவிய வாழை அல்லது மந்தாரை இலைக்குள் அந்த மாவை பேக் செய்து, இட்லி பானையில் வேக வச்சு எடுத்து, அதை சிறு துண்டுகளாக வெட்டி, அதில் நெய்}மிளகாய்பொடி கலந்து சாப்பிட்டால், நாள் முழுவதும் பசிக்காது. வயிற்றுக்கும் ரொம்ப நல்லது..”

“ரெஸிப்பி தெரிஞ்ச நீங்க அதை செய்ய வேண்டியதுதானே?” என்று அம்மாவை, மனைவி வெறுப்பேற்றி கொண்டிருந்தது போல் எனக்கு



தோன்றியது. “அது, எங்க குடும்பப் பரம்பரை பலகாரம். ஆனால்,இப்ப அதை செய்ய முடியாதுன்னா முடியாது.”

“அதான் ஏன்னு கேட்கிறேன்?” என்று மனம் தளராமல், மனைவி, வெறுப்புக்கு முறுக்கேற்றிக் கொண்டிருந்தாள். வெளியிலிருந்து சம்பாஷணையை கேட்டுக் கொண்டிருந்த எனக்கு, சஸ்பென்ஸ் தாளாமல், மண்டை வெடித்துவிடும் போல் இருந்தது. “நான் ஒரு சாப்பாட்டு பிரியன்’ என்பதால், எப்படியாவது இந்தப் பிரச்னைக்கு தீர்வு கிடைத்து, நெய் மிளகாய் பொடி தடவிய காஞ்சிபுரம் இட்லியை சுவைத்துவிட நாக்கு துடித்தது. அதற்காக, எந்தத் தியாகமும் செய்ய தயாரானேன். “கருணாவைப் பற்றி, குல தெய்வக் கோயிலில் குறிகேட்டபோது வந்த உத்தரவைப் பற்றி உனக்கு எங்கே தெரிஞ்சிருக்கப் போவுது?”

“நீங்க சொன்னால்தானே எனக்கு தெரியும்?” என்று சம்பாஷணையில் மேலும் சூடு பிடித்தது.

“குல வாரிசுக்கு, முன்னுக்கு வரங்கற ஆசை பிறக்கும்வரை, உங்க பரம்பரை பலகாரத்தை ஒதுக்கி வைக்கணும். இல்லைன்னா, குடும்பத்துக்கே, வயிற்றில் பெரிய பிரச்னை வந்துவிடும் என்கிற உத்தரவுதான் அது” என்று அம்மாவின் குரலில், சோகம் கலந்திருந்ததை என்னால் உணர முடிந்தது.

“நடக்கிற காரியமாகப் பேசுங்க. எங்கும், எதிலும், எனக்குதான் முதலிடம். உங்க பிள்ளை, என்னை எதிலும் முந்தக் கூடாதுங்கற கொள்கையை விட்டுக் கொடுக்க நான் தயாரில்லை” என்றுமனைவி கொக்கரித்தாள்.

“விட்டுக் கொடுத்து போவதுதான் வாழ்க்கைன்னு உனக்கு தெரியுமா, தெரியாதா?” என்று அம்மா பதிலுக்கு கொக்கரித்தாள். அதற்கு மேலும், என்னால் சும்மா இருக்க முடியாததால், சமையலறைக்குள் என் தலையை நீட்டினேன். “என் பக்கமா.. அம்மா பக்கமா? பதில் சொல்லுங்க?” என்று என் தலையை எதிர்பார்த்து காத்திருந்தது போல், மனைவி சீறினாள். “அம்மா பக்கம்தான்” என்று இட்லியின் மீது படிந்த தீராத காதலால், என்னையும் அறியாமல், தைரியத்தை வரவழைத்து, பதில் சொன்னேன்.

“இப்பத்தான் நீ என் பிள்ளை. குலதெய்வ உத்தரவுப்படி, நான் சொல்றதை செய்யறேன்னு ஒத்துக்கிட்டால், இன்னைக்கே, உனக்கு நம்ம பரம்பரை பலகாரம் செய்து கொடுப்பேன்.”

“ஒத்துக்கணும்னா?”

“உன் மனைவியைவிட, நீ அதிக சம்பளம் வாங்கணும்.”

“அதுக்கு நான் என்ன செய்யணும்?”

“வாழ்க்கை முழுக்க கிளார்க் வேலைதான் பார்ப்பேன்னு அடம் பிடிக்காம, டிபார்ட்மெண்ட் பரீட்சை எழுதி, பாஸ் செய்து, கூடிய சீக்கிரம் பிரமோஷன் வாங்குவேன்னு, நம்ம குலதெய்வத்தின் பேரில் சத்தியம் செய்து கொடுக்கணும். செல்பி மோகத்தை துறந்தாலே, அதற்கான டயம் கிடைக்கும்.”

“செல்பி மோகத்தைத் துறந்து, பிரமோஷன் பரீட்சைக்கான வகுப்பில் சேர்ந்து, கூடிய விரைவில் பிரமோஷன் வாங்குவேன்னு நம்ம குல தெய்வத்தின் மீது

சத்தியம்.”

அன்று மாலையே, நெய் மிளகாய் பொடியோடு கூடிய காஞ்சிபுரம் இட்லியை, பல வருடங்களுக்குப் பிறகு சுவைத்தபோது, எனக்கிருந்த வயிற்றுக் கோளாறு முற்றிலும் குணமானது போல் தோன்றியது. நாக்கில் அந்த சுவை கறையுடன், தூக்கம் என்னை தழுவியது.

“அட்வைஸ் பிடிக்காதவங்களுக்கு, நேரடியா அட்வைஸ் செய்யாமல், அவங்க அதிகம் விரும்புகிற, பயப்படுகிற விஷயத்தை வச்சு, வழிக்கு கொண்டு வரலாம்ங்கறதுக்கு இது ஒரு நல்ல உதாரணம்னு நினைக்கிறேன். அவனுக்கு பிடிச்ச இட்லி, பயப்படுகிற குல தெய்வம் ஆகியவைகளை வச்சு, கற்பனை சம்பவங்கள் மூலம், அவனுக்குள் ஒரு மனமாற்றத்தை கொண்டு வந்துட்டோம். அவர் இறந்தபிறகு, அவருக்கு ரொம்ப பிடிச்ச காஞ்சிபுரம் இட்லி செய்வதைத் தவிர்த்துவிட்டேன். உன்னைவிட அதிக சம்பளம் வாங்கணும்னு சொன்னவுடன், அவன் சிலிர்த்து எழுந்துட்டான். வாழ்க்கையில் முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் போட்டி எண்ணம் நல்லதுதான்னு நான் நினைக்கிறேன். நீ என்னம்மா நினைக்கிறாய்?”

“அவருடைய வீக்னஸை விவரிச்சு, கல்யாண தினத்திலிருந்து, நீங்க சொல்லிக் கொடுத்தது போல் நடித்து, அவரை நம்ம வழிக்கு கொண்டு வந்ததில் சந்தோஷம்தான். உங்க சாதுர்யமான அணுகுமுறைக்கு தாராளமாக, “ஓ’ போடலாம் அத்தை..” என்று மாமியார் மருமகளுக்கு இடையேயான இந்த சம்பாஷணை, ஆழ்ந்த உறக்கத்திலிருந்த என் காதில் விழுந்திருக்க வாய்ப்பில்லை!




## பம்மல் சம்பந்த முதலியார்– நீதிபதி... நவீன நாடகங்களின் முன்னோடி.

முத்தமிழில் உரைநடைத் தமிழாக விளங்குவது நாடகத் தமிழ். நடிகர், நடிகைகள், ஒளி அமைப்பு, ஒப்பனை, ஆடை அலங்காரம், அரங்க அமைப்பு என நாடகக் கலையின் மீது அதீத ஆர்வம்கொண்ட அனைவரும் தன் திறமையை வெளிப்படுத்தி பார்வையாளர்களைக் கவர்ந்தனர். சமூக, வரலாற்று, புராண, குடும்ப நாடகங்கள் எனப் பல்வேறு வகையான நாடகங்களின் அன்றைய வீச்சு, நாட்டின் அரசியல் அமைப்பையே மாற்றி அமைக்கக்கூடிய சக்தி வாய்ந்ததாக இருந்தது. அப்படிப்பட்ட தமிழ் நாடகங்களின் தந்தை எனப் போற்றும் பம்மல் சம்பந்த முதலியாரைப் பற்றி இன்று தெரிந்துகொள்வதில், தமிழர்களாகிய நாம் ஒவ்வொருவரும் பெருமைகொள்ளலாம்.

பம்மல் சம்பந்த முதலியார் தமிழ் நாடகத் தந்தை என்ற பெயருடன் வழங்கப்பட்டவர். தமிழ் நாடகங்களை முதன்முதலில் உரைநடையில் எழுதியவர். வழக்கறிஞர், நீதியரசர், நாடகாசிரியர், மேடை நாடக நடிகர், எழுத்தாளர், நாடக இயக்குனர் என்ற பல பரிமாணங்களைக் கொண்டவர்.முதன்முதலில் புஷ்பவல்லி என்ற சமூக நாடகத்தை 1883ல் எழுதி நடித்தார்.1891ல் சென்னையில் சுகுணவிலாச சபா என்ற அமெச்சூர் நாடகசபையைத் தோற்றுவித்து நாடகங்களை எழுதி தாமே நடித்து பிற அறிஞர்களையும் நடிக்க வைத்த சான்றோர் இவர்.

1873—ல் பம்மலில் பிறந்த சம்பந்த முதலியார், சென்னையையே தனக்கான வாழ்க்கைக் களமாக அமைத்துக்கொண்டார். திண்ணைப் பள்ளிக்கூடத்தில் தொடங்கிய அவரின் கல்வி, நவீன ஆங்கில அறிவுடன் சிறந்து விளங்கியது. கல்விக்கு நடுவே சமூக மேம்பாடு குறித்தும் அவர் இளமையிலேயே ஆழ சிந்திக்கவும் தொடங்கினார். அதன் வெளிப்பாடாகவே ஏதேனும் ஒரு வகையில் மக்கள் மத்தியில் விழிப்புஉணர்வு, கருத்துப்பரிமாற்றம், தகவல் பகிர்தல் போன்ற சமூகநலச் செயல்களைச் செய்ய எண்ணினார்.

மாநிலக் கல்லூரியில் பி.ஏ படித்து, சென்னைப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுப் பாடப்பிரிவு, சட்டக் கல்லூரியில் சட்டம் என, தன்னை சகல துறைகளிலும் தேர்ந்த அறிஞனாக வடிவமைத்துக்கொண்டார். வழக்குகளைத் திறம்பட வாதாடி, குறைந்த செலவிலும் காலத்திலும் முடித்து, தன்னை நாடி வந்தோருக்கு நாளும் நலம் பல செய்தார். கடமையை கண்ணியத்தோடு ஆற்றிய இவரை, காலம் நீதிபதியாக்கி அழகு பார்த்தது. சிறந்த வழக்குரைஞராக எல்லோராலும் பாராட்டுப் பெறும் வகையில் உயர்ந்தார் சம்பந்த முதலியார். ஒவ்வொரு வழக்கிலும் தான் வழங்கும் நீதி, அறத்தைப் பாதுகாக்கும் வகையில் பார்த்துக்கொண்டார்.

பல்வேறு மொழிகளில் நிகழ்ந்த சுவாரஸ்யமான சம்பவங்களைத் தொகுத்து தமிழ் நாடகமாக அரங்கேற்றி, உரையாடல் மூலம் சமூகக் கலாசார உணர்வுகளைப் பரப்பினார். கால நேரம் நிர்ணயிக்காமல் நடந்துகொண்டிருந்த நாடகத்தை, 3 மணி நேரம் என ஒரு கால அளவுக்குள் கொண்டுவந்து புதுமையைப் படைத்தார். கதை, நடிப்பு, இயக்கம், நவீன கருத்துகள்கொண்ட வசன உச்சரிப்பு, சீர்த்திருத்தமான காட்சியமைப்பு, நடிப்பு, ஆக்கமான சிந்தனை, தன்னைத்தானே ஊக்கப்படுத்திக்கொள்ளும் உழைப்பு இவற்றால் அபாரமான படைப்புகள் நாளும் வெளிவந்தன. கால நிகழ்வுகளை கவனத்தில்கொண்ட தேடல், கலை மற்றும் அரசியல் நிகழ்வுகளுக்கு ஏற்ற செயல்படும் பாங்கு, மேல்நாட்டு அமைப்பு முறையிலான நாடகமாக்கம் எனச் செயல்பட்டு, அசைவற்றுப்போயிருந்த நாடகத்துக்கு உயிர் கொடுத்ததால்தான் இவரை `தமிழ் நாடகத் தந்தை' என வரலாறு வாரி அணைத்துக்கொள்கிறது. இதனால் தமிழ் நாடகத்தில் தலைப்பு தொடங்கி தொழில்நுட்பம் வரையிலான அனைத்துத் துறையிலும் புதுமையைப் புகுத்தி, அப்போதைய சமூக மாற்றத்துக்கு ஏற்ப ஆக்கக்கூறுகளைச் செய்ய முயன்றார் பம்மல் சம்பந்த முதலியார்.

பம்மல் விஜயரங்க முதலியார் — மாணிக்கவேலு அம்மாளுக்கும் பிப்ரவரி 1ம் நாள் 1873 அன்று பிறந்தார். இவர் தந்தை வேதரங்கம் முதலியார் முதலில் தமிழ் ஆசிரியராகவும், பின்னர் பள்ளிக் கல்வித் துறையில் ஆய்வாளராகவும் இருந்தவர்.


# பெருமை

**சுனில் கிருஷ்ணன்**

அவர் தானே தமிழ் நூல்களை வெளியிட்டு வந்தார். இதன் காரணமாக அவர்கள் வீட்டில் ஆங்கிலத்திலும் தமிழிலும் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட புத்தகங்கள் இருந்தன. படிக்கத் தெரிந்த நாள் முதல் சம்பந்தம் இப்புத்தகங்களையெல்லாம் ஒன்றொன்றாக ஆர்வமுடன் படித்து வந்தார். கோவிந்தப்ப நாயக்கர் உயர்நிலைப் பள்ளி, பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி, மாநிலக் கல்லூரி ஆகிய கல்வி நிலையங்களில் கல்வி பயின்றார். சட்டக்கல்வி பயின்று வழக்கறிஞரான இவர் 1924 முதல் 1928 வரை நீதிமன்றத் தலைவராகவும் பணி செய்தார்.

நாடக எழுத்துப்பணி

சிறு வயதிலேயே ஆங்கில, தமிழ் நாடகங்களைப் பார்த்தவர், தமிழ் நாடகப் போக்கில் இழிந்த நிலையைக் கண்டு அதில் வெறுப்புற்றிருந்தார். 1891 இல் பெல்லாரியிலிருந்து வந்த கிருஷ்ணமாச்சார்லு என்ற ஆந்திர நடிகர் நடித்த நாடகங்கள் இவருக்கு தமிழ் நாடகங்கள் மேல் பற்றினை உண்டு பண்ணின. அவரது நாடகக் குழுவில் வழக்கறிஞர்களும், மருத்துவர்களும், பட்டப்படிப்பு முடித்தவர்களும் சேர்ந்திருப்பதைக் கண்ட சம்பந்த முதலியார் தாமும் அது போல ஒரு நாடகக் குழு அமைக்கத் திட்டமிட்டார். சீரழிந்த நிலையில் அவதிப்படும் தமிழ் நாடகத்தை சீர்படுத்திட வேண்டும் என்ற இவரது ஆவலும் இவரை நாடக உலகிற்குள் புகுத்தியது. நண்பர்கள் சிலருடன் சென்னை ஜார்ஜ் டவுனில், 1891 ஜூலை 1 ஆம் நாள், “சுகுண விலாச சபை” என்ற நாடகக் குழுவை உருவாக்கினார்.



நாடகம் என்றால் தெருக்கூத்து என்றும், சிற்றூர் மக்கள் மட்டுமே காண்பவர்கள் என்ற நிலையை மாற்றி, நகரங்களிலே நல்ல மேடையமைத்து, பல வகை நாடகங்களை நடத்திக் காட்டினார்.

உயர்குடியில் பிறந்தவர்களையும், கற்றவர்களையும், அறிஞர்களையும், சம்பந்தம் தம்முடைய நாடகங்களில் நடிக்கச் செய்தார். இவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் சர். சி.பி.ராமஸ்வாமி அய்யர், எஸ்.சத்தியமூர்த்தி, எம்.கந்தசாமி முதலியார் (எம். கே. ராதாவின் தந்தை), சர். ஆர்.கே. ஷண்முகம் செட்டியார், வி.வி.ஸ்ரீனிவாச அய்யங்கார், வி.சி.கோபாலரத்தினம் ஆகியோர்



பெற்றார்.

1959 இல் பத்மபூஷண் என்ற பட்டத்தையும் பெற்றார்.[4]

தன் நாடகங்களில் சிலவற்றில் செய்யுள், கீர்த்தனை முதலியவற்றையும் அறிமுகப்படுத்தினார்.

தமிழ் நாடகம் மக்களின் பார்வையில் உயர்ந்த மதிப்புக்குரியதாகத் திகழ்வதற்கு முதற்காரணமானார்.

தமிழில் ஷேக்ஸ்பியர் நாடகங்கள்

ஷேக்ஸ்பியரின் ஆங்கில நாடங்கங்களை அவைகளின் சுவையோ நயமோ குறையாமல் தமிழ் நாடகங்களாக மொழிபெயர்த்தார்.

குறிப்பிடத்தக்கவர்கள். நாடகக் கலையைத் திட்டமிட்டு முறையாக வளர்க்க எண்ணிய சம்பந்த முதலியார் அதற்காக ஓர் அமைப்பை உருவாக்க விரும்பினார். அவ்வாறு உருவான அமைப்பே சுகுணவிலாச சபை. இது, தொழில் முறை அல்லாத நாடக சபையாகும். இதனை, ஆங்கிலத்தில் அமெச்சூர் சபா என்று கூறுவர். 1891ஆம் ஆண்டு இச்சபை நிறுவப்பட்டது. குணவிலாச சபையின் தோற்றமும், சம்பந்த முதலியார் அச்சபைக்காக எழுதிய பல்வேறு வகைப்பட்ட நாடகங்களும் தமிழ் நாட்டில் பல அமெச்சூர் நாடக சபைகளைத் தோற்றுவித்தன.அமெச்சூர் நாடக சபையாகத் தன் சபையைச் சம்பந்த முதலியார் அமைத்து நாடகத்தை உருவாக்கி நடித்தார். அதே வேளையில் அவரது நாடகங்கள் தொழில் முறை நாடக சபையினராலும் திறம்பட நடித்துக் காட்டப்பட்டன.

சுகுணவிலாச சபையில் ஆர்.கே. சண்முகம் செட்டியார், சத்தியமூர்த்தி அய்யர், சர்.சி.பி. இராமசாமி அய்யர் போன்ற பெரியவர்களெல்லாம் நடித்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். நாடகக் கலைக்குத் தம் 81வது வயது வரை பெரும்பணி ஆற்றினார். கண்பார்வை மங்கிய நிலையிலும் தாம் சொல்லியே பிறரை எழுத வைத்தார்.

விருதுகளும் சிறப்புகளும்

22வது வயதில் அவருடைய முதல் நாடகம் ‘லீலாவதி—சுலோசனா’ என்ற பெயருடன் அரங்கேறியது.

மொத்தம் 80 நாடகங்கள் எழுதினார்.

1959 இல் சங்கீத நாடக அகாதமி விருது[3]

1916 இல் நாடகப் பேராசிரியர் என்ற விருது

திரைப்படங்களாக்கப்பட்ட நாடகங்கள்

பம்மல் சம்பந்த முதலியாரின் பல நாடகங்கள் திரைப்படங்களாக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில

காலவா ரிஷி (1932)

சதி சுலோச்சனா (1934, கதை, வசனம், இயக்கம், நடிப்பு)

மனோகரா (1936, கதை, வசனம், இயக்கம், நடிப்பு)

ரத்னாவளி (1935)

யயாதி (1938)

ராமலிங்க சுவாமிகள் (1939)

சந்திரஹரி (1941)

ஊர்வசி சாகசம் (1940)

தாசிப் பெண் (1943)

சபாபதி (1941)

வேதாள உலகம் (1948)

நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்

பம்மல் சம்பந்த முதலியார் இயற்றி, தமிழ் நாட்டரசு நாட்டுடைமையாக்கிய நூல்களின் பட்டியல்.

தமிழ்

இந்தியனும்—ஹிட்லரும்

இல்லறமும் துறவறமும்

என் சுயசரிதை

என் தந்தை தாயர்

ஒன்பது குட்டி நாடகங்கள்

ஓர் விருந்து அல்லது சபாபதி நான்காம் பாகம்

கலையோ—காதலோ? அல்லது நட்சத்திரங்களின் காதல்

கள்வர் தலைவன்

காதலர் கண்கள்

காலக் குறிப்புகள்

குறமகள், வைகுண்ட முதலியார் (இரு நாடகங்கள், 1934)

சபாபதி

சபாபதி முதலியாரும்—பேசும் படமும்
நான் குற்றவாளி
சாதாரண உணவுப் பொருள்களின் குணங்கள்
தமிழ் அன்னை பிறந்து வளர்ந்த கதை (முதல் பாகம்)
தமிழ் அன்னை பிறந்து வளர்ந்த கதை (இரண்டாம் பாகம்)
தீபாவளி வரிசை
தீயின் சிறு திவலை
நாடகத் தமிழ்
நான் கண்ட நாடகக் கலைஞர்கள்
நீண்ட ஆயுளும் தேக ஆரோக்யமும்
பலவகை பூங்கொத்து
மனை ஆட்சி
மனோகரா
மூன்று நகைச்சுவை நாடகங்கள்
யயாதி
வாணீபுர வணிகன்
விடுதிப் புஷ்பங்கள்
ஆங்கிலம்

Amaladitya
As you like it
an Adaptation of Shakespear's as We Sow-so We Reap
Blessed in a Wife
Brahmin Versus Non-brahmin
Bricks Between and at Any Cost
Chandrahari
Dikshithar Stories
Harischandra
Humorous Essays
Lord Buddha and many more to his credit..

நல்ல சிந்தனைகளுக்கும் தெளிவான செயல்களுக்கும் மக்கள் மத்தியில் எழுந்த வரவேற்பின் காரணமாக, உடன் இருந்த வி.கிருஷ்ணமாச்சார்லு மாதிரியான நண்பர்களின் உதவியுடன் 1891—ம் ஆண்டு சென்னையில் `சுகுண விலாச சபை' என்ற நாடகக் குழுவைத் தொடங்கினார். அவர் எழுதிய நாடகங்களில் `புஷ்பவல்லி', `அமலாதித்யன்', `மனோகரா' போன்றவை முக்கியமானவை. இவரது குழுவில் ஆண்களே பெண் வேடமிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்க் கலை உலகில் நாடகத் துறையின் மூலம் ஆழ்ந்த தொண்டாற்றினார். இவரின் சாதனைகளை கௌரவப்படுத்தும்விதத்தில் 1959—ம் ஆண்டு `பத்ம பூஷண்' விருதை அளித்துப் பாராட்டியது இந்திய அரசு.

பம்மல் சம்பந்த முதலியாரின் மனோகரா நாடகம் 1936 ஆம் ஆண்டு அரங்கேறியது. பம்மல் சம்பந்த முதலியார் காலத்திலேயே மனோகரா நாடகம் 859 முறை அரங்கேற்றம் செய்யப்பட்டது வரலாறு.




இந்த மனோகரா நாடகத்தின் மூலக் கதையை வைத்து கொண்டுதான் மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி, மனோகரா எனும் புகழ் பெற்ற சினிமாவுக்கு வசனம் எழுதினார். சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் கோவிலில் பம்மல் சம்பந்த முதலியார் குடும்பத்துக்கு இப்போதும் முன்னுரிமை உண்டு. தமிழ் நாடக துறைக்கு ஆகப் பெரும் அளப்பரிய சேவையாற்றியவர் பம்மல் சம்பந்த முதலியார். சென்னை நாளை கொண்டாடும் அனைவரும் சென்னையின் அடையாளமாக ஒன்றி நிற்கும் சுகுண விலாச சபையையும் பம்மலாரையும் நினைவில் கொள்வது வரலாற்று கடமை!

கலைத்தாயின் இளைய மகனாக காலம் கடத்திய இவர், 1964—ல் கலை உலகப் பணியையும் பயணத்தையும் முடித்துக்கொண்டார். இருப்பினும், கலையின் வழியே மக்கள் மனங்களில் இன்றும் மறையாதிருக்கும் அவரைப் போற்றி, அவரின் உன்னதப் படைப்புகளைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வதே, அவரின் நினைவுதினமான இன்று நாம் அவருக்கு செய்யும் உண்மையான அஞ்சலி.




## மூன்றாம் பாகம் : பிக்ஷுவின் காதல்

## புலிகேசியும் சிவகாமியும் 37

**ச**த்ருக்னன் கூறி வந்த வரலாற்றில் மேற்கண்ட இடத்திற்கு வந்ததும் மாமல்லருக்கு மூச்சு நின்று விடும் போல் இருந்தது. மேலே நடந்ததை தெரிந்து கொள்ள அவர் அவ்வளவு ஆவலாக இருந்தார். ஒரு கணநேரத்தில் அவருடைய மனம் என்னவெல்லாமோ கற்பனை செய்தது.சத்ருக்னனும் சிவகாமியும் புறப்பட்டு ஓடிவந்திருக்கவேண்டும் என்றும், மறுபடியும் வழியில் அவளுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்திருக்க வேண்டுமென்று நினைத்தார். அவளை அந்த ஆபத்திலிருந்து மீட்டுக் கொண்டு வருவதற்கு அவருடைய உள்ளம் துடித்தது.

“சத்ருக்னா ஏன் இப்படிக் கதையை வளர்த்திக் கொண்டிருக்கிறாய்? சிவகாமியை எங்கே விட்டு விட்டு வந்தாய்? சீக்கிரம் சொல்லு” என்று ஆத்திரத்துடன் கேட்டார்.

“பிரபு, சிவகாமியம்மை இப்போது வடபெண்ணை நதிக்கு அப்பால் போய்க்கொண்டிருப்பார்! பொன்முகலி ஆற்றுக்கும் வடபெண்ணைக்கும் மத்தியில் அவரை விட்டு விட்டு வந்தேன், பாவி!” என்று சத்ருக்னன் துயரக்குரலில் கூறினான்.

மாமல்லரின் கண்களில் தழற்பொறி பறந்தது. புலிகேசியிடம் வந்த கோபத்தைக் காட்டிலும் சத்ருக்னனிடம் அதிக கோபம் வந்ததாகத் தேன்றியது

“இதென்ன? சிவகாமியைப் புலிகேசியிடம் விட்டுவிட்டு நீ மட்டும் தப்பி வந்தாயா? சத்ருக்னா! என்னிடம் விளையாட வேண்டாம். சீக்கிரம் விஷயத்தைச்சொல்!” என்று கர்ஜனை புரிந்தார்.

அப்போது ஆயனார், மாமல்லருக்குக் காரணம் விளங்காத உற்சாகம் நிறைந்த குரலில் , “பிரபு! சத்ருக்னன் சொல்கிறபடி சொல்லி வரட்டும். தயவு செய்து சற்றுப் பொறுமையாகக் கேளுங்கள்!” என்றார். சத்ருக்னன் மறுபடியும் சொல்லத் தொடங்கினான்:

“சிவகாமி அம்மை உடனே என்னுடைய யோசனையைச் சந்தோஷமாய் ஒப்புக்கொண்டு தப்பிச்செல்ல இணங்குவார் என்று எதிர்பார்த்தேன். இதில் பெறும் ஏமாற்றம் அடைந்தேன். அதுவரை தைரியமாய் இருந்த சிவகாமி அம்மை என்னுடைய யோசனையைக் கேட்டதும் திடீரென்று விம்மி அழத்தொடங்கினார். முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு தேம்பினார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. அவரைச் சமாதானப்படுத்த முயன்றேன். அப்போது சிவகாமி அம்மை என்னை வெறித்துப் பார்த்து, ‘அவருடைய வாக்குறுதியை நம்பி இந்த கதி அடைந்தேன்’ என்றார். உடனே, ‘இல்லை, இல்லை. அவர் பேச்சைக் கேளாததால் இந்த விபரீதம் வந்தது. இனி அவருடைய முகத்தில் எப்படி விழிப்பேன்?’ என்றார். இன்னும் என்னவெல்லாமோ சம்பந்தமற்ற வார்த்தைகளைச் சொன்னார். இதனாலெல்லாம் என் திகைப்பு அதிகமாயிற்று. ஒருவேளை அவருக்குச் சித்தப்பிரமை ஏற்பட்டுவிட்டதோ என்று மிகவும் பயந்து போனேன்.

பிறகு, சளுக்கியர் படை நம் கிராமங்களில் செய்த அட்டூழியங்களைத் தம் கண்ணால் பார்த்தது பற்றி சிவகாமி அம்மை சொல்ல ஆரம்பித்தார். அப்புறந்தான் அவர் அறிவுத்தெளிவைப் பற்றி எனக்கு ஏற்பட்ட சந்தேகம் நீங்கிற்று. அவர் சொன்னவற்றை யெல்லாம் சிறிது நேரம் நான் பொறுமையாகக் கேடடேன். பிறகு, ‘அம்மா! மகேந்திர பல்லவரும் மாமல்லரும் இதற்கெல்லாம் பழிக்குப் பழி வாங்குவார்கள்!’ என்றேன். அப்போது சிவகாமி அம்மைக்கு ஏற்பட்ட ஆத்திரத்தையும் ஆவேசத்தையும் பார்க்க வேண்டுமே? ‘ஆம், சத்ருக்னா! ஆம்! பழிக்குப் பழி வாங்கியே தீர வேண்டும்‘ என்று அவர் அப்போது போட்ட கூச்சலினால் காவலர்கள் சந்தேகம் கொள்ளாமல் இருக்க வேண்டுமே என்று எனக்கு பயமாய்ப் போய்விட்டது. நல்லவேளை அங்கே ஸ்தரீகள் துக்கத்திலே புலம்புவதும் பிதற்றுவதும் சகஜமாய் இருந்தபடியால், சிவகாமி அம்மையின் கூச்சல் காவலர்களின் கவனத்தைக் கவரவில்லை.



# சபதம் 37

கல்கி

பிறகு நான் அவரை மெல்ல மெல்ல சாந்தப்படுத்தினேன். மறுபடியும் தப்பிச்செல்லும் யோசனையைக்கூறினேன்.அப்போது அவர் என்னை வெறித்துப் பார்த்து, “ஐயா என்னைப்போல் ஆயிரம் பெண்கள் இருக்கிறார்கள். இவர்களில் சிலர் கட்டிய புருஷனை விட்டுவிட்டு வந்திருக்கிறார்கள். சிலர் கைக்குழந்தைகளை கதறவிட்டு வந்திருக்கிறார்கள். இவர்களை எல்லாம் அந்த சாளுக்கிய ராட்சதர்கள் கொண்டுபோகும்படி விட்டுவிட்டு நான்மட்டும் தப்பிச்செல்லவேண்டுமா? எனக்கு தாலிகட்டிய கணவன் இல்லை.. வயிற்றில் பிறந்த குழந்தையும் இல்லை. நான் எக்கேடு கெட்டுப்போனால் என்ன? என்னை விட்டுவிடுங்கள்.இங்குள்ள கைக்குழந்தைக்காரிகளில் யாராவது ஒருத்தியைக் அழைத்துப்போங்கள். உங்களுக்கு புண்ணியம் உண்டாகும்‘ என்றார். என்மனமும் இளகிவிட்டது. ஆயினும் மனதை கெட்டிபடுத்திக்கொண்டு, ‘அம்மா! மகேந்திர சக்கிரவர்த்தி எனக்கு இட்ட கட்டளை தங்களைப் பத்திரமாய் அழைத்து வரவேண்டும் என்பதுதான். ‘நான் சக்கிரவர்த்தியின் ஊழியன். அவருடைய கட்டளையை நிறைவேற்றவேண்டியவன்’ என்றேன். இதனால் அவருடைய மனம் மாறாது என்று எனக்குத் தெரிந்தே இருந்தது. ஆதலின் மறுபடியும் ‘அம்மா! உங்களுக்கு புருஷனில்லை. குழந்தையில்லை என்பது உண்மைதான். ஆனால் தந்தை ஒருவர் இருக்கிறார் அல்லவா? ஏகபுத்திரியாகிய தங்களைப் பிரிந்து அவர் மனம் என்ன பாடுபடும்? அதை யோசிக்க வேண்டாமா’ என்றேன்.



சிவகாமி அம்மையின் கண்களில் அப்போது கண்ணீர் துளித்தது. தழுதழுத்த குரலில், ‘ஆம் என் தந்தைக்கு பெரிய துரோகம் செய்துவிட்டேன் . ஐயோ! அவர் பிழைத்தாரோ இல்லையோ?’ என்றார். ‘அம்மா! அவரை பிழைப்பிக்க விரும்பினால் நீங்கள் என்னுடன் உடனே புறப்பட வேண்டும்!’ என்றேன் நான். சிவகாமி அம்மை மறுபடியும் முகத்தைக் கையால் மூடிக்கொண்டு விம்மினாள். சீக்கிரம் கையை எடுத்துவிட்டு, ‘ஐயா இன்று ஒரு நாளைக்கு அவகாசம் கொடுங்கள். என் உடம்பும் உள்ளமும் சோர்ந்து போயிருக்கின்றன. இப்போது நான் புறப்பட எண்ணினாலும் ஓர் அடி கூட என்னால் எடுத்து வைக்க முடியாது. நாளைக்கு முடிவாகச் சொல்கிறேன்’ என்றார். நானும் அவருக்கு ஒருநாள் அவகாசம் கொடுப்பது நல்லது என்று எண்ணி, ‘ஆகட்டும், அம்மா! ஒருநாளில் ஒன்றும் குடிமுழுகிப் போகவில்லை. நாளைக்கே முடிவுசெய்யலாம்‘ என்று சொன்னேன்.

மறுநாள் இராத்திரி எப்படியாவது அவருடைய மனத்தைத் திருப்பி அவரையும் அழைத்துக் கொண்டு திரும்பலாம் என்று எண்ணி இருந்தேன். ஆனால் மறுநாள் மாலை நான் சற்றும் எதிர்பாராத சம்பவம் நடந்துவிட்டது. சளுக்கிய சக்ரவர்த்தி புலிகேசி பொன்முகலியாற்றைக்கடந்து வந்து எங்களுடன் சேர்ந்து கொண்டார். அவருடன் சிறு சைன்யமும் வந்தது! தளபதி சசாங்கனை அங்கேயே காவலுக்கு நிறுத்தி விட்டு இவர் மட்டும் முன்னால் செல்ல தீர்மானித்து வந்திருக்கிறார் என்று ஊகித்தேன். அதன்படியே அன்று இரவுக்கிரவே எல்லோரும் வடக்கு நோக்கி பிரயாணமானோம். எனக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தையும் துக்கத்தையும் சொல்லி முடியாது. வழியில் சிவகாமி அம்மையோடு தனியாயிருக்க நேர்ந்த போது, ‘அம்மா! இப்படி செய்து விட்டீர்களே!’ என்றேன். ‘நானா செய்தேன்? விதி இப்படி இருக்கும் போது நான் என்ன செய்வேன்!’ என்றார் சிவகாமி.

இரண்டு நாள் பிரயாணத்திற்குப் பிறகு

மூன்றாவது நாள் திருவேங்கடமலையின் அடிவாரத்தில் சென்று தங்கினோம். முதல் இரண்டுநாள் பிரயாணத்தில் புலிகேசி நாங்கள் தங்கியிருந்த பக்கம் வரவேயில்லை. மூன்றாம் நாள் நாங்கள் ஒரு பாறையின் பக்கத்தில் தங்கி இருந்தோம். சமீபத்தில் குதிரைகளின் காலடிச் சத்தம் கேட்டது. சிறிது நேரத்திற்கெல்லாம் புலிகேசியும் இன்னும் சில குதிரை வீரர்களும் அந்தப் பாறையின் திருப்பத்தில் வந்து நின்றார்கள். சக்ரவர்த்தி குதிரை மேலிறிங்கி எங்கள் அருகில் வருவாரோ என்று நான் எதிர்பார்த்தேன். அவ்விதம் நடைபெறவில்லை. சற்று நின்று பார்த்துவிட்டுச் சக்ரவர்த்தி குதிரையை திருப்ப யத்தனித்த போதுதான் சற்றும் எதிர்பாராத அதிசயச்சம்பவம் நடைபெற்றது. கண்ணை மூடித்திறக்கும் நேரத்தில் சிவகாமி பெண்கள் கூட்டத்தின் மத்தியிலிருந்து ஒரே பாய்ச்சலாக பாய்ந்து ஓடினார். புலிகேசியின் குதிரைக்கு எதிரில் வழிமறித்து நின்று,'சக்கிரவர்த்தி! ஒரு விண்ணப்பம்' என்று அலறினார்.

சிவகாமியம்மையின் அலறலைக்கேட்டு அந்தக் கல்நெஞ்சன் புலிகேசி மனம்கூட இளகி இருக்க வேண்டும். உடனே, சிவகாமியின் அருகில் வந்தார். 'பெண்ணே! என்ன விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்?' என்று கேட்டார். ஆகா! அப்போது சிவகாமி அம்மையின் வாக்கிலிருந்து வந்த ஆவேச மொழிகளை எவ்விதம் வர்ணிப்பேன்! அத்தனை தைரியமும், சாமர்த்தியமும், வாக்கு வன்மையும் அவருக்கு எங்கிருந்துதான் வந்ததோ, அறியேன். கம்பீரமாகப் புலிகேசியை நிமிர்ந்து பார்த்து, தழுதழுத்த குரலில், சிவகாமி அம்மை கூறிய மொழிகளை ஏதோ எனக்கு ஞாபகம் உள்ள வரையில் கூறுகிறேன்.

'ஐயா! பூமண்டலத்தை ஆளும் மன்னர்களாகிய நீங்கள் உங்களுடைய வீரத்தையும் புகழையும் நிலைநாட்டிக்கொள்ள யுத்தம் செய்கிறீர்கள். இன்றைக்கு எதிரிகளாய் இருக்கிறீர்கள். நாளைக்குச் சினேகிதர்களாகிறீர்கள். இன்றைக்கு ஒருவனுடைய அரண்மனையில் இன்னொருவர் விருந்தாளியாயிருக்கிறீர்கள். மறுநாள் போர்களத்தில் யுத்தம் செய்கிறீர்கள். உங்களுடைய சண்டையிலே ஏழைப் பெண்களாகிய எங்களை ஏன் வாட்ட வேண்டும்? உங்களுக்கு நாங்கள் என்ன கெடுதல் செய்தோம்? கருணை கூர்ந்து எங்களையெல்லாம் திருப்பி அனுப்பி விடுங்கள். இங்கே சிறை பிடித்து வைத்திருக்கும் பெண்களில் சிலர் கைக்குழந்தைகளை கதறவிட்டு வந்திருக்கிறார்கள். இன்னும் அநேகர் கையில் திருமணக் கங்கணத்துடன் வந்திருக்கிறார்கள். இவர்களை எல்லாம் நீங்கள் விடுதலை செய்து அனுப்பாவிட்டால், தங்களுடைய நகரமாகிய வாதாபியை அடைவதற்குள் அவர்களுக்குப் பைத்தியம் பிடித்துவிடும்.திக்விஜயம் செய்து விட்டுத் தலைநகருக்கு திரும்பும்போது சித்தப் பிரமை பிடித்த ஆயிரம் ஸ்தரீகளை அழைத்துக்கொண்டு போவீர்களா? அதில் உங்களுக்கு என்ன லாபம்? ஆயிரம் பெண்கள் மனமார வாயாரத் தங்களை வாழ்த்திக் கொண்டு வீடு திரும்பும்படி செய்யுங்கள்!' — இப்படிக் கல்லுங் கரையுமாறு சிவகாமியம்மை கேட்டதற்கு, 'பெண்ணே! உன்னுடைய பாவ அபிநயக்கலை சாமர்த்தியங்களை யெல்லாம் நாட்டியக் கச்சேரியில் காட்டவேண்டும். இங்கே போர்களத்திலே காட்டி என்ன பிரயோஜனம்!' என்றான் அந்த ரஸிகத்தன்மையற்ற நிர்மூடன்!......"

சத்ருக்னன் இவ்வாறு சொன்னபோது, மாமல்லர் ஓர் நெடுமூச்சுவிட்டு,"ஆகா! ஆயனாரின் மகள் அந்த நீசனிடம் போய்க் காலில் வீழ்ந்து வரம் கேட்டாள் அல்லவா? அவளுக்கு வேண்டியதுதான்!" என்று கொதிப்புடன் கூறினார்.

சத்ருக்னன் மேலே சொன்னான்: "ஆம் பிரபு! சிவகாமி அம்மையும் தங்களைப்போலவே எண்ணியதாகத் தோன்றியது. புலிகேசியின் மறுமொழியைக்கேட்டு அவர் தலையைக் குனிந்து கொண்டார். சிறிது நேரம் தரையைப் பார்த்த வண்ணம் இருந்தார். அப்போது அந்த சண்டாளப்பாவி, 'பெண்ணே! உன் அபிநய சாகஸத்தைக்கண்டு நான் ஏமாந்து விடமாட்டேன். ஆனால் உன் பேச்சில் கொஞ்சம் நியாயம் இருக்கிறது. ஆகையால் உன்வேண்டுகோளை நிறைவேற்ற இணங்குகிறேன். ஆனால் அதற்கு ஒரு நிபந்தனை. நீ இந்தப் பெண்களுக்காக மிகவும் இரங்கிப் பேசினாய். உன்னுடைய இரக்கம் வெறும் பாசாங்கு இல்லை என்பதை நீ நிரூபிக்க வேண்டும். இவர்கள் கட்டிய கணவனை பிரிந்து வந்தார்கள் என்றும், கைக் குழந்தையைப் பிரிந்து வந்தவர்கள் என்றும் சொன்னாயல்லவா? ஆனால் உனக்கு கணவனுமில்லை. குழந்தையுமில்லை. நீ என்னுடன் வாதாபிக்கு வர சம்மதிக்கிறாயா, சொல்லு! சம்மதித்தால் உன்னைத்தவிர இவர்கள் எல்லோரையுமே இந்தக்கணமே விடுதலை செய்து அனுப்பி விடுகிறேன்' என்றான். அந்த மொழியைக் கேட்டதும் அந்தப் பாவியை கொன்றுவிடலாமா என்று எண்ணினேன்."

மாமல்லர் குறுக்கிட்டு, "நிபந்தனைக்குச் சிவகாமி சம்மதித்தாளா?" என்று குரோதம் ததும்பிய குரலில் கேட்டார்.

"ஆம் பிரபு! சிவகாமி ஒரு கணங்கூட தாமதிக்கவில்லை. உடனே எழுந்து நின்று, 'சம்மதம், சக்கரவர்த்தி! நிபந்தனையை ஒப்புக் கொள்கிறேன்!' என்றார். அச்சமயம் சிவகாமி அம்மை நின்ற நிலையும், அவருடைய முகத் தோற்றமும் தெய்வீகமாய் இருந்தது! இராவணனுக்கு முன்னால் நின்ற சீதையையும், துரியோதனன் சபையில் நின்ற பாஞ்சாலியையும், யமன் முன்னால் வாதாடிய

சாவித்திரியையும், பாண்டியன் முன்னால் நின்ற கண்ணகியையும் ஒத்து அச்சமயம் ஆயனாரின் திருக்குமாரி விளக்கினார்.....".



"சத்ருக்னா! உன்னுடைய பரவச வர்ணனை அப்புறம் இருக்கட்டும், பின்னர் என்ன நடந்தது?" என்று மாமல்லர் கேட்டார்.

"சற்று நேரத்திற்கெல்லாம் சக்கரவர்த்தி எங்களை விடுதலை செய்யும்படி உத்தரவிட்டார். பொன்முகலி ஆறு வரையில் எங்களைத் திரும்பக் கொண்டுபோய் விட்டு விடும்படியும் சில வீரர்களுக்கு ஆக்ஞாபித்தார். அவ்வளவு நாளும் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய் இருந்த ஸ்திரீகள் எல்லோரும் இப்போது ஒரே சந்தோஷத்தில் ஆழ்ந்தார்கள். சிவகாமியைத் தலைக்குத்தலை வாழ்த்தினார்கள். ஆனால் எனக்கு இடிவிழுந்தது போல் இருந்தது. சிவகாமியின் காலில் விழுந்து 'அம்மா! உங்களைவிட்டு நான் போகமாட்டேன். சக்கிரவர்த்தியிடம் மீண்டும் வரங்கேட்டு என்னை உங்களுடனேயே வைத்துக் கொள்ளுங்கள்' என்றேன். சிவகாமி ஒரே பிடிவாதமாக, 'நீதான் முக்கியமாய்ப் போகவேண்டும். என் தந்தையிடம் போய்ச் செய்தி சொல்லவேண்டும்' என்றார். நான் எவ்வளவோ சொல்லியும் கேட்கவில்லை. கடைசியில் வேறு வழியில்லை என்று நானும் புறப்படத் தீர்மானித்தேன். மேலும் அங்கே நான் தாமதித்தால் என்னுடைய வேஷம் வெளிப்பட்டு சிவகாமிக்கும் உபயோகமில்லாமல் இங்கே வந்து சொல்ல முடியாமற் போய்விடலாம் என்று பயந்தேன். ஆகவே 'தங்கள் விருப்பம் அதுவானால் போகிறேன், அம்மா! அப்பாவிற்கு என்ன சேதி சொல்லட்டும்?' என்று கேட்டேன். 'என்னைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். வாதாபியில் நான் சௌக்கியமாயிருப்பேன் என்றும் சொல்லு. வாதாபியிலிருந்து திரும்பி வரும்போது அஜந்தா வர்ண ரகசியத்தைத் தெரிந்து கொண்டு வருவேன் என்றும் சொல்லு' என்றார் சிவகாமியம்மை..."

இவ்விதம் சத்ருக்னன் சொன்னதும் ஆயனர் துள்ளும் உற்சாகத்துடனே "பார்த்தீர்களா? பல்லவ குமாரா! சிவகாமி சௌக்கியமாய் இருக்கிறாள். அதோடு அஜந்தா இகரசியத்தையும் அறிந்து கொண்டு வருவதாக சொல்கிறாள். அதற்காக நான் பரஞ்சோதியை அனுப்பியதெல்லாம் வீணாய்ப் போய்விட்டதல்லவா? என் அருமைக் குமாரியினால் என் மனோரதம் நிறைவேறப்போகிறது! இதுமட்டுமல்ல! வாதாபிச் சக்ரவர்த்தியைப்பற்றி நமது எண்ணத்தைக்கூட மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது. அவர் ரஸிகத்தன்மையற்றவர், கலை உணர்ச்சியே இல்லாதவர் என்று எண்ணிக் கொண்டிருந்தோமே? அப்படி இருந்தால், ஆயிரம் பெண்களைத் திருப்பி அனுப்பிவிட்டு சிவகாமியை மட்டும் அழைத்துப் போயிருப்பாரா? பிரபு!..... எனக்கு மட்டும் உடம்பு குணமாக வேண்டும். குணமானதும் நானே வாதாபிக்குப் போவேன்....."

ஆயனாரின் வார்த்தைகள் மாமல்லரின் செவிகளில் நாராசம் போல் விழுந்து கொண்டிருந்தன. சிவகாமி வாதாபிக்குப் போக சம்மதித்தாள் என்றதுமே மாமல்லரை ஆயிரம் தேள்கள் ஏக காலத்தில் கொட்டுவது போலிருந்தது. சிவகாமியிடம் அவர் கொண்டுள்ள பரிசுத்தமான அன்பில் ஒருதுளி நஞ்சு அப்போது கலந்தது என்றே சொல்ல வேண்டும். சிவகாமி மனமுவந்து புலிகேசியிடம் வாதாபிக்குச் செல்ல சம்மதித்தாள் என்னும் எண்ணத்தை அவரால் சகிக்க முடியவில்லை. இந்த எண்ணத்தில் புண்பட்டிருந்த அவருடைய இருதயத்தில் கூரிய வேலை நுழைப்பது போலிருந்தது ஆயனரின் பேச்சு.

மாமல்லர் அப்போது தனிமையை விரும்பினார். பழைய தாமரைக் குளத்திற்கு போகவேண்டுமென்று அவருக்கு விருப்பம் உண்டாயிற்று. சட்டென்று ஒரு துள்ளலில் எழுந்து நின்று "சத்ருக்னா அவ்வளவு தானே விஷயம்? சிவகாமி வேறு எந்தச் செய்தியும் அனுப்பவில்லையல்லவா?" என்றார்.

சத்ருக்னன் தயக்கத்துடன் ஆயனாரைப் பார்த்தான். அவர் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருப்பதைக் கவனித்த பின்னர், சிறிது தாழ்ந்த குரலில், "பல்லவ குமாரா! சிவகாமியம்மை தங்களுக்கும் ஒரு செய்தி சொல்லியனுப்பினார். வேலின் மீது ஆணையிட்டுக் கூறிய வாக்குறுதியைத் தங்களுக்கு ஞாபகப்படுத்தச் சொன்னார். சீதாதேவி இலங்கையில் காத்திருந்தது போல் தாங்கள் வாதாபிக்கு வந்து அழைத்துப் போகும் வரையில் காத்திருப்பேன் என்று சொன்னார்." என்றான்.

சற்றுமுன் மாமல்லருக்கு இவ்வுலகம் ஒரு சூனியமான வறண்ட பாலைவனமாகக் காணப்பட்டது. இப்போது அந்தப் பாலைவனத்தில் பசுமையான ஜீவ பூமி ஒன்றும் இருப்பதாகத் தோன்றியது.

(சபதம் தொடரும்)

வாழ்வியல்



# தேனீ

## பூமியில் தேனீக்களே இல்லாவிட்டால்... அபாயம்

“உலகில் தேனீக்கள் அழிந்துவிட்டால், அடுத்த நான்கு ஆண்டுகளில் மனித இனம் அழிந்துவிடும்”, தேனீக்கள் குறித்து ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் கூறியதாகச் சொல்லப்படும் ஒரு பிரபலமான கூற்று. ஐன்ஸ்டைன் இதைக் கூறியதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்றாலும்கூட, தேனீக்கள் இல்லையென்றால் உலகின் உணவு உற்பத்தி பெரிய அளவில் பாதிக்கப்படும் என்பது மறுக்க முடியாத உண்மை.


சர்வதேச அளவில் உணவு உற்பத்தியை அதிகரிப்பது, ஊட்டச்சத்தை மேம்படுத்துவது மற்றும் பட்டினியை எதிர்த்துப் போராடுவது ஆகியவற்றில் தேனீ வளர்ப்பு மற்றும் தேனீக்களின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கும் விதத்தில், 2018 முதல் ஒவ்வோர் மே 20ஆம் தேதி உலக தேனீக்கள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

காலநிலை மாற்றம், காடுகளின் அழிப்பு, குறிப்பிட்ட ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் பயன்பாடு, காற்று மாசு போன்ற காரணங்களால் தேனீக்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாகவும் தேனீக்கள், பட்டாம்பூச்சிகள், வௌவால்கள் மற்றும் ஓசனிச்சிட்டுகள் (Hummingbirds) போன்ற மகரந்தச் சேர்க்கையாளர்கள் மனித நடவடிக்கைகளால் அதிகளவில் அச்சுறுத்தலுக்கு உள்ளாவதாகவும் ஐ.நாவின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு கூறுகிறது.

உலக உணவு உற்பத்தியில் தேனீக்களின் பங்கு என்ன? தேனீக்கள் இல்லையென்றால் என்னவாகும்? தேனீக்களை சார்ந்துள்ள உணவு உற்பத்தி ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் அறிக்கையின்படி, உலகின் மொத்த விவசாய நிலத்தில் 35 சதவீத நிலங்கள், அதாவது மனிதர்களின் உணவுப்பொருள் உற்பத்தியில் மூன்றில் ஒரு பகுதி தேனீக்கள் போன்ற மகரந்தச் சேர்க்கையாளர்களை நம்பியே உள்ளது. மகரந்தத் தூள் ஒரு தாவரத்தில் இருந்து மற்றொன்றிற்கு கடத்தப்படும் போது மகரந்தச் சேர்க்கை நடக்கும். இதனால் தாவரங்கள் பல்கிப் பெருகும். 80% மகரந்தச் சேர்க்கைக்கு தேனீ, பட்டாம்பூச்சி போன்ற உயிரினங்களே காரணம் என்கிறது ஐ.நா. அறிக்கை. தேன் சேகரிக்கும் போது தேனீக்களின் காலில் ஒட்டிக்கொள்ளும் பூக்களின் மகரந்த தூள், அடுத்தடுத்த பூக்களின் மேல் அவை உட்காரும்போது பரவும்.

இதுதான் காடுகளின், சோலைகளின் பரவலுக்கு முக்கிய காரணம். பூக்களில் உள்ள மகரந்தத்தை வெவ்வேறு பூக்களுக்குக் கடத்துவதன் மூலமாக, தேனீக்கள் தாவரங்களுக்கு மிகப்பெரிய உதவியைச் செய்கின்றன என்றே சொல்லலாம்.

“தேனீக்கள் இல்லையென்றால் காய்கறிகள், எண்ணெய் உற்பத்திக்கான பயிர்கள் மட்டுமல்லாது பாதாம், வால்நட்டுகள், காபி, கோகோ பீன்கள், தக்காளி, ஆப்பிள் போன்ற பல பயிர்களில் மகரந்தச் சேர்க்கைகள் பாதிக்கப்படும். இது மனித உணவில் ஊட்டச்சத்து குறைபாடுகளுக்கு வழிவகுக்கும்,” என்றும் ஐ.நா. அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.





# சிராஜ்

எனவே தேன் உற்பத்திக்கு மட்டுமல்லாது, உலகளவிலான உணவு உற்பத்திக்கும் தேனீக்கள் இன்றியமையாததாக உள்ளன.

தேனீக்களின் முக்கியத்துவம்

“தேனீக்கள் மட்டுமல்லாது பல பூச்சிகளையும்கூட மனிதர்கள் ஓர் உயிராகவே மதிப்பதில்லை. தேனீக்கள் என்பவை தேன் கொடுக்க மட்டும்தான் இந்த உலகத்தில் உள்ளன என்றுதானே பெரும்பாலானோர் நினைக்கிறார்கள்” என்று கூறுகிறார் கட்டுரையாளரும் காட்டுயிர் ஒளிப்படக் கலைஞருமான ஏ.சண்முகானந்தம்.


“இந்த உலகம் பூச்சிகளால் சூழப்பட்டது. இன்னும் பல வகையான பூச்சி வகைகள் கண்டுபிடிக்கப்படாமல் உள்ளன. பூச்சிகளில் முக்கியமானவை தேனீக்கள். அவற்றிலிருந்து பெறப்படும் தேனைக்கூட ஒரு இனிப்பூட்டியாகத்தான் மக்கள் பார்க்கிறார்கள். அதில் உள்ள மருத்துவ குணங்கள் பற்றி தனியாகப் பேசலாம்.” “ஆனால் தேனீக்கள் செய்யும் மகரந்தச் சேர்க்கைக்காக மனிதர்கள் அதைக் கண்டிப்பாகப் பாதுகாக்க வேண்டும். உலகின் மிகச்சிறந்த மகரந்தச் சேர்க்கையாளர் இந்த தேனீக்கள்தான். தேனீக்களின் மகரந்தச் சேர்க்கை இல்லையென்றால், தாவர இனப்பெருக்கம் கடுமையாக பாதிக்கப்படும். பின்னர் உணவு உற்பத்தி குறைந்து, மனித அழிவின் தொடக்கமாக அது இருக்கும்” என்கிறார் சண்முகானந்தம்.

பூக்களின் மகரந்தம் மற்றும் மதுரம் ஆகிய இரண்டும்தான் தேனீக்களின் உணவு என்றும், அப்போதைய பசிக்கு அதை அவை உணவாக எடுத்துக் கொள்ளும் என்றும் கூறுகிறார் சண்முகானந்தம். “குளிர் காலங்கள் மற்றும் பூ பூக்காத காலங்களில் உணவுத் தட்டுப்பாட்டைச் சமாளிக்கத்தான் தேனீக்கள் தேனைச் சேகரிக்கின்றன. பூக்கள் இருக்கும் இடத்தை அல்லது தேன் இருக்கும் திசையைத் தனது நடனத்தின் மூலம் அவை தெரியப்படுத்தும்.

உதாரணமாக தேனீக்கள் உயரப் பறந்து வாலை ஆட்டினால், சூரியன் இருக்கும் அதே திசையில் உணவு உள்ளது என்றும், கீழே பறந்து வாலை ஆட்டினால், சூரியனுக்கு நேரெதிர் திசையில் உணவு உள்ளது என்றும் அர்த்தம்” என்று கூறினார்.

தேனீக்களின் இந்த நடனம் குறித்து முதலில்






ஆய்வு செய்து அதை விளக்கியவர் விலங்கின நடத்தையியல் நிபுணர் கார்ல் வான் ஃப்ரிஷ். பூச்சிகள் குறித்த ஆராய்ச்சிகளுக்காக இவருக்கு 1973இல் நோபல் பரிசு வழங்கப்பட்டது.

படக்குறிப்பு, கட்டுரையாளர், காட்டுயிர் ஒளிப்படக்கலைஞர் ஏ.சண்முகானந்தம்.தொடர்ந்து பேசிய சண்முகானந்தம், "அதிக நறுமணமுள்ள, அழகான மல்லிகை, ரோஜா போன்ற பூக்களைத் தேடி தேனீக்கள் போவதில்லை. மாமரத்தின் பூக்கள், சூரிய காந்தி, எள், முருங்கை, குறிஞ்சி போன்றவற்றைத் தேடி தான் தேனீக்கள் அதிகம் செல்லும். எந்தப் பருவத்தில் எந்தப் பூக்கள் பூக்கும் என்பதையும் அவை அறிந்து வைத்திருக்கும்.

அதேபோல முகரும் திறன் கொண்டே பூக்கள் அல்லது உணவு எங்கு இருக்கிறது என்பதையும் அவை தெரிந்துகொள்ளும். தனித்துவமான பூக்களைக் கண்டறிந்து அவற்றிலிருந்து மட்டுமே தேன் எடுப்பது, அதைத் தனியாக சேகரிப்பது, தேர்ந்த பொறியியல் அறிவுடன் கூட்டைக் கட்டுவது என மிகவும் நுட்பமான உயிரினங்கள் இந்த தேனீக்கள். ஆனால் மனிதர்கள் இந்த தேனீக்களை மிகவும் சாதாரணமான பூச்சிகளாகப் பார்க்கிறார்கள். அதற்கு கொடுக்கு மட்டும் இல்லையென்றால் எளிதாக அவற்றை அழிக்கவும் தயாராகவே இருக்கிறார்கள்" என்று கூறுகிறார்.

தேனீக்களுக்கு ஏற்படும் ஆபத்துகள்

எந்தெந்த வழிகளில் மனிதர்களால் தேனீக்களுக்கு ஆபத்து ஏற்படுகிறது என்பதை பட்டியலிட்டு விளக்கினார் முனைவர் பிரியதர்ஷனன் தர்ம ராஜன். இவர் சூழலியல் மற்றும் சுற்றுச்சூழல் ஆராய்ச்சிக்கான அசோகா அறக்கட்டளையின் மூத்த நிபுணர். பெங்களூரில் உள்ள அசோகா அறக்கட்டளை, பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் நிலையான வளர்ச்சி குறித்த ஆய்வுகளில் ஈடுபடுகிறது.

காலநிலை மாற்றம்

"காலநிலை மாற்றம் ஒரு முக்கியமான பிரச்னை. காலநிலை மாற்றத்தால் பூமியின் வெப்பம் அதிகரிப்பதால் தேனீக்களின் வளர்சிதை மாற்ற விகிதமும் (Metabolic rate) அதிகரிக்கும். இதனால் வழக்கத்தை விட அதிக சக்தியை உணவைச் சேகரிப்பதில் தேனீக்கள் செலவழிக்க வேண்டியிருக்கும். தேனீக்கள் தாங்கள் சேகரிக்கும் தேனை தேனடையில் கொட்டிவிட்டு, அதன் நீர்த்தன்மை வற்றிப் போவதற்காக தனது இறகைத் தொடர்ந்து ஆட்டிக் கொண்டிருக்கும். தேன் கூட்டின் வெப்பநிலையை சமநிலையில் வைக்கவும் அவை இதைச் செய்யும். கூட்டில் வெப்பம் அதிகரிக்கும் போது அவை வாழ முடியாத சூழல் ஏற்படும்.

மேலும் காலநிலை மாற்றத்தால் பூக்கள் விளைச்சலும் பாதிக்கப்படுகிறது. உதாரணமாக வசந்த காலத்தின் பூக்கள் முன்னதாகவே பூத்து விடும்போது,தேனீக்கள் அதைத் தவறவிடும். பின்னர் வசந்த காலத்தில் உணவின்றி மடிந்துபோகும்" என்கிறார் முனைவர் பிரியதர்ஷனன்.சூரியகாந்திச் செடியின் மகரந்தச் சேர்க்கையில் தேனீக்களின் பங்கு அதிகம். சூரியகாந்தி பூக்கும் தருவாயில் மகரந்த சேர்க்கை தீவிரமாக நடைபெற்றால் அதிக மகசூல் கிடைக்கும்.

கடந்தாண்டு தென்காசி மாவட்டத்தில் சுமார் 500 ஏக்கர் பரப்பளவில், சூரியகாந்தி பயிரிடப்பட்டது. ஆனால் தேனீக்கள் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டதால், தமிழ்நாடு வேளாண்மை உழவர் நலத்துறை சார்பாக செயற்கை முறை



மகரந்த சேர்க்கையின் இரண்டு முறைகள் விவசாயிகளுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டு, அது நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால் இத்தகைய செயற்கை மகரந்தச் சேர்க்கை முறைகள் போதுமான பலனைத் தராது, பயிர்களின் மகசூல், தரம் மற்றும் ஊட்டச்சத்துக்கள் குறையும் என்றும், பல்லுயிரிய சூழலியல் முறைமைக்கும் (Biodiversity) அது பெரிதாக பயனளிக்காது என்கிறார் முனைவர் பிரியதர்ஷனன்.

"சில பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகளின் பயன்பாடு தேனீக்களை நேரடியாக கொல்லலாம் அல்லது அவற்றைக் கடுமையாக பலவீனப்படுத்தலாம். என்னைக் கேட்டால் தேனீக்களின் அழிவுக்கு அவைதான் முக்கிய காரணம் என்று சொல்வேன்" என்கிறார் முனைவர் பிரியதர்ஷனன்.

தேனீக்களின் வாழ்விடங்களில் மாற்றம்

"தேனீக்கள் விளைநிலங்களையும் பூக்களையும் தேடிச் செல்வது உணவுக்காகவும், மகரந்தச் சேர்க்கைக்காகவும் தான். விவசாய நிலங்கள் அழிக்கப்படும்போது அவை உணவின்றி அழிவைச் சந்திக்கின்றன. தேனீக்களில் காட்டுத் தேனீ வகைகள் தான் அதிகம். சாதாரண தேனீக்களைப் போல அல்லாமல், காட்டுத் தேனீக்களுக்கு மிகப்பெரிய வாழ்விடம் தேவைப்படுகிறது. காடுகள், மரங்கள் அழிக்கப்படும்போது, அவை கூடுகள் கட்டும், உணவு சேகரிக்கும் பகுதிகளும் சேர்ந்தே அழிகின்றன. வெளிநாடுகளில் தேனீக்களுக்கு என்றே நகரங்களில் கூட மகரந்தப் பாதைகள், பூங்காக்களை உருவாக்குகிறார்கள். அதேபோல இங்கும் கொண்டுவரப்பட வேண்டும். கிராமங்களில் இருக்கும் சிறு வனங்களைப் பாதுகாக்க வேண்டும்" என்று கூறினார் முனைவர் பிரியதர்ஷனன்.

'தேனீக்கள் சூழ் உலகு'

தேனீக்களின் எண்ணிக்கை குறைந்தால் அதனால் முதலில் நேரடியாகப் பாதிக்கப்படுவது மனிதர்கள் தான் என எச்சரிக்கிறார் கட்டுரையாளர், காட்டுயிர் ஒளிப்படக் கலைஞர் ஏ.சண்முகானந்தம். "இந்த உலகில் மனிதர்கள் தோன்றுவதற்குப் பல கோடி ஆண்டுகளுக்கு முன்பாகவே பரிணமித்து வாழ்ந்து வருபவை பூச்சிகள். இதை மனித இனம் உணர்ந்துகொண்டு, இயற்கையோடு இயைந்த வாழ்வை மேற்கொள்ளும்போது தான் 'நீடித்த நிலையான வளர்ச்சி' சாத்தியப்படும். பூச்சிகள் மற்றும் தேனீக்கள் சூழ் உலகை உருவாக்க நம்மைச் சுற்றியுள்ள காடுகள், மரங்கள், தாவரங்கள் அடங்கிய பசுமை பரப்பை அழிக்காமல் பாதுகாக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். அதை உணர்ந்து நாம் செயல்பட வேண்டும்" என்று கூறுகிறார் அவர்.




## அதிகரித்து வரும் மாரடைப்பு அபாயம்

இன்றைய நாட்களில் இளம் வயதினரும் மாரடைப்பினால் உயிரிழக்கும் அபாயகரமான சம்பவங்கள் நிறைவே நடைபெற்று வருகிறது. தமிழகத்தில் மாரடைப்பு அபாயம் குறித்து தமிழக பொது சுகாதார இயக்குநரகம் தரப்பிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வில் அதிர்ச்சி மிகுந்த தகவல்கள் தெரியவந்துள்ளன.

உலக சுகாதார நிறுவனத்தின் ஆபத்தான முன்னறிவிப்பு அட்டவணை அடிப்படையில் திருச்சியிலுள்ள ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு வந்த 1,260 பேரை ஆய்வுக்கு உட்படுத்தி அவர்களுக்கு மாரடைப்பு ஏற்படும் அபாயம் குறித்து மருத்துவ குழுவினர் ஆய்வு செய்துள்ளனர்.

இவை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களின் வயது, பாலினம், ரத்த அழுத்தம், புகைபிடிக்கும் பழக்கம், மொத்த கொழுப்பின் அளவு, சர்க்கரை நோயின் தாக்கம் இருக்கிறதா இல்லையா என்பது உள்ளிட்ட பல்வேறு அம்சங்களின் அடிப்படையில் 10 ஆண்டு காலத்தில் இதய நோய் வருவதற்கான சாத்தியக்கூறுகளை இவை குறிக்கினறன. இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட 1,260 பேரில் 63 சதவீதத்தினர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களில் பெரும்பாலானோரின் வயது 40 முதல் 44 வரை ஆகும்.

ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களின் 60 சதவீதத்தினருக்கு இதய நோய் வருவதற்கு, உடல் பருமன் முக்கிய காரணியாக அமைந்துள்ளது. உடல் கொழுப்பு அதிகமாக உள்ளதும் ஒரு முக்கிய காரணியாகும். எச்.டி.எல் என்னும் நல்ல கொழுப்பு 10 சதவீதத்தினருக்கு அதிகமாகவுள்ளது. எல்.டி.எல் என்னும் கெட்ட கொழுப்பு 29.6 சதவீதத்தினருக்கு உள்ளது. 5 சதவீதத்தினருக்கு புகைப்பிடித்தல், இதய பிரச்னைகளுடன் தொடர்புடையவை என்று தெரியவந்துள்ளது.

— 20% ஏற்கெனவே நீரிழிவு நோய் என கண்டறியப்பட்டுள்ளது.

— 39% உயர் ரத்த அழுத்தம் உள்ளது.

— 17% ரத்த அழுத்தம் முதல் நிலையில் குறிப்பாக 130/139 அல்லது 80/89 என்ற அளவில் உள்ளது.

— 5% உயர் ரத்த அழுத்தம் இருக்கிறது இவர்களின் ரத்த அழுத்த அளவு 140 அல்லது அதற்கும் அதிகம். அல்லது 90 அதற்கும் அதிகம் என்ற அளவில் உள்ளது.

இந்த புள்ளிவிவரங்களிலிருந்து, அடுத்த 10 ஆண்டுகளில் இதய நோய் வருவதற்கான குறைந்த






அபாயம் 76%—னருக்கும், மிதமான அபாயம் 23 சதவீதத்தினருக்கும், 1சதவீதத்தினருக்கு அதிக அபாயமும் உள்ளது தெரிய வந்துள்ளது. இது முழுக்க முழுக்க உலக சுகாதார நிறுவனத்தின் ஆபத்து மற்றும் முன்னறிவிப்பு அட்டவணை அடிப்படையிலானது. இதன் முக்கிய அம்சம் 10 ஆண்டுகளில் 100 பேரில் ஒருவருக்கு மாரடைப்பு வரும் ஆபத்து அதிகமாக இருக்கிறது என்பதுதான்.

இந்த தரவுகள் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட பிற ஆய்வுகளின் தரவுகளுடன் சரியாக ஒத்துப்போகிறது என்பது தெரியவந்துள்ளது. உலக சுகாதார நிறுவனத்தின் ஆபத்து மற்றும் முன்னறிவிப்பு அட்டவணையை இதய நோய்களை கணிப்பதற்கு பயன்படுத்த முடியும் என மருத்துவ நிபுனர்கள் கூறுகின்றனர்.


குறிப்பாக தமிழ்நாடு அரசின் மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் நோயாளிகளிடம் பயன்படுத்தலாம் என்றும் இயக்குநரகம் தெரிவித்துள்ளது. குறிப்பாக இந்த ஆய்வின்

## ஜவி. நாகராஜன்

முடிவில் வெளிவந்துள்ள முக்கிய தகவலின்படி தமிழ்நாட்டில் மட்டும் 100 பேரில் ஒருவருக்கு இதய நோய் அல்லது பக்கவாத நோய் வரும் ஆபத்து உள்ளது. இது மனித உயிரிழப்புகள் நேராமல் அமைவதற்கு இந்த ஆய்வு முடிவுகள் பயன்படலாம்.

அதிக கொழுப்புள்ள உணவுகளை, எண்ணெயில் பொரித்த உணவுகளை தவிர்ப்பது நல்லது; பச்சைக்காய்கறிகள், கீரை வகைகள் அதிகமாக எடுத்துக்கொள்ளலாம். அசைவப் பிரியர்கள் கடல் மீன் சாப்பிடலாம். 25 வயதை கடந்துவிட்டாலே, குறிப்பிட்ட கால இடைவெளியில் ரத்த சர்க்கரை, ரத்த கொழுப்பு பரிசோதனை செய்து கொள்வது அவசியம்.

சர்க்கரை நோயாளிகள் மருத்துவரை






அணுகி அவர்களுக்கென பிரத்யேக உணவு அட்டவணையைப் பெற்று பின்பற்றலாம்.

குடும்பத்தில் யாருக்கேனும் மாரடைப்பு, இதய நோய் வந்திருந்தால் மற்றவர்கள் கவனமாக இருக்க வேண்டும். ஐம்பது வயது நிரம்பியவர்கள் தினமும் காலையில் அல்லது மாலையில் 40 நிமிடங்கள் காற்றோட்டமான வெளியிடங்களில், கடற்கரையில், பூங்காவில் நடைப்பயிற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். உடற்பயிற்சியை பொறுத்தமட்டில், அவரவரின் குடும்ப மருத்துவர் ஆலோசனையின் பேரில் மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, மது, சிகரெட் பழக்கம் முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்.

வழக்கத்திற்கு மாறாக திடீரென இதயத் துடிப்பு வேகமாகிறது என்றால், அதற்கு இரும்புச் சத்து குறைபாடுதான் காரணம். ஏனெனில் ரத்ததில் ஹீமோகுளோபின் அளவு குறைவாக இருந்தால் இதயம் ஆக்ஸிஜனை வெளியிட கூடுதலாக வேலை செய்யும். எனவே இதை அலட்சியமாக எடுத்துக்கொள்ளாதீர்கள் எனவும் மருத்துவக் குழுவினர் எச்சரிக்கின்றனர்.


ஆண்களைப் போலவே, பெண்களுக்கும் மாரடைப்பு ஏற்படுவதற்கான பொதுவான அறிகுறி மந்தமான, கடுமையான மார்பு வலி. ஆனால் பெண்களுக்கு வயிற்றில் ஏற்படும் அசௌகரியம், உடல்நிலை சரியில்லாமல் இருப்பது மற்றும் வாந்தி போன்ற பொதுவான அறிகுறிகள் இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் இருந்தால் அதையும் அலட்சியமான கண்ணோட்டத்தில் அணுக வேண்டாமென்று எச்சரிக்கப்படுகிறது.

வேளைக்கு உணவு, 6 மணி நேரம் முதல் 8 மணி நேரம் நல்ல தூக்கம், நடைப்பயிற்சி, இதமான மனநிலை என வாழ்க்கையை அனுபவித்துப் பழகுங்கள். இவ்வாறான வாழ்க்கை வழிமுறைகளைத்தான் ஆய்வுக்குழுவில் இடம்பெற்ற மருத்துவ நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர்.

மன அழுத்தம், பயம், சோர்வு போன்ற உபாதைகளில் மனம் பெரிதும் பாதிக்கப்படுவதால், உடல் உட்புற சுரப்பிகளின் தாறுமாறான சுரப்பினால் நீங்கள் குறிப்பிடும் வகையில் ரத்த நாளங்களில் தடிப்பு, அதன் காரணமாக ரத்த ஓட்ட பாதிப்பு, அதிக கொழுப்பு, மயக்கம் போன்றவை ஒன்றன்பின் ஒன்றாக ஏற்படத் தொடங்குகின்றன.

வேலையைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். அதே சமயத்தில் நீங்கள் குறிப்பிடும் உபாதைகள் தாக்காமலுமிருக்க வேண்டும் என்று நீங்கள் நினைத்தால், அதற்கு அலுவலகத்தில் அருகிலமர்ந்து வேலை செய்யக் கூடியவர்களை நண்பர்களாக்கிக் கொண்டு, நீங்கள் செய்யும் வேலைகளில் சிலவற்றை அவர்கள் எடுத்துச் செய்யும்படியான திறமையானவர்களுக்குப் பகிர்ந்து, வேலையை எளிதாக்க முடியுமா என்று நீங்கள் முயற்சி செய்வது அவசியமாகும்.

மேலும், சாத்வீகமான உணவு வகைகளான பால், தயிர், மோர், தேன், நெல்லிக்காய், பச்சைக்காய்கறிகள், கீரைகள், பழங்கள்




போன்றவற்றை மட்டுமே தேர்ந்தெடுத்துச் சாப்பிட வேண்டியதும் அவசியமாகும்.

புலால் உணவு, உடல் சூட்டை அதிகப்படுத்தும் பட்டை, சோம்பு, கரம் மசாலா போன்றவை விலக்கத் தக்கவை.

வீட்டில் சண்டைச் சச்சரவு ஏற்படாத வகையில் அன்பான, அமைதியான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொள்வதும் தேவையான தருணமாகும்.

குடம்புளி, மருதம்பட்டை, திராட்சை விதை அரைத்து எடுக்கப்பட்ட சாறு, சூரியகாந்திப் பூ,

ஆளிவிதை, மஞ்சட்டி, பூண்டு, கருங்காலிக் கட்டை, மிளகு போன்ற மூலிகைகள் சேர்த்துத் தயாரிக்கப்

படும் மருந்து, ரத்தக் கொழுப்பு உபாதை, உட்புற நாளங்களில் ஏற்படும் சேதம், அதிக ரத்த அழுத்த உபாதை போன்றவற்றை நன்கு குறைத்து ஆரோக்கியத்தை மேம்படுத்தித் தரும்.

மேலும் இதய ரத்தக் குழாய்களில், பிராண வாயுவின் ஓட்டத்தை மேம்படுத்தவும், நல்ல கொழுப்பை உடலில் சீரான அளவில் சேர்ப்பதையும் உறுதி செய்யக் கூடியவை.

உடலெங்கும் ரத்த ஓட்டத்தை சீராக்குகிறது. பக்கவாதம், இதய பாதிப்புகள் ஏற்படாமல் பாதுகாக்கிறது. நீண்ட நேரம் ஒரே இடத்தில் அமர்ந்து பணியாற்றக் கூடிய நபர்களுக்கு ஏற்படும் ரத்தக் குழாய் சுருட்டல் உபாதையைக் குறைப்பதுடன், குழாய் உட்புற அடைப்பையும் சீராக்கித் தருகின்றன. தனித்தனியாக இதுபோன்ற செயலூக்கத்தைக் கொண்டிராத இம்மூலிகைகளின் சேர்க்கையால், அவைகளின் கூட்டு முயற்சியால் செய்துகாட்டுகின்றன.

அந்தக் கூட்டு முயற்சியில் அவை மேற்கொள்ளும் சுரண்டுதல், நெகிழ்வித்தல், நீராக்கி வெளியேற்றுதல் போன்ற செயல்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் நீங்கள் உணவில் சில நாட்கள் எண்ணெய் பசை இல்லாத வறண்ட உணவுகள், கசப்பு—துவர்ப்புச் சுவையுடைய கறிகள் மற்றும் கீரைகள் ஆகியவற்றைத் தேர்ந்தெடுத்து சாப்பிடுதல் நலம் தரும்.

சுக்கும் கோரைக்கிழங்கும் தட்டிப் போட்டுக் காய்ச்சிய வெந்நீரையே பருக வேண்டும்.



# நாவினால்

## வெல்லும் சொற்களில் கவனம் குவிப்போம்

சமீபத்தில் சென்னையில் மாடியில் இருந்து தவறி விழுந்து மீட்கப்பட்ட குழந்தையின் தாய் ரம்யா காரமடையில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார் என்ற செய்தி அதிர்ச்சியளித்தது. அவர் தற்கொலை செய்து கொண்டதற்கான காரணத்தை கேள்வியுற்றபோது இன்னும் அதிர்வை ஏற்படுத்தியது. குழந்தை தவறி விழுந்த சம்பவத்தில் தாயான ரம்யாவை விமர்சித்து சமூக வலைதளங்களில் பலரும் பலவிதமான கருத்துக்களை தெரிவித்ததை தாங்கிக் கொள்ள இயலாமல் மன அழுத்தத்தில் அவர் இந்த முடிவை எடுத்திருக்கலாம் என காரணம் சொல்கிறார்கள்.

கடும் வார்த்தைகளை தாங்கிக் கொள்ள இயலாமல் பரிதாபமாக ஓர் உயிர் பிரிந்துள்ளது. சமூக வலைதளங்களுக்குள்ளேயே இவர்கள் வாழ்வதால்தான் அதிலிருந்து வெளிவர இயலாமல் போனதோ எனத் தோன்றுகிறது.

முந்தைய தலைமுறை வரை கூட்டுக் குடும்ப நடைமுறை இருந்தது. வீடுகளில் பெரியவர்களை மரியாதையுடன் அழைக்கவும் அவர்கள் சொல்லுக்கு கட்டுப்படவும் பிறர் மனம் புண்படும்படி பேசாது இருக்கவும் பிள்ளைகள் இயல்பாகவே கற்றிருந்தனர். இன்றோ வீடுகளுக்குள்ளேயே வார்த்தைகளில் வன்மம் வெடிக்கிறது.

பிள்ளைகளை நெறிப்படுத்தவோ கட்டுப்படுத்தவோ பெரியவர்கள் இல்லை. அவரவர் காட்சி, அவரவர் கோலம் என்பது போல் செயல்படும் நடைமுறை

வீடுகளில் இருந்து துவங்கி சமூக ஊடகங்கள் வரை நீள்கிறது. 25 வருடங்களுக்கு முன்பு வரை மக்களை திரைப்படங்கள்தான் முழுதும் ஆக்ரமித்திருந்தன. பின் தொலைக்காட்சி அந்தப் பணியை செய்தது.

தற்போது சமூக வலைதளங்கள் மக்களை முழுதாக கபளீகரம் செய்து கொண்டிருக்கின்றன. பண்டைய கால திண்ணைப் பேச்சின் நீட்சியே நவீன காலத்தின் இந்த சமூக வலைதளங்கள் எனச் சொல்லலாம். வளமான கருத்துக்களை பரிமாறிக் கொள்ளவும் மக்களை ஒன்றிணைக்கவும் தகவல் பரிமாற்றத்திற்கும் தொடக்கத்தில் சிறப்பான களமாக இத்தளங்கள் பார்க்கப்பட்டன. இணையம் பயன்பாட்டுக்கு வந்த காலத்தில் வலைப்பூ (பிளாக்) வாயிலாக மக்கள் தம் கருத்துக்களை பதிவுகள் செய்தபோது இருந்த தரம் மற்றும் சுய கட்டுப்பாடு தற்போது இல்லை. இப்படி வலைதளங்களுடன் பொழுது போக்குபவர்கள் குறைவான மனிதநேயம், மன அழுத்தம், சோர்வு போன்ற பண்புகளுடனே காணப்படுவதாக





# வடு!


பரவலாக குற்றம் சாட்டப்படுகிறது.

கூட்டிக் கழித்துப் பெருக்கி, வகுத்து என கணக்குப் போட்டுப் பேசிய காலம் போய், கணக்கு வழக்கு இல்லாமல் சமூக வலைதளங்களில் வாய் கிழிய பேசித்தள்ளுகின்றனர்.

‘ஒரு வார்த்தை வெல்லும், ஒரு வார்த்தை கொல்லும்’ என்பார்கள். இப்படியான கதைகள் இன்று நேற்றல்ல பண்டைய காலம் தொட்டு தொடர்கிறது. சிலப்பதிகாரத்தில் அரசின் சிலம்பை திருடிய கள்வன் இவன்தான் என கோவலனைப் பற்றி தவறான தகவலை அரசனுக்கு தெரிவிக்கிறான் பொற்கொல்லன். அதனை முழுமையாக ஆராயாத அரசனின் தீர்ப்பால் கோவலன் கொலை செய்யப்படுகிறான். பாண்டிய மன்னனிடம் கண்ணகி நீதி கேட்க, அதை தாங்கிக் கொள்ள இயலாமல் தாங்கள் செய்த பிழையை எண்ணி மன்னனும் கோப்பெருந்தேவியும் உயிர் பிரிந்த கதை நாம் அறிந்ததே. அன்று முதல் இன்று வரை மனிதர்கள் மாறவில்லை. சுடுசொற்களை தாங்கிக் கொள்ள பலராலும் இயலுவதில்லை.


பவித்ரா நந்தகுமார்

‘சுட்ட பழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா’ என வார்த்தைகளால் சாமர்த்தியம் காட்டிய இனம் நமது. இதுதான் வெல்லும் சொல். ஔவையின் உள்ளத்தையே வென்ற சொல். நாம் பேசும் வார்த்தைகள்தான் நம் பண்புநலனை, வெற்றியை தீர்மானிக்கிறது. அதனால் பேசுவதில் கவனம் வேண்டும். எதையோ சொல்ல வந்து வேறொன்றாக சொல்லி முடித்து, பின் தர்மசங்கடமான சூழலில் சிக்கி நின்ற தருணங்களை கடந்த பின்தான் நாமும் பல பாடங்கள் கற்றிருப்போம்.




ஒரு சொல் ஏற்படுத்திய கோபம் அழியாத சோகமாக உருமாறி போன வரலாறு துரதிருஷ்டவசமானது. இரண்டாம் உலகப் போர் மூண்ட நேரத்தில் ஜப்பானிடையேயான பிரச்னை தொடர்பாக அமெரிக்க அரசு ஒரு கடிதம் எழுதியதாம். ஜப்பானிருக்கு தாய்மொழியில் மட்டுமே நல்ல புலமை உண்டு. ஆங்கிலத்தில் அந்த காலத்தில் அத்தனை புலமை கிடையாது.

அந்தக் கடிதத்தைப்




படித்துவிட்டு ஜப்பானிய மொழியில் அதற்கான பதில் கடிதம் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டதாம். அந்தக் கடிதத்தில், 'உங்கள் கோரிக்கையை பரிசீலிக்கிறோம்' என்று ஜப்பானிய மொழியில் எழுதப்பட்டிருந்ததாம். ஆனால் அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து தந்த மொழிபெயர்ப்பாளர் 'உங்கள் கோரிக்கையை நிராகரிக்கிறோம்' என்று தவறுதலாக மொழிபெயர்த்து அமெரிக்காவிடம் அனுப்பிவிட்டதாக சொல்லப்படுகிறது. அதன் விளைவு எவ்வளவு பெரிய பாதிப்பை ஜப்பானுக்கு ஏற்படுத்திவிட்டது என்பதை நாம் அறிவோம். அந்த ஒரே ஒரு வார்த்தை, கொல்லும் சொல்லாக மாறி இரண்டாம் உலகப் போரில் பல லட்சக்கணக்கான மக்கள் உயிரிழப்புக்கு வழி வகுத்துவிட்டது.

சொல்ல வந்ததை அழகாக சொல்வது ஒரு கலை. நினைக்கும் எண்ணங்களை எல்லாம் பேசாமல் அதை செம்மைப்படுத்தி கவனமுடன் பேசினால் வார்த்தைகளைப் போல வாழ்க்கையும் அழகாகும்.


அலெக்சாண்டரிடம் போரஸ் மன்னன் பேசியது இப்படித்தான். அலெக்சாண்டர் இந்தியா மீது படை எடுத்து வந்தபோது போரஸ் மன்னன் ஆண்ட பகுதிகள் மீதும் போர் தொடுத்து வெற்றி பெற்றார். அத்தோடு நிற்காமல் வீரர்களோடு போரஸ் மன்னனையும் சேர்த்து சிறைபிடித்துச் சென்றார். சிறையில் இருக்கும் போரஸ் மன்னனை பார்த்த அலெக்ஸாண்டர், 'இப்போது நீ என் அடிமை. மன்னனாகிய உன்னை மற்ற கைதிகள் போல நடத்துகிறேன் என நீ நினைக்கலாம். அதனால் உன்னை எப்படி நடத்த வேண்டும் என்பதை நீயே சொல் பார்க்கலாம்' என ஆணவத்துடன் கேட்டார்.

'நான் ஒரு நாட்டின் மன்னன். என்னை ஒரு மன்னனை போல நீங்கள் நடத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன் என்று துணிந்து அலெக்சாண்டரிடம் பேசினார் போரஸ்.

இத்துணிச்சலான பேச்சு அலெக்ஸாண்டரின் மனதை மாற்றியதால் ஒரு மாவீரன் இருக்க வேண்டிய இடம் இதுவல்ல என்று கூறி நாட்டை அவரிடமே திரும்ப ஒப்படைத்தாராம் அலெக்சாண்டர். யாரும் எதிர்பாராத மிகப் பெரிய மாற்றம் இது.

வார்த்தைகளால் வைத்தியம் பார்க்கும் நபர்களிடம் எல்லோருமே நெருக்கம் காட்டுவர். ஒருவர் எரிந்து விழுவார் என அறிந்தால், தூர விலகி ஓடுவோம். வாளைவிட எழுத்துக்கு கூர்மை உண்டு. எழுத்தைவிட பேசும் சொற்களுக்கு வலிமை உண்டு.

வாட்ஸ்அப்பில் வந்து விழும் நூறு செய்திகளில், நல்ல செய்திகள் நான்கு இருக்கத்தான்



செய்கின்றன. அப்படி படிக்க நேர்ந்த செய்தி, ஒரு தேநீர் கடையில் எழுதப்பட்டிருந்த வாசகம் தேநீரைவிடவும் சூடாக இருந்தது. 'இருவடை எடுத்து ஒருவடை என்பார் திருவோடு ஏந்தி தெருவோடு போவார்' என்பது. தேநீர் அருந்தும் நேரத்தில் தட்டில் இருக்கும் வடைகளில் இரண்டை எடுத்துண்டுவிட்டு, ஒரு வடைக்கு காசு கொடுப்போரை கண்டிப்பதற்காக எழுதப்பட்ட வாசகம் இது. சுவாரசியமாக இருக்கிறது என்றாலும் வடை உண்ணும் எல்லோருக்கும் இது ஒருவித சங்கடத்தை ஏற்படுத்தும்.

ஒரு ஆட்டோவில் எழுதப்பட்ட வாசகம்— 'உங்களின் வழிச் செலவு எங்களின் வாழ்க்கைச் செலவு' என்பது. இந்த வாசகம் ஆட்டோவிலிருந்து இறங்கியபின் யாரையும் அதிக பேரம் பேச விடாது. 'மீட்டருக்கு மேல பத்து ரூபா போட்டுக் குடுங்க' என்பதற்கும் இந்த வாக்கியத்துக்கும் உணர்வு ரீதியாக வித்தியாசம் இருக்கத்தானே செய்கிறது.





நவீன காலங்களில் கூட நளினமான வார்த்தைகளுக்குப் பஞ்சம் இல்லை. நகைக்கடை ஒன்றில், 'நீங்கள் கண்காணிக்கப்படுகிறீர்கள். கவனமாக இருக்கவும்' என்ற பதாகை ஏற்படுத்தும் ஒருவித அச்ச உணர்வு, 'புன்னகையுங்கள், நீங்கள் பதியப்படுகிறீர்கள்' என்ற வார்த்தை கோர்வையின் மாறுபாட்டால் மாறிப் போகிறது. இந்த இரண்டு வாக்கியங்களும் ஒரே செய்தியைச் சொன்னாலும் சொல்லப்பட்ட விதம் வித்தியாசப்படுகிறது அல்லவா!

சொற்களின் கனம் தாளாமல் வாழ்க்கையே சீர்கெட்டுப் போன பல கதைகளை கடந்து சென்று கொண்டுதான் இருக்கிறோம்.

சொற்கள் சில உறவுகளை ஆயுள் வரை பிரித்தே வைத்திருக்கின்றன. எதிர்மறை வார்த்தைகள் என்பது முட்செடி போன்றது. நாம் அவற்றைப் பயன்படுத்தவே உள்ளுக்குள் வளர்ந்து நம்மையே குத்திக்கிழித்து காயப்படுத்திவிடும். ஆனால் அனைவருக்கும் நலம் தரும் சிறப்பான வார்த்தைகள் துளசி செடி போன்றது. நாம் உபயோகிக்க, உபயோகிக்க உள்ளுக்குள் வளர்ந்து நம்மை சுத்தப்படுத்தி பிறருக்கும் நல்மணம் பரப்பும்.

உலகம் போற்றும் காவியங்களும் காப்பியங்களும் சொற்களின் இது போன்ற கலவைதான். அதிலிருந்து நாம் அறிவது ஏராளம். சொல்லின் செல்வரான அனுமன், ராமனின் தவிப்பைத் தீர்க்கும் வகையில் 'கண்டேன் சீதையை' என்று துவங்குவார். அந்தப் பண்பு உலக மக்கள் அனைவருக்கும் வாய்க்கப் பெறும்போது பல நாடுகளில் படிந்துள்ள போர் சூழல்கள் கூட மாறும்.




'யாகாவாராயினும் நாகாக்க' என்னும் குறள் இன்றும் நமக்குப் பாதை காட்டும் மார்க்கமாக இருக்கிறது. பேசும் வார்த்தைகள் கட்டுப்பாட்டுடன் இருப்பது பொறுமையை கற்றுக்கொடுப்பதுடன் எதிர்காலத்திற்கும் நன்மை பயக்கும். இந்தப் பண்பு ஒவ்வொரு வீட்டிலிருந்து துவங்கும்போது சமூக வலைதளங்கள் வரை அது நிச்சயம் பிரதிபலிக்கும்.

# தமிழ் 2024

நற்றமிழரின் நாடித்துடிப்பு

## JANUARY




## FEBRUARY




## MARCH




## APRIL




## MAY




## JUNE




## JULY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

## AUGUST

| | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

## SEPTEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

## OCTOBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

## NOVEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |


## DECEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com

**Email: editor@ithamil.com**




VARSHA™
IDLI/DOSA BATTER
Eat Fresh!
Eat the Best!!!
VARSHA
1Kg
Traditional taste that Lingers
VARSHA
VARSHA